
# அல் - Fபலாஹ்




## மஜ்லிஸுல் இஸ்லாம்

தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
## வவுனியா.

# அல் - ப்[F]லாஹ்

## 2012

மஜ்லிஸுல் இஸ்லாம்
தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் விபர அட்டவணை

| | | |
|---|---|---|
| மலர் | : | அல் – ஃபலாஹ் |
| வெளியீடு | : | இஸ்லாம் மலர்க்குழு – 2012<br>வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி |
| பதிப்பு ஆண்டு | : | 2012 |
| பக்க அளவு | : | A5 |
| பக்கம் | : | 94 |
| பிரதிகள் | : | 500 |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | : | அல் – ஹாஜ் S.சஹாப்தீன் |
| அச்சுப்பதிப்பு | : | வாணி கணினிப் பதிப்பகம்<br>இல.79, கந்தசாமி கோவில் வீதி,<br>வவுனியா.<br>024 22223658 |

## மலர்க் குழு

01. C.M.முஹம்மது ஸமீர்
02. A.A.M.பஸாஹீர்
03. S.றிபான்
04. M.R.M.பஸீர்
05. S.M.முபாரக்
06. M.N.A.மப்ராஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆசிச் செய்தி | 05 - 17 |
| 2. | குர்ஆனிய ஒளியில் மானிட அபிவிருத்தி | 17 - 19 |
| 3. | போதைப்பொருள் பாவனை | 20 - 21 |
| 4. | பெண்களுக்கு ஹிஜாப் (பர்தா) ஏன் அவசியம் | 22 - 24 |
| 5. | இஸ்லாமியப் பார்வையும் நவீன கண்டுபிடிப்புக்களும் | 25 - 26 |
| 6. | இணையமும் இஸ்லாமும் | 27 - 29 |
| 7. | இம்மை மறுமையின் விளைநிலம் | 30 - 31 |
| 8. | எச்சில் கூட புனிதமே | 32 |
| 9. | உண்மையாளர் அபூபக்கர் (ரலி) | 33 - 34 |
| 10. | நபி (ஸல்) தந்த மார்க்கம் | 35 |
| 11. | நவயுக நாகரிகம் | 36 |
| 12. | றமழான் | 37 - 38 |
| 13. | எங்கள் இஸ்லாம் | 49 -40 |
| 14. | கல்வியைப் பற்றி நபிகளாரின் பொன்மொழிகள் | 41 |
| 15. | இஸ்லாத்தில் கல்வியின் மகிமை | 42 |
| 16. | பெருமானார் (ஸல்) அவர்களின் அறிவுரைகள் சில... | 43 |
| 17. | தொழுகையின் முக்கியத்துவம் | 44 - 45 |
| 18. | புறம் பேசுவதன் விபரீதங்கள் | 46 - 49 |
| 19. | சகோதரத்துவம் | 50 - 51 |
| 20. | பள்ளிவாசலின் சிறப்புகளும் ஆற்றவேண்டிய அமல்களும் (நன்மைகளும்) | 52 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. சஜதாவின் மகத்துவம் 53 - 54
22. இஸ்லாமிய ஆதாரங்கள் 55 - 56
23. பெண்களின் ஆடை 57 - 59
24. கவலையும் துக்கமும் ஆட்கொள்ளும் போது.... 60
25. மகிழ்ச்சியான வேளைகளில்.... 61 - 62
26. இஸ்லாம் கூறும் ஜீவகாருண்யம் 63 - 64
27. இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள் தொழில் புரிதல் 65 - 66
28. மறுமை வாழ்வு 67 - 68
29. பொறுமை 70 - 72
30. சகோதரிக்கு ஓர் ஈமெயில்.... 73 - 74
31. சிறப்பான ஸக்காத் 75
32. சீ ! தனம் 76
33. தாயின் காலடியில் சுவர்க்கம் 77
34. மரணம் அழைக்கிறது 78
35. சுவனப் பாதையில் 79 - 80
36. கல்வியே கண் 81
37. ஒன்றுபடுவோம் உறுதிகொள்வோம் 82
38. வாய்ச் சொல்லில் வீரரடி.... 83
39. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பற்றிய பிற மத அறிஞர்களின் கருத்துக்கள் 84 - 85
40. நோன்பு தரும் மாண்பு 86
41. முஸ்லீம் ஆசிரிய மாணவர்கள் விபரம் 87 - 90
42. நன்றியுரை 91



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம ஆணையாளர்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முஸ்லிம் மஜ்லிஸுல் இஸ்லாமிய மன்றத்தினரால் வெளியிடப்படும் அல் - ஃபலாஹ் எனும் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் அகம் மலர்கின்றேன்.

புத்தாக்கத்திறனுக்கு முன்னுரிமை வழங்கி எதிர்கால சமூகத்துக்கு வான்மைத்துவமிக்க ஆசிரியரை உருவாக்குவதில் முதன்மையாக விளங்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியானது பல்லினச் சமூகத்தவரைக் கொண்ட ஒரு கூட்டு மத, கலாசார, பண்பாடுகளை மதித்து அவற்றைப் பேணிப் பாதுகாத்து நல்லிணக்கத்தை வளர்க்கும் ஒரு நிறுவனமாக இக் கல்லூரி விளங்குகின்றது.

அவ்வகையிலே முஸ்லிம் மஜ்லிஸினால் வெளியிடப்படும் அல் - ஃபலாஹ் எனும் மலரானது சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவ்வாறான மலருக்கு எனது பாராட்டுக்களை வழங்குவதோடு இம்மலரினை ஆக்குவதற்கு அனுமதி வழங்கிய கல்லூரியின் பீடாதிபதி திரு.க.பேர்னாட் அவர்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய 'முஸ்லிம் மஜ்லிஸ்' மன்றப்போசகர் முன்னாள் உப பீடாதிபதி ஜனாப்.செ.சஹாப்தின் அவர்களுக்கும், இம் மலரினை ஆக்க பாடுபட்ட மலர்க் குழுவினருக்கும் எனது பாராட்டினை வழங்குகின்றேன்.

மேலும் இம் மலருக்கு ஆசியுரை வழங்க வாய்ப்பளித்த பீடாதிபதிக்கும், முஸ்லிம் மஜ்லிஸ் போசகருக்கும், உபபீடாதிபதிகளுக்கும், விரிவுரையாளர் இணைப்பாளர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், மலர்க்குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**W.P.R.Silva**
Cheif Commissiner (Teacher Education) (Acting)
Ministry of Education
Isurupaya,
Battaramulla.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பீடாதிபதியின் ஆசிகள்

சமயங்கள் மனித நடத்தைகளை செம்மைப்படுத்துகின்றன. அதிலும் இஸ்லாம் மார்க்கமும் செம்மையான மனித நடத்தைகளுக்கான வழிமுறைகளை காட்டி நிற்கின்றது. சமய விழுமியங்களை வெளிப்படுத்துவதற்காக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் "முஸ்லிம் மஜ்லிஸ்" தன்னாலான பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. இம் முயற்சியின் வழியில் முஸ்லிம் மஜ்லிஸில் இவ்வாண்டும் வெளியிட விருக்கின்ற "அல் ஃபலாஹ்" சஞ்சிகை குறித்து எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

தேசிய கல்வியியற் கல்லூரி என்ற வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய ரீதியாக எந்த வேறுபாடுமின்றி மாணவர்கள் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படுவதுண்டு. அந்த வகையில் இங்கு இஸ்லாமிய மாணவ ஆசிரியர்களுக்கும் பயிற்சி பெறும் வாய்ப்பு இருந்து வருகிறது. கல்லூரியின் ஆரம்ப காலத்தில் இரண்டு இஸ்லாமிய மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்பெற்று இன்று அவர்களின் தொகை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

முதலாவது தொகுதியிலிருந்த இரண்டு இஸ்லாமிய மாணவ ஆசிரியர்களால் முதன் முதலில் வெளியிடப்பட்ட அல் ஃபலாஹ் சஞ்சிகை இன்று மூன்றாவது தடவையாக வெளிவருகின்றது. அல் ஃபலாஹ் காலத்துக்கு காலம் வருகின்ற சஞ்சிகையாக அல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் சஞ்சிகையாக தொடர்ச்சியாக வெளிவர வேண்டும். இஸ்லாமிய மாணவர்களின் அனுமதித்தொகை அதிகரித்து வருகின்ற நிலையில் இது சாத்தியமானதுமாகும்.

முஸ்லிம்களின் கலை கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய, ஏனைய சமூகத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தும் களமாக அல் ஃபலாஹ் அமைகிறது.

இம் முயற்சியில் ஈடுபட்டு முஸ்லிம் மஜ்ஜிலிஸ் சகல உறுப்பினர்களுக்கும், போசகருக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

- நன்றி -

**க.பேர்ணாட்**
பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**வ**வுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் அதிகளவு இஸ்லாமியப் பிள்ளைகள் கற்கிற காரணத்தால் **"இஸ்லாமியக் கலைவிழாவும், நூல் வெளியீடும்"** என்ற நிகழ்வு நடைபெறுவது சாலப் பொருத்தமானது; பாராட்டத்தக்கதுமாகும்.

இன்றைய நிலைமையில் மாணவர்களது ஒழுக்கம் சார்ந்த விழுமியப் பண்புகளை வளர்க்க இஸ்லாம் அவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டுகிறது. அடுத்த தலைமுறை உலகியல் வாழ்வில் எவ்வளவுக்கு சமயம் சார்ந்து வாழும் என்கின்ற வினா எம்முன் பூதாகாரமாக எழுகிறது.

மனித மாண்புகள் மேம்பட சமயவாழ்க்கை அவசியமானது. தற்கால மாணவர்கள் பொழுதுபோக்கு என்ற பெயரில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் கேளிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பேற்படுகிறது. அதனால் தானோ? என்னவோ? இஸ்லாமியர்கள் ஒரு நாளுக்கு ஐந்து வேளை தொழுவது கண்டிப்பாக காணப்படுகிறது.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து "சுfபஹு" தொழுகை செய்யும் போது ஒருவரது உடலும், உளமும் அன்றைய தினத்தின் வாழ்க்கைக்கு தயார்ப்படுத்தப்படுகிறது. நாள்முழுவதும் தொழுகையும், தன்னுடைய வேலைகளும் என்றநிலைக்கு ஆட்படுகின்ற ஒருவர் தீமையான காரியங்கள் பற்றிச் சிந்திக்க முடியாதிருப்பான். இதனாலேயே எம்முன்னோர்கள் "வைகறையில் துயிலெழு" என்று கூறுவர்.

உடல் ஆரோக்கியமாகவும், உளம் ஆனந்தமாகவும் இருந்தால் அதுவே வாழ்க்கையின் வெற்றியாகும். எனவே முஸ்லிம் மஜ்லிஸினால் நடாத்தவிருக்கும் கலைவிழாவினையும் அன்றைய தினம் வெளிவர இருக்கும் அல்-fபலாஹ் நூல் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**கு.சிதம்பரநாதன்**
**உபபீடாதிபதி**
**கல்வியும் தரமேம்பாடும்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**எ**மது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முஸ்லிம் மஜ்லிஸினால் வெளியிடப்படவிருக்கும் அல் ’பலாஹ் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது முன்னாள் உபபீடாதிபதி ஜனாப் எஸ்.சஹாப்தீன் அவர்களின் வழிகாட்டலில் கல்லூரி தொடங்கிய காலம் முதல் மிகவும் காத்திரமாக வளர்ந்து வரும் முஸ்லிம் மஜ்லிலிஸ் எமது பீடாதிபதி திரு.க.பேர்ணாட் அவர்களின் பேரன்பைப் பெற்ற மன்றமாகும்.

முஸ்லிம் மஜ்லிஸினால் நடாத்தவிருக்கும் இஸ்லாமிய கலைவிழா எமது கல்லூரிக்கு ஒரு புது ஆக்கமாகவும், மாணவ ஆசிரியர்களின் வாண்மைத்துவவிருத்தி முயற்சியின் ஒரு மைல் கல்லாகவும் அமைகின்றது.

வாழ்க்கையின் தத்துவங்களை வெளிக்காட்டும் வாழும் சமயமான இஸ்லாத்தின் அரிய கருத்துக்களை எல்லோரும் பகிர்ந்து கொள்ள இஸ்லாமிய கலைவிழா ஒரு களமாக அமையுமென்பது எனது உயரிய எதிர்பார்ப்பாகும்.


இந்து மாநாடு, கிறிஸ்தவ மாநாடு என்ற வரிசையில் தொடரும் இஸ்லாமிய கலைவிழா எமது கல்லூரியின் இனத்துவ, மத புரிந்துணர்வுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது என்பது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இம் முயற்சியில் கைகோர்த்த இஸ்லாம் மஜ்லிஸ் அங்கத்தவர்களுக்கும் அதன் போசகர் ஜனாப் எஸ்.சஹாப்தீன் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இதழாசிரியர் C.M.M.சமீர் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.சுவர்ணராஜா**
**உபபீடாதிபதி**
**நிதி நிர்வாகம்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**"உலோகாயித, கலாசார, சமயக்கல்வியோடு தம்மை முற்றிலும் இணைத்துக் கொண்டு தமது பலம் முழுவதையும் விருத்தி செய்து பூரண ஆளுமை பொருந்தியவனாக அம்மனிதன் இருப்பான். இவ்வாறு பெறப்பட்ட பூரண ஆளுமையினை மென்மேலும் நேரடி அனுபவ வழியில் இணைத்து அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணம் செய்வான்"**

**- (அல்லாமா சேர் முகமது இக்பால்)**

**க**ல்வி என்பது வெறும் போதனையாக மாத்திரம் அமையாது மனிதனின் உடல், உள வளர்ச்சிக்கும், நிஜ வாழ்க்கை விருத்திக்கும் ஆன்மீக உயர்விற்கும் உறுதுணையாக அமைய வேண்டுமென்பது மதங்களின் எதிர்பார்ப்பாகும்.

ஒவ்வொரு மனிதனும் அக உரையாடலிலும், புற உரையாடலிலும் ஈடுபடுகின்றான். இவ் உரையாடலே அவனின் செயலாற்றுகைகள், வெளிப்படுத்தல்களுக்கு அடிப்படையாக அமைகிறது என்பது ஆய்வுகளின் முடிவாகும். நேர்மயமான அக உரையாடல் மகிழ்ச்சி, வளர்ச்சி, உயர்ச்சி, நம்பிக்கை போன்றவற்றை அவனில் ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் ஆன்மீகம் இவ் அக உரையாடலை நேர்மயமாக நெறிப்படுத்த உதவுகின்றது. எனலாம்.

கல்வி என்பது அரூபமானதல்ல, வாழ்வின் யதார்த்தமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதுடன், அவற்றில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்ப்பதாக அமைதல் வேண்டும். இதற்கு கல்வியும் ஆன்மீகமும் ஒன்றையொன்று போசிக்க வேண்டும்.

இவ்வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கல்விக்கும் ஆன்மீகத் தேடலுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பதில் முன்னிலை வகிக்கின்றது. அவ்வழியில் முஸ்லிம் மஜ்லிஸும் தனது பன்முக ஆன்மீகத் தேடலில் செயல்முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. அதன் வெளிப்பாடுகளின் குறிகாட்டியாக இந்நூலும் விளங்குகின்றது. இம்முயற்சியில் ஈடுபட்ட போசகர் உள்ளிட்ட அனைவரையும் வாழ்த்தி இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.சு.பரமானந்தம்**
விரிவுரையாளர் இணைப்பாளர், (கல்வியும் தர மேம்பாடும்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

**"எல்லாப் புகழும் இறைவனுக்கே"**

**ம**தங்கள் அவற்றின் பெயர்களினாலும் சம்பிரதாயங்களினாலும் வேறுபட்டவையாயினும் அவை எல்லாவற்றினதும் அடிப்படைப்பொருள் ஒன்றேயாகும். அவை எப்படி இவ்வுலகில் மனிதனாக வாழ்வது என்பதை மனிதன் என்ற விலங்குக்கு கற்றுத் தருகின்றன. இன்றைய கலி நிறைந்த உலகில் அவை மனித மனத்தை உண்மை எது என அறியவும் நிலைபேறடைவதற்குமான வழிகள் பற்றிச் சிந்திப்பதற்காக பெரும் பிரயத்தனம் செய்கின்றன.

இதற்கென பங்காற்றுவதில் இளைய மாணவர்களை வழிப்படுத்துவதில் ஈடுபடும் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியதும் இன்றியமையாததும் ஆகும். இந்தவகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முஸ்லிம் மாணவ ஆசிரியர்களின் இடையறாத பங்குபற்றலின் விளைவாக இயங்கிவரும் முஸ்லிம் மஜ்லிஸ் தமது பயிற்சிக் காலத்திலேயே முஸ்லிம் மார்க்கம் சார்ந்த பல்வேறு ஆக்கபூர்வ செயற்பாடுகளை மாணவ ஆசிரியர்களிடத்தே நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்தவகையில் மாணவ ஆசிரியர்களின் பல்வேறு ஆக்கங்களை உள்ளடக்கி "அல்-ப்லாஃஹ்" என்ற நூலை தமது ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக்காக வெளியிடுவதை நான் மிகவும் பாராட்டுகின்றேன். இந்நூலிற்கு ஆசியுரை வழங்குவதிலும் பெருமையடைகின்றேன்.

- நன்றி -

**தி.ஜெயகாண்டீபன்**
விரிவுரையாளர் இணைப்பாளர்,
(நிதி நிர்வாகம்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

எமது கல்வியியற் கல்லூரியின் 'முஸ்லிம் மஜ்லிஸினால்' வெளியிடப்படும் 'அல் - ஃபலாஹ்' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உவப்படைகின்றேன். இவை வெற்றி பெற வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

பல சமயங்கள் வாழும் சமூகத்திலே சமயம் ஒன்றின் ஆக்கபூர்வமான விடயங்கள் வெளிவருவது என்பது எல்லா சமயத்துக்கும் சுதந்திரமும், ஊக்கமும் அங்கு வழங்கப்படுகின்றது என்பது உண்மையாகும். அவ்வகையில் பல சமயங்களை உடைய எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முஸ்லிம் மஜ்லிஸினால்' வெளியிடப்படும் 'அல் - ஃபலாஹ்' மலர் இதற்கு சான்றுபகர்கின்றது. இம்மலரானது ஏனைய சமயத்தவர்களுக்கும் இஸ்லாம் பற்றிய விளக்கத்தை ஓரளவேனும் வழங்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இஸ்லாமிய கலைவிழாவும் அதனோடு கூடிய அல் - ஃபலாஹ் எனும் மலரையும் வெளியிட அனுமதி வழங்கிய மதிப்புக்குரிய கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு என்றும் எனக்கு பக்கபலமாய் அமைந்து எமது கல்லூரியின் உபபீடாதிபதிகள், விரிவுரையாளர் இணைப்பாளர்கள், கல்வியலாளர்கள் அனைவருக்கும் நூலினை வெளியிட முன் வந்த மலர்க்குழுவினருக்கும் எனது பாராட்டினையும் நன்றியையும் வழங்குகின்றேன்.

**அல்ஹாஜ்.செ.சஹாப்தீன்**
முன்னாள் உபபீடாதிபதி
(நிதி நிர்வாகம்)
மஜ்லிஸுல் இஸ்லாம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கலாசார விழா

காலம்:

23.11.2012 வெள்ளிக்கிழமை

காலை 8.00 மணி

இடம்

பல்நோக்கு மண்டபம்,

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

தலைமை

**திரு.க.பேர்ணாட்**

பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

பிரதம விருந்தினர்

**அல்ஹாஜ் மௌலவி எம்.எச்.எம்.இப்ராஹிம் (ஹாஸிமி) J.P**

பணிப்பாளர் அல்-வஸீதுல் ஹைறியா நிறுவனம், வவுனியா.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்விக்குழு செயலாளர்

சிறப்பு விருந்தினர்கள்

**திரு.கு.சிதம்பரநாதன்**

உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

**திரு.க.சுவர்ணராஜா**

உப பீடாதிபதி (நிதி நிர்வாகம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

**அல்ஹாஜ் கே.காதர் மஸ்தான்**

உரிமையாளர்

மஸ்தான் றேடர்ஸ், வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வரங்கு

## அறிஞர்.ஏ.எம்.ஏ.அஸீஸ் அரங்கு

**தொனிப்பொருள்:- இஸ்லாம் காட்டும் இலட்சிய வாழ்வு**

தலைமை

**அல்ஹாஜ் மௌலவி எஸ்.அப்துல்சமட் (கியாதி)**

**BA,Dip.MED**

உபஅதிபர், வவுனியா முஸ்லிம் தேசிய பாடசாலை

ஆய்வாளர்கள்

**அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.இஸ்மாயில் (ஸலபி) BA.Hons**

பிரதம ஆசிரியர் உண்மை உதயம், இஸ்லாமிய மாத இதழ்

**அஷ்ஷெய்க் எம்.ஜே.எம்.றிஸ்வான் (மதனி)**

விரிவுரையாளர்

அஸ்ஸலபியா கலாபீடம், பறகஹ தெனிய

**அஷ்ஷெய்க் என்.பி.ஜுனைத் (காஸிமி)**

**BA. Hons (மதனி)**

விரிவுரையாளர், அஸ்ஸலபியா கலாபீடம், பறகஹ தெனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஜ்லிஸுல் இஸ்லாம் அமைப்பின்
முதற்செயலாளர் அவர்களின்

# ஆசிச்செய்தி

வாழ்க்கை எனப்படுவது செயலே ஆனால் எல்லாச் செயல்களும் வாழ்க்கைக்குப் பொருந்தா அறிவின் வழிகாட்டுதலைப் பின்பற்றும் செயல்கள்தான் நேர்மையான வாழ்க்கையை உருவாக்குகின்றன. ஆனால் பல நேரங்களில் அறிவே வழிதவறிவிடுகின்றது. இதனால் வாழ்க்கையின் எல்லாச் செயல்களும் தவறி விடுகின்றன. எல்லாப் பண்பாடுகளும் பாழடைகின்றன. நாகரீக ஒழுக்க முறைகள் பிறந்துவிடுகின்றன. எனவே, அறிவு, கல்வி, கலை ஆகியவற்றை வழிதவறா நிலையில் வைப்பது இன்றியமையாததாகும்.

நேரடியாக அறிவை மாத்திரம் பெறுவதற்கப்பால் இவ்வாறான வெளியீடுகள், கலை நிகழ்வுகள் ஆக்கப்பூர்வமானதாக அமைகின்றபோது வாழ்வின் உயிரோட்டம் அர்த்தமுள்ளதாக அமையும். இக்கல்லூரியில் பல் மத ஆசிரியமாணவர்களும் ஒரு குடையின் கீழ் அணிசேர்ந்து சமூகத்திற்கு கருத்துக்களை வெளியிடுவதற்கு களங்களை அமைப்பது சிறப்புக்குறியது இது போன்று முயற்சிகள் தொடர எனது வாழ்த்துக்கள்

**ஏ.எம்.ஸுபைர்**
உதவிக்கல்விப்பணிப்பாளர்
(உடற்கல்வி)
வவுனியா தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவர் உரை

**வா**ழ்வியலுக்கான வளமான, நிறைவான, உறுதியான வழிகாட்டலை நல்கிய வல்ல அல்லாஹ்வைப் புகழ்கிறேன். இறை நெறியில் வாழ்ந்து அந்நெறியில் அடுத்தவரும் வாழ வழிகாட்டிய இறுதித் தூதர் உத்தம நபி முஹம்மது ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர் தம் அருமைத்தோழர்கள் மீதும் சலவாத்தும் ஸலாமும் சொல்கிறேன்.

தொடராக வரும் இந்த மலரை எவ்வித தடையுமின்றி புது உத்வேகத்துடன் வருடந்தோறும் வெளிவருவது இறைவன் எமக்களித்த அருள் எனக் கருதுகிறேன். தீனுடைய கல்வியின் அவசியத்தைப் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது, **“ஆகவே நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (வேதத்தை) அறிந்தவர்களிடம் கேட்டு(த் தெரிந்து) கொள்ளுங்கள்.”** (16.43) நாம் நமது கடமைகளை தூய நோக்கத்துடன் புரியும் போது இறைவனின் உதவியும் தொடரும்.

பல்லின கலை, கலாசார பண்பாடுகளைக் கொண்ட மாணவர்கள் பயிலுகின்ற இக்கல்லூரியில் இஸ்லாம் சமயம் பற்றிய கருத்துக்களை முஸ்லிம்களால் மட்டுமல்லாது ஏனைய சகோதர இனத்தவர்களும் ஓரளவேனும் விளங்கிக் கொள்ள முடியும் என எண்ணுகிறேன்.

இம்மலரினை வெளியிடுவதற்கு பக்கபலமாக இருந்த இக்கல்லூரியின் பீடாதிபதி, மன்ற போசகர், உபபீடாதிபதிகள், விரிவுரையாளர் இணைப்பாளர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள், என் சகமாணவ ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மலர் எதிர்கால சமூகம் பயன்பெற வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**A.C.அஹம்மது நஸாத்**
தலைவர்
மஜ்லிஸுல் இஸ்லாம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் பேனாவிலிருந்து

**"கல்விக்கு உயிர் கொடுத்தவன் என்றும் மரணிப்பதில்லை"**

**எ**னும் நபி(ஸல்) அவர்களின் பொன்மொழியை உலகுக்கு எடுத்துரைக்கவும், அல்லாஹ்வுக்காக மட்டுமே எனும் நல்லெண்ணத்தோடு "அல் - ஃபலாஹ்" மலரை வெளிக்கொணர வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் மஜ்லிஸுல் இஸ்லாம் முன்னெடுத்தது.

இவ் உயர்ந்த எண்ணத்தோடு தோன்றிய இந்நூலானது பல் கலாசாரம் உள்ள இடத்தில் இஸ்லாமிய மார்க்கத்தின் சமய, கலாச்சார, பண்பாடுகளை வெளிக்கொணர்ந்து **"ஒருதாய் பிள்ளைகளாக"** சகோதரத்துவத்துடன் வாழ துணைபுரியும் என நம்புகின்றேன்.

எனவே இந்நூலை ஆக்க அனுமதி தந்த கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட் அவர்களுக்கும், ஆக்கமும், ஊக்கமும் அளித்த முன்னாள் உபபீடாதிபதி மஜ்லிஸுல் இஸ்லாம் போசகர் ஜனாப் செ.சஹாப்தீன் அவர்களுக்கும், எனக்கு ஆலோசனையும், நூல் வெளியீட்டுக்குமான உதவிகளை நல்கிய விரிவுரையாளர் திரு.ந.பார்த்தீபன் அவர்களுக்கும், உபபீடாதிபதிகளுக்கும், விரிவுரையாளர் இணைப்பாளர்களுக்கும், ஏனைய கல்வியியலாளர்களுக்கும் சிறந்த ஆக்கங்களை வழங்கிய என் உடன்பிறவா மாணவ ஆசிரியர்களுக்கும் மஜ்லிஸுல் இஸ்லாம் மலர்க்குழுத் தோழர்களுக்கும், இம்மலருக்கான அனுசரனை வழங்கிய மஸ்தான் ரேடர்ஸ் அவர்களுக்கும் அல்லாஹ்வின் திருப்பொருத்தம் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

ஆமீன்.

**C.M.முகம்மது ஸமீர்**
இதழாசிரியர்
மஜ்லிஸுல் இஸ்லாம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆனிய ஒளியில் மானிட அபிவிருத்தி

மானிட அபிவிருத்தியின் மகிமை பற்றி உணர்த்தி நிற்கும் அல்குர்ஆன், விஞ்ஞானத்தின் ஊற்றாகவும் அறிவியலின் பொக்கிஷமாகவும் கருத்தியல்களின் கருவூலமாகவும் திகழ்கிறது. மானிட அபிவிருத்தியும் அதன் பரிணாம வளர்ச்சி பற்றியும் பற்பல தர்க்க ரீதியான கருத்துக்களை ஏனைய இயற்கை விஞ்ஞானங்கள் முன்வைக்க குர்ஆனே ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு விளங்குகின்றன.

மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றி கூறவந்த Charls Darvincy என்ற விஞ்ஞானி மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான் என்கின்றார். மனிதனின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை டார்வின்சி கூர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் முன்வைக்கிறார். அதாவது **"ஹோமோ இரக்டஸ், நியண்டதாஸ் ஹோமோசபியன், ஹோமோசபியன்"** என்ற படிப்படியான வளர்ச்சியின் மூலம் மனிதன் பிறந்தான் எனவும் டாவின்சி விளக்கியுள்ளார். ஆனால் இதனை அல்குர்ஆன் தர்க்கரீதியாக எதிர்க்கிறது.

குர்ஆன் கூறும் மானிட அபிவிருத்தி பற்றி நோக்குவோமானால், யாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. ஆணும் பெண்ணும் திருமண உறவினால் பிணைக்கப்பட்டு அதன் மூலமாகவே மனிதன் உருவாக்கப்படுகிறான் என்று குர்ஆன் மானிட அபிவிருத்தி பற்றி ஆரம்பித்து வைக்கின்றது. முதல் மனிதனின் வரலாறு பற்றிக்கூறும் விஞ்ஞானம் குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்று கூறும் அதேவேளை குர்ஆனோ மனிதன் தட்டினால் "டங்" என்று சத்தமிடக்கூடிய களிமண்ணினால் படைக்கப்பட்டான் என்று கூறுகிறது. மேலும் சில வசனங்கள் பாய்ந்தோடும் நீரினால் படைக்கப்பட்டான் என்கிறது. மேலும் சில வசனங்கள் மனிதன் விந்தணுக்களில் இருந்து படைக்கப்பட்டான் என்கிறது. இதனை பின்வருமாறு குர்ஆன் வசனங்கள் குறிப்பிடுகின்றது.

**"குதித்து வெளியாகும் நீரினால் அவன் படைக்கப்பட்டுள்ளான்"**

**(அல்குர்ஆன் 86:6)**

**"விந்திலிருந்து (படைத்தான்) : கர்ப்பக் கோளறையில் துளியாக அது ஊற்றப்படும் போது"** **(அல்குர்ஆன் 54:46)**

போன்ற வசனங்கள் ஆராய்ச்சி செய்து பார்க்கும் ஒருவர் அல்குர்ஆன் பல மூலப்பொருட்களை மனிதனின் ஆரம்ப சக்தியாக குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு வசனமும் ஒன்றோடொன்று தொடர்புபட்டு ஒன்றை ஒன்று விளக்கி நிற்கின்றன. முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் களிமண்ணினால் படைக்கப்பட்டார். அதன் பின்னர் வரும் மனிதன் அவர்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்பட்டு விந்தணுவின் மூலம் உருவாக்கப்படுகின்றான், என கூறுகின்றான். மனிதனது உடல் கலத்திலுள்ள மண் கூறுகளின் மூலமாக கனியுப்புப் பதார்த்தங்களை அகத்துறிஞ்சும் மாபெரும் சக்தியான விந்தணுக்களை உற்பத்தி செய்கின்றது. இதுவே மானிட அபிவிருத்தியின் முதல் கட்டமாகும். விந்தணுவின் உருவாக்கம் பற்றி அல்குர்ஆன் மேலும் குறிப்பிடுகின்றது.

**"(ஆணுடைய) முதுகந்தண்டிற்கும் (பெண்ணுடைய) நெஞ்செலும்புக்கும் இடையில் இருந்து வெளியாகிறது"** **(அல்குர்ஆன் 86:7)**

இத்தகைய மகத்துவமான உண்மையை விளக்கும் குர்ஆன் மனித உருவாக்கம் பற்றி மென்மேலும் அழகிய முறையில் விளக்குகிறது.

**"உங்களால் பல கட்டங்களாக திட்டமாக அவன் படைத்தான்"**

**(அல்குர்ஆன் 71:12)**

ஆரம்பத்தில் மனிதன் தாயின் கர்ப்பப்பையில் விந்தணுக்களாக நீர் போன்ற திரவத்தின் மூலம் ஊற்றப்படுகிறான். பிறகு சதைக்கட்டியாக மாறுகிறான். இதனை பின்வரும் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

**"கர்ப்பக் கோளறைக்குள் சொட்டு சொட்டாக ஊற்றப்படும் விந்தின் ஒரு துளியாக அவன் இருக்கவில்லையா?" "பிறகு அவன் இரத்தக்கட்டியாக இருந்தான்" "பிறகு அதிலிருந்து ஆண், பெண் எனும் சோடிகளை உண்டாக்கினான்"** **(அல்குர்ஆன் 75:37,38)**

**"மண்ணினாலும் , பிறகு விந்தினாலும் பிறகு இரத்தக் கட்டியினாலும் உங்களை அவன் படைத்து பிறகு உங்களை வெளியாக்கினான்"**

**(அல்குர்ஆன் 16:4)**

**"பிறகு அதனைச் சரியாக அமைத்து, அதில் தன்னுடைய ரூஹை ஊதினான். இன்னும் உங்களுக்கு செவியையும், பார்வையையும், இதயங்களையும் ஆக்கினான்"**

**(அல்குர்ஆன் 32:9)**

எனவே ஒரு குழந்தை உருவாக்கம் பற்றிக் கூறும் விஞ்ஞான ஆராய்ச்சிகள், நான்கு மாதத்தின் பின்னர் மனிதன் பூரணமான மனிதனாக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாயின் கர்ப்பப்பையினுள் உருவெடுக்கிறான். ஆரம்பத்தில் விந்தணுவாக படிப்படியான வளர்ச்சி மூலம் உருவாகிறான். அவன் கர்ப்பப்பைக்குள் மூன்று படையின் மூலம் பாதுகாப்பாக பத்திரப்படுத்தப்பட்டுள்ளான். குர்ஆனிய ஒளியினால் விஞ்ஞான உலகம் வாய்பிளந்து நிற்கின்றது. பின்வரும் வசனங்கள் மானிட விருத்திபற்றி சிறப்பாக விளக்கி நிற்கின்றன.

**"உங்களுடைய தாய்களின் வயிறுகளின் ஒரு படைப்புக்குப் பின் மற்றொரு படைப்பாக மூன்று இருள்களின் உங்களை அவன் படைக்கின்றான்"**

**(அல்குர்ஆன் 32:6)**

அதாவது மனிதன் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளான் என்பதாகும். இங்கு முதல் படை என்பது கர்ப்பப்பையின் சுவரையும் இரண்டாவது இருள் சதைக்கட்டியாகவோ, இரத்தக்கட்டியாகவோ உருவாக்கப்பட்டு கர்ப்பப்பையில் பதிக்கப்பட்டு இருக்கும் சிசுவை சூழ காணப்படும் வெண்ணிறத் திரவத்தையும் மூன்றாவது இருள் அச்சிசுவின் கலங்களின் மேலால் போர்த்தப்பட்டிருக்கும் சுவர் எனவும் கூறுகின்றனர்.

இறுதியாக இம் மனிதன் எலும்புக்கூடுகளுக்கு சதை அணிவிக்கப்பட்டு மனித உருவத்தில் உருவெடுக்கின்றான். இதனைப் பற்றி பின்வரும் வசனம் கூறுகின்றது.

**"பிறகு அந்த விந்தை அட்டை போன்று ஒட்டக்கூடிய இரத்தக்கட்டியாக படைத்தோம். பிறகு அந்த இரத்தக்கட்டியை சதைத்துண்டாக படைத்தோம் பிறகு அந்த சதைத் துண்டை எலும்புகளாக படைத்தோம். பிறகு அவ்வெலும்புக்கு சதையை அணிவித்தோம். அப்புறம் அவனை வேறு ஒரு படைப்பாக உண்டாக்கினோம்."**

**(அல்குர்ஆன் 23:14)**

இவ்வாறான கட்டங்களைத் தாண்டி வந்த மனிதன் தன் மகத்துவமான பரிணாம வளர்ச்சியைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தானேயானால், இப்பூமியில் குழறுபடிகள், கலகங்கள் போன்றவற்றிலிருந்து விடுபடக்கூடுவான். மானிட அபிவிருத்தி பற்றி மாத்திரம் அல்குர்ஆன், அடிப்படைகளை முன்வைக்கவில்லை அனைத்து துறைகளுக்குமான அடிப்படைகளை முன்வைத்து மனிதனை வழிப்படுத்துகின்றது.

**K.M.அக்ரம்**
**112/11/PE/06**
உடற்கல்விப்பிரிவு
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனை

இஸ்லாம் கருதக்கூடிய குற்றச் செயல்களுள் போதைப்பொருள் பாவனையும் ஒன்றாகும். இன்று உலகம் முழுவதிலும் இத்தீமை பரவிக்கொண்டு செல்வதை நாம் பார்க்க முடிகிறது. உண்மையில் போதைப்பொருட்கள் ஒரு மனிதனின் உடலையும், உள்ளத்தையும் அறிவையும் பாதித்துச் செல்வதாக அமைந்திருக்கின்றது. இதனால் அல்குர்ஆன் ஸுன்னா இத்தகைய பாவச்செயல்களை பாரதூரமாக கண்டிக்கின்றது.

மனிதனுக்கு கேடு விளைவிக்கும் எந்தச் செயலையும் இஸ்லாம் ஆதரிப்பதில்லை. அதேபோன்று இஸ்லாம் தடைசெய்த எந்த ஒன்றிலும் மனிதனுக்கு நன்மைகள் இருக்கப்போவதுமில்லை. இதனால் தான் இஸ்லாத்தின் உயர்ந்த பார்வையில் மது, போதைதரும் பொருட்கள், பானங்கள், பன்றி இறைச்சி, இரத்தம், தானாக இறந்த பிராணிகள் என்பவற்றை உண்ணக் கூடாதென்று அது தடைவிதிப்பதோடு ஏனைய மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சகல உணவு வகைகளையும், பானங்களையும் அது தடை செய்கிறது.

இஸ்லாம் தடை செய்துள்ள மிகப் பிரதான போதைப்பொருள் மதுவாகும். இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பகாலங்களில் மது அருந்துவது ஒரு சாதாரண பழக்கமாக காணப்பட்ட போதிலும் இஸ்லாம் படிப்படியாக அதிலுள்ள தீங்குகளை உணர்த்தி மது அருந்துவது ஹராம் (தடை) என்ற இறுதி முடிவை தெளிவுபடுத்தியது. இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"இறை நம்பிக்கை கொண்டவர்களே! மது, சூதாட்டம், பலிபீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க ஷைத்தானிய செயல்களாகும். அவற்றை தவிர்த்து கொள்ளுங்கள். அதன்மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். மது மற்றும் சூதாட்டத்தின் வாயிலாக உங்களுக்கிடையில் பகைமையையும் வெறுப்பையும் ஏற்படுத்தி அல்லாஹ்வை நினைவு கூறுவதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவே ஷைத்தான் விரும்புகிறான். இதற்குப் பிறகாவது நீங்கள் இவற்றைத் தவிர்த்து கொள்வீராக! (அல்மாயிதா 90:91)**

உண்மையில் மது போதையை ஏற்படுத்தி மனிதனின் சுய நினைவை இழக்கச் செய்கின்றது. மக்களோடிருக்கின்ற புனிதமான உறவுகளை சீரழித்து பகைமையையும் வெறுப்புணர்வையும் வளர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் விட அது மனிதனை அல்லாஹ்வின் நினைவில் இருந்து தூரமாக்கி அல்லாஹ்வுடன் உறவாடும் தொழுகையிலிருந்தும் அவனைப் பிரித்து விடுகின்றது. இத்தகைய பெரும் அநியாயங்களை ஏற்படுத்தும் மதுவை எந்தப் புத்தியுள்ள மனிதன்தான் நேசிக்கமுடியும்.

உண்மையில் போதைப்பொருட்கள் அனைத்துப் பாவங்களுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. அவ்வாறான பழக்கங்களுக்கு உள்ளாகும் மனிதன் இலகுவில் அதிலிருந்து விடுதலை பெறமுடியாது. தொடர்ந்து அப்பொருட்களை அவனது உடல் வேண்டிக் கொண்டே இருக்கும். இதனால் அவன் திருடவும், ஏனைய சகல பாவங்களையும் புரிய முற்படுவான். அதிகரித்து வரும் பாலியல் சீர்கேடுகளுக்கு மது ஓர் அடிப்படைக் காரணியாக அமைந்திருக்கின்றது.

ஆகவே இதனால்தான் இஸ்லாம் மது அருந்துபவர்களுக்கு "40 கசையடி" என்ற தண்டனையையும் வழங்கி முற்றாக இதை தடை செய்திருக்கின்றது.

**S.M.முபாறக்**
**2/11/PT/02**
ஆரம்பக்கல்வி – **A**
2ம் வருடம்

# வாழ்த்துச் செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 2012ம் ஆண்டு இஸ்லாமிய மன்றத்தினால் வெளியிடப்படுகின்ற அல் - பலாஹ் என்ற இந்த மலரில் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நல்ல பல கருத்துக்களையும் அனைத்து மதங்களுக்குமான புரிந்துணர்வுடன் கூடிய கட்டுரைகளையும், கவிதைகளையும், இன்னோரன்ன பற்பல விடயங்களையும் தாங்கி வெளிவருவது சிறப்பான அம்சமாகும்.

இம்மலர் வெளியீடானது இனிவரும் காலங்களிலும் தொடர உளதார வாழ்த்துகின்றேன்.

**திரு.பி.ஜெயக்குமார்**
**விரிவுரையாளர்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு ஹிஜாப் (ᶠபர்தா) ஏன் அவசியம்

இஸ்லாம் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள ஒரு மார்க்கமாகும். அதாவது மனிதன் உண்ணல், பருகுதல், உடையணிதல் தொட்டு அன்றாட செயற்பாடுகள் அனைத்தையும் எவ்வாறு செய்யவேண்டும் என உணர்த்துகின்றது. இதனை வெளிப்படுத்தவே இறைவனான அல்லாஹ் அல்-குர்ஆன் எனும் இறைவாக்கையும் அல்-ஹதீஸ் எனும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறையையும் எமக்காக அனுப்பி வைத்தான்.

அந்தவகையில் இஸ்லாத்தின் உடையணிதல் என்ற விடயத்தில் பெண்கள் கட்டாயம் ஹிஜாப் என்று சொல்லக்கூடிய ᶠபர்தா அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் குறித்து நிற்கின்றது.

**"மேலும், (நபியே!) இறை நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்; அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும் தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளட்டும்; தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும்; அதிலிருந்து தாமாகவே வெளியில் தெரிகின்றதைத் தவிர! மேலும், தங்களுடைய மார்புகள் மீது முந்தானையைப் போட்டுக் கொள்ளட்டும்."**

**(அல்குர்ஆன் 24:31)**

மேற்குறிப்பிட்ட வசனத்திலிருந்து பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயம் என்பதும் அல்லாஹ்வின் கட்டளை என்றும் நிரூபணமாகிறது.

ஹிஜாப் என்பது பெண்கள் தங்களது கற்புக்கு இடுகின்ற வேலி என்றே கூறலாம். இன்றைய காலப் பெண்களை நாங்கள் சற்று சிந்தித்தால் அவர்களது உடை நாகரீகம் என்ற போர்வையிலே தங்களது மானங்களை அரைகுறை ஆடைகளை உடுத்தி தெருக்களிலே தங்களுடைய நாணத்தையும் இழந்து வலம் வருவதை எங்களது கண்ணூடாக காண்கிறோம். இது குறித்து நபியவர்கள் ஒரு ஹதீஸில் குறிப்பிடுவதாவது,

**"எந்தப் பெண்ணாவது தனது இல்லத்திலன்றி (வேறு இடத்தில் தகாத தேவைக்காக காட்சிதரும் நோக்குடன்) தன் ஆடைகளை களைவாளாயின் அவள் அல்லாஹ்வின் பாதுகாப்பை உடைத்துக் கொள்கின்றாள்"** **(அபூதாவூத், திர்மிதி)**

என்று கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் எப்பொழுதும் தளர்வான ஆடைகளை அணிய வேண்டும். அத்தோடு அவ்வாடைகள் மெலிதாகவோ உடலுக்கு இறுக்கமாகவோ இருக்கக்கூடாது. ஏனெனில் தங்களது உடலங்கங்கள் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக தளர்வான ஆடைகளை அணிய வேண்டும்.

இன்றைய காலத்தில் பெண்கள் ஆண்களைக் கவரவேண்டும் என்ற எண்ணத்தில் உடைகளணிந்து தங்களது பாதுகாப்பை இழந்து கொண்டிருக்கின்றனர். ஒரு பெண் தனது அழகை தனது கணவரிடம் மட்டுமே காட்டவேண்டும் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது. அவ்வாறில்லாது அலங்காரம் என்ற பெயரிலும் நாகரீகம் என்ற பெயரிலும் வீதிகளில் அரைகுறை ஆடைகளுடன் நடமாடுவாளாயின் அவளைப் பார்க்கும் விசுவாசங்கொள்ளாத ஆண்கள், கண்டுகளிக்கவும் அவளைப்பற்றின இச்சையான கற்பனைகளையும் கொள்வார்கள். அதுமட்டுமல்லாது அவளை பலாத்காரங்களுக்கும் கேலிகளுக்கும் உட்படுத்த அவளது ஆடைகளே வழிவகுத்துக் கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதற்கு உதாரணமாக நாகரீகம் வளர்ந்த நாடு எனப்படும் அமெரிக்கா நாட்டை எடுத்துநோக்குவோம். இங்கு கூடுதலான கற்பழிப்பு பலாத்காரங்கள் நடைபெற்றுள்ளது. என்று U.S.A உளவுத்துறையான F.B.I ன் அறிக்கை குறிப்பிடுகிறது. அதாவது 1990 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரிாக 1756 கற்பழிப்புக்களும் பின்பு 1900 ஆக அதிகரித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு காரணம் என்ன? இன்றைய அமெரிக்க பெண்களை எடுத்துப் பார்த்தாலும் அவர்களது தலைவிரிகோலமும் அவர்களது கவர்ச்சிகரமான ஆபாச உடைகளுமே என்றால் அது மிகையாகாது.

பெண்கள் ஹிஜாப் அணிவதற்கான காரணம் பற்றி அல்குர்ஆன் கூறும் வழிமுறை என்னவெனில்

**" நபியே! உம்முடைய மனைவிகள், புதல்விகள் மற்றும் நம்பிக்கையாளர்களின் மனைவியர் ஆகியோரிடம் கூறும், அவர்கள் தங்களுடைய துப்பட்டிகளின் முந்தானையைத் தங்களின் மீது தொங்க விட்டுக் கொள்ளட்டும். அவர்களை அறிந்து கொள்வதற்கும் அவர்கள் தொல்லைக்குட்படாதிருக்கவும் இதுவே மிகவும் ஏற்ற முறையாகும். அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும், கிருபை உடையோனுமாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 33:59)**

இங்கு முந்தானை என்பது ஹிஜாபைக் குறிக்கிறது. இதைக்கூட போடாத எத்தனை பெண்களை நாம் வீதிகளில் காண்கிறோம். இவர்கள் பாவங்களுக்கு வழிவகுப்பவர்கள் என்றால் அது பொய்யாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக சிந்தனைக்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். இரட்டைப் பிறவியான இரு சகோதரிகள். இரண்டு பேரும் அழகிலும் சமமானவர்கள். இருவரும் கடைத்தெருவில் நடந்து போகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் ஒருவர் முற்றிலும் இஸ்லாமிய முறையில் ஆடை அணிந்தவளாக செல்கிறார். அதாவது தனது முகம் மற்றும் இரண்டு கைகள் மட்டும் கரண்டை வரையில் தெரியும் படி தனது முழு உடலையும் மறைத்துச் செல்கிறார். மற்றைய பெண் ஆபாசமாகவும் கவர்ச்சியாகவும் உடையணிந்து செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்போது வீதியிலிருக்கும் ஆண்கள், காவாலிகள் யாரைப் பார்த்து கேலி செய்வார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். நிச்சயமாக கவர்ச்சியான பெண்ணைப் பார்த்து கேலியும் கிண்டலும் செய்வார்கள். பார்வை மூலமாகவே விபச்சாரத்தையும் செய்வார்கள். மேலும் நபியவர்கள் பிற்கால பெண்களைப் பற்றிக் கூறும்போது

**"எனது சமூகத்தில் பிந்திய காலகட்டமொன்றில் பெண்கள் ஆடை அணிந்தும் நிர்வாணமாக இருப்பர்; அவர்களது தலைகளின் மேல் ஒட்டகத்தின் திமில் போன்றவை (தலைமுடி வைக்கப்பட்டு) இருக்கும்; அவர்களைக் கண்டால் சபியுங்கள் அவர்கள் சபிக்கப்பட வேண்டியவர்கள்"**

எனக் கூறியுள்ளார்.

இதில் ஆடை அணிந்தும் நிர்வாணம் என்பவர்கள் நிச்சயமாக அரைகுறை ஆடையை ஆபாசமாக அணிந்தவர்களையே சுட்டுகிறார்கள். எனவே இவ்வாறான சாபங்களிலிருந்து தப்புவதற்கும், பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஹிஜாபை கட்டாயம் அணியவேண்டும் என்பது தெட்டத்தெளிவாகின்றது.

**S.றிபான்**
**05/11/PT/05**
ஆரம்பக்கல்வி - B
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியப் பார்வையும் நவீன கண்டுபிடிப்புக்களும்

இன்றைய நவீன யுகத்தில் எல்லாத் துறைகளும் சிறப்புற்று வளர்ந்து வருவதை நாம் கண்ணூடகக் காண முடிகிறது. அறிவியல் துறை, மருத்துவத்துறை, விஞ்ஞானத்துறை, கணிதத்துறை, உளவியல் துறை, வானியல்துறை, அழகியல் துறை, புவியியல் துறை என எல்லாத் துறைகளும் இன்று வளர்ச்சி பெற்று உயர்ந்து விளங்குகிறது. இத்தகைய துறைகள் வளர்ச்சி அடைவதற்கு இஸ்லாமே அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

மனிதன் இவ்வுலகில் உள்ளவற்றை ஆராய வேண்டும். அதன் மூலம் பயன்பெற வேண்டும் என்று அல்குர்ஆனும், ஸுன்னாவும் (நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம்) வலியுறுத்துகிறது. இதனைப் பற்றி அல்குர்ஆன் **"ஒட்டகம் எவ்வாறு படைக்கப் பட்டுள்ளது என அவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டாமா? வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என அவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டாமா? பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டாமா?"** என மனிதனை ஆராய்ச்சிக்கு தூண்டும் வகையில் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. அவ்வாறே மனிதனும் எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்து பல கண்டுபிடிப்புக்களை மேற்கொள்கின்றான்.

மருத்துவத்துறையை எடுத்து நோக்குவோமானால், இன்றை அநேக மருத்துவக் கருத்துக்கள் இஸ்லாத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மருத்துவத்துறையின் ஒவ்வொரு ஆராய்ச்சியும் முடிவில் இஸ்லாத்தில் அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் உள்ள விடயங்களை ஊர்ஜிதப்படுத்துவதாக அமைகிறது. உதாரணமாக நோக்குவோமானால் வயிற்றில் உள்ள குழந்தையின் நிலைபற்றி மருத்துவம் இவ்வாறு குறிப்பிடுகிறது.

**"ஒரு குழந்தை வயிற்றிலிருக்கும் போது முதல் 40 நாட்களில் விந்தணுக்களாக இருக்கும். பின் இன்னும் 40 நாட்களுக்கு இரத்தக்கட்டியாக இருக்கும். அதன் பின்னரே அதற்கு உயிர் வரும்"** எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறு மருத்துவம் குறிப்பிடுவதற்க்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே நபி (ஸல்) அவர்கள் குழந்தையின் உருவாக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். **"ஒரு குழந்தை தாயின் வயிற்றில் 40 நாட்களுக்கு விந்தணுக்களாக இருக்கிறது. இன்னும் 40 நாட்களுக்கு இரத்தக்கட்டியாக இருக்கின்றது. பின்னர் 40 நாட்களுக்கு சதைக்கட்டியாக இருக்கின்றது. பின்னர் ஒரு மலக்கு அதனிடம் அனுப்பப்படுகிறார். அவர் அதற்கு ரூஹ்ஹை ஊதுகிறார் (உயிர்)"** என்பது இதற்கு நல்ல சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே கணிதத்துறையைப் பார்க்கும் போது கணித மேதை என வர்ணிக்கப்படும் 'அல்குவாரிஸ்மி' என்பவர் கூட முஸ்லிமாகவே காணப்பட்டார். அவர் கணிதத்துறைக்கு பெரும் பங்காற்றியுள்ளார். அட்சர கணிதத்தின் தந்தையாகவும் கருதப்படுகிறார். அதுமட்டுமல்லாது இன்று வழக்கிலுள்ள 1 முதல் 10 வரையுள்ள எண்கள் அறபு எண்களேயாகும். அவ்வாறே பூச்சியம், தசம் என்பவற்றை ஐரோப்பியர்களுக்கு அறிமுகஞ் செய்தவர்களும் முஸ்லிம்களே. இதன்படி நோக்குகையில் கணிதத்துறை முஸ்லிம்களாலேயே வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்கும் இஸ்லாமே காரணமாய் அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாது **"புவி கோளவடிவமானது என்பதை அல்குவாரிஸ்மி என்ற முஸ்லிம் அறிஞரே முதலில் நிறுவினார்."** அவர் எழுதிய "கிதாப் ஸீறதுல் அர்ழ்' என்ற நூலில் இக் கருத்தை பல ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார். இந்நூலின் பகுதிகளைப் பயன்படுத்தியே கொலம்பஸ் பூமி உருண்டை என்பதால் மேற்குப் புறமாகச் சென்று கிழக்கை அடைந்து 1492 இல் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

எனவே இக்கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்தவர்கள் முஸ்லிம்களாகவே காணப்படுகின்றனர். மேலும் **"சூரியன், சந்திரனை அணுக முடியாது. கிரகங்களும் நட்சத்திரங்களும் நன்கு வரையறுக்கப்பட்ட பாதையில் ஓடிக்கொண்டிருக்கின்றது"** (அல் - குர்ஆன்) எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன் பிரகாரம் விஞ்ஞானிகளும் இக்கருத்தையே முன்வைக்கின்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு துறைகளையும் எடுத்து நோக்கும் போது அதன் வளர்ச்சியில் இஸ்லாம் பெரும் பங்காற்றியுள்ளது. ஒவ்வொரு கண்டுபிடிப்புக்களின் முடிவுகளும் இஸ்லாத்தை உறுதிப்படுத்துவதாகவே காணப்படுகிறது. இதன் பிரகாரம் நோக்கும் போது இஸ்லாம் கூறுகின்ற அடிப்படையின் பிரகாரமே இவ் உலகம் செயற்படுகின்றது என்பதை எல்லோரும் உணரக்கூடியதாய் உள்ளது.

**M.S.நௌஸாத்**
**110/11/PE/04**
உடற்கல்விப்பிரிவு
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள்

2011 - 2013



முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள்

2012 - 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையமும் இஸ்லாமும்

இணையம் என்பது ஓர் வலையமைப்பாகும். மாறாக கூறின் உலகில் உள்ள எல்லாவித தகவல்களையும் ஒருமித்துக் கொண்டுள்ள ஓர் தரவுக்கோவை எனலாம். முன்பு ஒரு காலத்தில் உலகம் கணினிமயமாகக் காணப்பட்டது. ஆனால் இன்று உலகமானது இணையமயமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த இணையத்தின் ஊடாக உலக மக்கள் பல்வேறு நன்மைகளை அடைந்து வருகின்றனர். குறுகிய நேர இடைவெளியில் பல வகையான கருத்துக்களை இணையம் மூலம் பெறக்கூடியளவு உள்ளன. இணையம் பற்றி சுருக்கக் கூறின் உலகம் எனும் சக்கரம் இணையம் எனும் அச்சாணியில் சுழல்வதைக் காணலாம்.

இந்த இணையத்தின் ஊடாக இன்று உலக மக்களின் தொடர்பாடல் துறை விரிவடைந்து செல்வதனைக் காணலாம். மேலும் உலக மக்களின் உறவு முறைகளும் விரிவடைந்து செல்வதற்கு இணையம் காரணமாக உள்ளன. இவ்வாறான தொடர்பாடல் துறையூடாக இன்று பிரதேசம், நகரம், நாடு, என்பவற்றுக்கிடையிலான தொடர்பாடல் விருத்தியின் காரணமாக இன்று பல கருத்துக்கள் நாளுக்கு நாள் பரிமாற்றப்படுகின்றன. இவர்களின் ஊடாக இஸ்லாமிய கருத்துக்களும், இஸ்லாமிய போதனைகளும் வெளியிடப்படும் வேலை முஸ்லிம் இல்லாத சகோதர சகோதரிகளும் இஸ்லாம் பற்றி அறிய இணையம் துணை நிற்கிறது. இணையமானது உலக மக்களிடையே நல்ல பயன்பாடுகளை விளைப்பதுடன் இந்த இணையம் மூலம் சில பாதகமான விளைவுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய உலகமக்கள் யாவரும் இந்த இணைய மோகத்தால் அதில் கூடுதலாக ஈடுபடுவதனைக் காணலாம். இந்த இணைய மோகம் ஆண், பெண் இருபாலாருக்கும் அதிகமாகவே காணப்படுகின்றன. இந்த இணைய மோகத்தால் இன்று பல மணி நேரங்களை அதிலே செலவிடுகின்றனர். இஸ்லாமிய ஆண்களும் பெண்களும் இந்த இணைய மோகத்தால் தொழுகை நேரங்களை மறந்தவராகவும், அதனை புறக்கணிக்கத்தக்கவராகவும், தொழுகையை நிறைவேற்றாதவராகவும் இன்று வாழ்ந்து வருகின்றனர். **"தொழுகையை விடுபவனுக்கு இஸ்லாத்தில் பங்கில்லை"** என நபியவர்கள் தமது உம்மத்தினருக்கு கூறியுள்ளார்கள். ஆனால் இன்று இந்த இணையம் காரணமாக தொழுகைகள் அசாதாரணமாக விடப்படுகிறது.

இன்றைய உலகம் கலாசாரத் தாக்கத்தினால் பாதிப்பை எதிர்நோக்குவதற்கு இணையமும் காரணமாக உள்ளன. இன்றைய இஸ்லாமிய சகோதரிகளும் தங்களின் ஆடை அணிகலன்களை முற்றிலும் இஸ்லாத்திற்கு மாற்றான முறையில் அணிகின்றனர். இன்று உலகளாவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் பெண்களின் ஆடை அணிகலன்கள் மோசமான முறையை நோக்கி செல்வதற்கு இணையமும் காரணமாக அமைகிறது. பெண்களைப் பற்றி அல்லாஹ் தனது புனித அல்குர்ஆனில்

**"மேலும் நபியே இறை நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும் அவர்கள் தங்களின் பார்வைகளை பேணிக்கொள்ளட்டும். தங்களின் வெட்கஸ்தலங்களைப் பாதுகாக்கட்டும். தங்களின் அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும். தாமாகவே அதிலிருந்து தாமாகவே வெளியே தெரிகின்றதை தவிர தங்களின் மார்புகளின் மீது முந்தானையைப் போட்டுக் கொள்ளட்டும்; (21-31) மேலும் ஆடையைப் பற்றி நபியவர்கள் சிறந்த கருத்தைக் கூறியுள்ளார்கள். ஆண்களைப் போன்று ஆடையணியும் பெண்களும், பெண்களைப் போன்று ஆடையணியும் ஆண்களும் எங்களைச் சார்ந்தவர்கள் அல்ல" (திர்மிதி)**

இந்த இணையத்தின் ஊடாக ஆண், பெண் கலப்பு இடம்பெறுவதனையும் காணலாம். இந்த இணைய மோகத்தில் ஆண்கள், பெண்கள் கூடுதலாக ஈடுபடுகின்றனர். முகம் தெரியாத அன்னிய ஆண்களோடும், அன்னிய பெண்களுடனும் பல மணி நேரம் உரையாடுவதற்கு இணையம் துணை நிற்கின்றது. தோழர் தோழி என்ற பெயரில் ஆண், பெண் கலப்பு மிகச்சாதாரணமாக இடம் பெறுவதோடு இந்த ஆண், பெண் கலப்பினால் காதல் என்ற விபரீதமும், அதன் மூலம் ஆபாச உணர்வினைத் தூண்டவும் இணையம் காரணமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே தான் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். **"எவன் ஆத்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறானோ அவன் வெற்றி அடைந்து விட்டான்." (அஷ்ஷம்ஸி:9)** என அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று இஸ்லாம் பற்றிய தவறான கருத்துக்களை வெளியிடுவதற்கும் அது தொடர்பான தெளிவில்லாத கருத்துக்களை வெளியிடுவதற்கும் இணையம் காரணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று இஸ்லாம் பற்றிய பூரண அறிவு இல்லாதவர்களும் இஸ்லாமிய போதனைகளையும் அதன் சட்ட திட்டங்களையும், நடைமுறைகளையும் புரிந்து கொள்ளாத இஸ்லாமல்லாத சகோதர, சகோதரிகள் இஸ்லாமிய மார்க்கத்தை தவறாக புரிந்து கொள்வதற்கு இணையம் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கிறது. இன்று உலக மக்களால் இஸ்லாம் மார்க்கத்தை ஒரு கடின மார்க்கமாகவும், இஸ்லாம் பற்றிய தவறான கருத்துக்களையும் புரிந்து நடந்து கொள்வதற்கு இணையம் காரணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**"விசுவாசிகளே நீங்கள் எதிரிக்கூட்டத்தைச் சந்தித்தால் உறுதியாக நில்லுங்கள். அல்லாஹ்வை அதிகமாக ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள்."**

**(அன்பால் 45)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அல்லாஹ் தனது புனித குர்ஆனில் கூறியதில் இருந்து நாம் இஸ்லாத்தின் பக்கம் என்றும் என்றென்றும் உறுதியாக நிற்க வேண்டும் என்பது புலனாகிறது.

இன்றைய இஸ்லாமிய சமூகம் இறைசிந்தனையில் இருந்து முற்றாக மாறி அவர்களுடைய சுய சிந்தனையின் அடிப்படையில் வாழ்வதோடு இஸ்லாம் கூறும் வாழ்க்கை வழிமுறைகளை கடைப்பிடிக்காதவர்களாகவும், இஸ்லாம் கூறும் வழிமுறைகளில் செல்வங்களைப் பெறாமலும், தான் விரும்பும் வழிகளில் ஹராம்,(தடுக்கப்பட்டது) ஹலால் (அனுமதிக்கப்பட்டது) பேணாமல் தன் செல்வங்களை ஈட்டிக் கொள்கின்றனர். இவ்வாறு மனிதர்களை சுய சிந்தனையின் அடிப்படையில் வாழ்க்கைப் போக்கை மாற்றுவதற்கு இணையம் காரணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இது பற்றி இறைவன் தனது நூலில்

**"விசுவாசிகளே உங்கள் பிள்ளைகளையும், செல்வங்களையும் இறை சிந்தனையில் இருந்து திருப்பிட வேண்டாம்"**
**(அஷ்–ஷஹத் 7)**

என இறைவன் தன் அடியவர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளான். இதன்படி வாழ்வதே எமக்குரிய சிறப்பாகும்.

இன்றைய உலகமானது இணையமாக காணப்படுகின்றமையால் இந்த இணைய மோகத்தினால் தமது மனதை பாதிப்புக்குள்ளாக்கியவர்கள் இன்று அனேகமானோர். இந்த இணையத்தால் பல நன்மைகளும் சில தீயவைகளும் உள்ளன என்பதனை யாவரும் அறிந்ததே. எனவே இதனை நாம் என்றும் அறிந்தவர்களாக இருப்பதனால் அதனால் கிடைக்கின்ற நன்மையை நமக்கு சாதகமாக பயன்படுத்துவதோடு அதனால் உருவாகும் தீயவைகளை தவிர்ப்பதோடு மேலும் இணையம் ஊடாக இஸ்லாம் பற்றி வருகின்ற தவறான கருத்துக்களையும், மறுப்புக்களைம் நீக்குவதோடு இஸ்லாம் பற்றிய நல்ல பல கருத்துக்களை விநியோகிக்கும் ஒரு தளமாக இணையத்தை பயன்படுத்துவோமாக. அதற்கு இறைவன் என்றும் நமக்கு துணை புரிவானாக. **"நல்லவைகளை எடுத்தும், தீயவைகளை தவிர்த்தும் நடக்குமாறு இறைவன் உங்களுக்குக் கட்டளை இட்டுள்ளான்."** எனும் நபியவர்களின் கூற்றுக்கு இணங்க செயற்படுவோமாக.

**M.R.முஹம்மது பஷீர்**
**08/11/PT/08**
**ஆரம்பக்கல்வி - B**
**2ம் வருடம்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இம்மை மறுமையின் விளைநிலம்

இந்த உலகம் மறுமைக்குரிய விளைநிலமாகும். இவ்வுலக வாழ்வின் அறுவடையைக் கொண்டுதான் மறுமை வாழ்வு தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வுலக வாழ்வை வெறுக்கவோ, தூசிக்கவோ இஸ்லாம் வற்புறுத்தவில்லை. இவ்வுலக வாழ்வு தற்காலிக தங்குமிடம் என்பதை மனிதன் உணர்ந்து கொள்ள வேண்டும். தற்காலிக பண்டங்களை இறைவன் இங்கு தந்துள்ளான். எமது உறவுகளும் நாம் அனுபவிக்கும் சுகங்களும் அந்த நியதிக்குட்பட்டதேயாகும்.

இவ்வுலகில் முற்று முழுதாக மூழ்கி விடுவதும் அதீத பற்றுக் கொண்டு மறுமையை மறந்து வாழ்வதையுமே இஸ்லாம் கண்டிக்கின்றது.

"அமீருல் மு'.மினின் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒரு பிரசங்கத்திலே பின்வருமாறு கூறினார்கள். **"நிச்சயமாக இந்த உலகானது, நேர்மையைப் பாராட்டுபவருக்கு அது நேர்மையின் உறைவிடமாகும். அதனைப் புரிந்து கொள்பவர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் இடமாகவும் இருக்கின்றது. பண்டங்களை சேகரிப்பவர்களுக்கு புதையல் சுரங்கமாகவும் அதிலிருந்து பாடம் கற்பவர்களுக்கு அறிவுச் சுனையாகவும் இருக்கின்றது. அது அல்லாஹ்வை நேசிப்பவர்களுக்கு வழிபடும் தலமாகவும், அமரர்களுக்கு ஒரு வணக்கஸ்தலமாகவும், அல்லாஹ்வின் வஹீ இறங்கும் தலமாகவும், அல்லாஹ் மீது பற்றுக் கொண்டவர்களுக்கு சந்தையாகவும் இருக்கின்றது. அந்தச் சந்தையிலே இலாபமாக அவனது காருண்யத்தையும் சுவன வாழ்வையும் தேடிக் கொள்கிறார்கள்."**

பக்திமான்களின் உறைவிடமாகவே இவ்வுலகம் விளங்குகின்றது. அல்லாஹ்வின் கருணையும் அன்பும், மாட்சியும் இறங்கும் தலமாக இவ்வுலகம் இருக்கின்றது. ஆனால், அதனை மறந்து மனிதன் சிற்றின்ப ஆசைகளுக்கு உட்பட்டு, உலக ஆசாபாசங்களில் மூழ்கி தன்னிச்சைப்படி நடப்பதை இஸ்லாம் என்றும் அனுமதிக்காது. பாவங்களின் பிறப்பிடமாக உலகை மாற்றக்கூடாது என்பதையே இஸ்லாம் வற்புறுத்துகிறது.

**உலகாசை கொண்டு அலைவதின் கெடுதல் பற்றி ஹஸ்ரத் அபூபக்கர் (ரழி) அவர்கள் கூறுகையில், மேய்ப்பவன் இல்லாத ஆட்டு மந்தையின் மீது முன்பக்கத்தாலும், பின்பக்கத்தாலும் தாக்கும் இரண்டு கொடூரமான ஓநாய்கள் செய்யும் தீமையிலும் பார்க்க உலகாசை என்பது விசுவாசிகளின் ஈமானுக்கு செய்யும் தீங்கு தீவிரமானதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, இந்த உலகை நலவாக ஆக்கிக் கொள்வதும் தீங்காக ஆக்கிக் கொள்வதும் மானிடர் கையிலேயே இருக்கின்றது. மனிதனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையில் எழுபதாயிரம் போர்வைகள் கொண்ட திரைச் சீலைகளின் அடர்த்தி தடிப்பான விலகல் இருப்பதாக ஒரு சில ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன. அதிகமாக உலகப்பற்று அல்லாஹ்வுடனான நெருக்கத்தை மேலும் மேலும் விரிசல் படுத்திக் கொண்டே செல்லும். அவன் கட்டளைகளை ஏற்று அவன் மீதான சமீபத்தை நெருக்கமாக்கிக் கொள்வதன் மூலம் திரைகள் விலக்கிச் செல்ல வழி சமைக்கலாம். எனவே, இம்மை மறுமை இரண்டினதும் நிர்ணயிப்பாளன் அல்லாஹ் ஒருவனே. அவனது ஏவல்களை ஏற்று, உலக வாழ்வின் தாற்பரியம் அறிந்து, மறுமைக்குரிய பயிர்களை இங்கே விதைத்து நல்லறுவடைகளைப் பெற முனைவோமாக! "ஆமீன், யாராப்பல் ஆலமீன்!"

**M.U.நூறுல் முᶠபாஸா**
**166/11/AG/31**
விவசாயப்பிரிவு
2ம் வருடம்

## வாழ்த்துச் செய்தி

ஒரு மானிட சமூகத்தின் பல்துறை வளர்ச்சிக்கும் அம்மதம் சார் கருத்துக்கள் புகுத்தப்படல் வேண்டும். அப்போதுதான் அச்சமூகத்தின் வளர்ச்சியும், உயர்ச்சியும் மேலோங்கும் அந்தவகையில் முஸ்லிம் மஜ்லிஸுல் இஸ்லாம் வெளியிடும் "அல் - ᶠபலாஹ்" நூலின் வருகையை மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு.G.கமலக்குமார்**
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில் கூட புனிதமே

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அன்பு நண்பர் அபூபக்கர் ஸித்தீக் ரலில்லாஹு அன்ஹு அவர்களும் தவ்ரக் குகையில் தங்கியிருந்த போது அக்குகையின் பொந்துக்களில் இருந்த பாம்பு ஒன்று அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தீண்டி விடுகிறது. வேதனை தாங்கமுடியாமல் அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர். அவர்கள் மடியில் உறங்கிக் கொண்டிருந்த பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விழ விழித்தெழுந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது நண்பரை பாம்பு தீண்டிவிட்டது என்பதை அறிந்ததும் தனது எச்சிலைத் தொட்டு பாம்பு தீண்டிய இடத்தில் தடவினார்கள். அபூபக்கர் ரலியல்லாஹு அன்வஹு அவர்களுக்கு விஷம் நீங்கி நிவாரணம் ஏற்பட்டது என்பது மிகவும் பிரபலமான வரலாறு.

சுமார் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் முஸ்லிம் இல்லத் திருமணமோ அல்லது வேறு விசேஷ காரியங்களோ நடக்கும் போது விருந்து என்றாலே ஸஹனில்தான் சாப்பாடே! மூன்று அல்லது நான்கு பேருக்கு ஒரு ஸஹன் என்று கூடிச் சாப்பிடும் பழக்கத்தில் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எவ்விதமான ஆசையும் இல்லாமல் மக்கள் வாழ்ந்த காலமாக இருந்தது. அடுத்து மிக முக்கியமாக பெருமானார். ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வலிறுத்தப்பட்ட ஒரு ஸுன்னத் **உணவருந்திவிட்டு உங்கள் விரல்களை நீங்களோ அல்லது மற்றவர்களோ சூப்பாத வரை அவ்விடத்தை விட்டு எழுந்து செல்லாதீர்கள்.**

விபரம் புரியாதவர்களுக்கு இது வினோதமாகத்தான் தெரியும். ஆனால் அனைத்திற்கும் முன்மாதிரியாக ஏக இறைவனால் அனுப்பிவைக்கப்பட்ட இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டுதல் அல்லவா அது! இந்த ஸுன்னத்தை பின்பற்றும் குடும்பத்தில் சண்டை சச்சரவா?

முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே என்பதற்காகத்தான் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் **'தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பாத வரை ஒருவன் உண்மையான முஃமினாக மாட்டான்.'** என்றுரைத்தார்கள். அந்த அளவுக்கு வேறுபாடற்ற வாழ்க்கையை வாழ வலிறுத்தினார்கள்.

**S.H.M.தாஹிர்**
**116/11/PE/10**
உடற்கல்விப்பிரிவு
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையாளர் அபூபக்கர் (ரலி)

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அறிவித்தார்கள். அபூபக்கர் (ரலி) அன்ஹு அவர்களுக்கு (ஓர் எஜமானுக்கு அடிமை செலுத்த வேண்டிய சம்பாத்தியத்தில்) நிர்ணயிக்கப்பட்ட தொகையைச் செலுத்தி வந்த அடிமையொருவன் இருந்தான். அபூபக்கர் (ரலி) அன்ஹு அவர்கள் அவன் செலுத்தும் தொகையிலிருந்து உண்டு வந்தார்கள். ஒரு நாள் அவன் ஏதோ ஒரு பொருளைக் கொண்டு வந்தான். அதிலிருந்து அபூபக்கர் (ரலி) அன்ஹு சிறிது உண்டார்கள். அப்போது அந்த அடிமை அவர்களிடம் இது என்ன? என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டான். அபூபக்கர் (ரலி) அன்ஹு இது என்ன? என்று கேட்டார்கள். அவன் நான் அறியாமைக் காலத்தில் குறி சொல்லி வந்தேன். எனக்கு நன்றாகக் குறி சொல்லத் தெரியாது. ஆயினும் அவரை நான் ஏமாற்றி விட்டேன். அவர் அதற்காக கூலி கொடுத்தார். நீங்கள் உண்டது. (குறி சொன்னதற்காக) எனக்குக் கூலியாகக் கிடைத்த பொருளிலிருந்துதான் என்று சொன்னான். உடனே அபூபக்கர்(ரலி) அன்ஹு தம் கையை (வாய்க்குள்) நுழைத்துத் தம் வயிற்றிலிருந்து அனைத்தையும் வாந்தியெடுத்து விட்டார்கள்." **(ஆதாரம் : புகாரி 3842)**

இந்த செய்தியுள், அபூபக்கர் (ரலி) அன்ஹு அவர்கள் தனது அடிமை மூலம் தனக்கு கிடைக்க வேண்டிய அடிமைத் தொகையை உண்கிறார்கள். பின்பு அந்த அடிமை ஹராமான (தடுக்கப்பட்ட) வழியில் பொருளீட்டியதைத்தான் நம்மிடத்தில் தந்துள்ளான். அதைத்தான் நாம் சாப்பிட்டுவிட்டோம் என்பதை அறிந்தவுடன் தனது வாய்க்குள் விரலை விட்டு வாந்தி எடுக்கிறார்கள் என்றார்கள். அபூபக்கர் (ரலி) அன்ஹு அவர்களின் வாய்மையை எண்ணிப்பாருங்கள்.

சமீபத்தில் ஒரு அறிஞரிடம், என் தந்தை வட்டியின் மூலம் சம்பாதித்த சொத்து வாரிசு அடிப்படையில் கிடைத்துள்ளது. இது எனக்கு ஆகுமானதா? என்ற கேள்வி முன்வைக்கப்பட்ட போது அது உங்களுக்கு ஆகுமானதுதான். ஏனெனில் தவறான வழியில் பொருளீட்டியது உங்கள் தந்தைதான். அப்பாவத்திற்கு அவர்தான் பொறுப்பாளி. உங்களுக்கு அதில் சம்பந்தமில்லை. எனவே வாரிசு அடிப்படையில் கிடைத்த அந்த சொத்து உங்களுக்கு ஆகுமானதே! என்று அந்த அறிஞர் பதிலளித்தார்.

ஆனால், தனது அடிமை தவறான வழியில் பொருளீட்டிய தொகையில் உண்பதை வெறுத்த அபூபக்கர் (ரலி) அன்ஹு அவர்கள் எங்கே! வரதட்சணை, உணவு வீடுதேடி வந்தால் அது அன்பளிப்பு. ஆள்மாறிவிட்டால் (அது எந்தவழியில் சம்பாதித்ததாக இருந்தாலும்) ஆகுமானது என்று "பத்துவா" (தீர்ப்பு) வழங்கும் மேதைகள் எங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுபைர் இப்னு முத்யிம் (ரலி) அன்ஹு அறிவித்தார்கள் "நபி (ஸல்) அவர்களிடம் ஒரு பெண்மணி தேவை ஒன்றை முறையிடுவதற்காக வந்தார். நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியைத் திரும்பவும் வரும்படி கட்டளையிட்டார்கள். அந்தப் பெண்மணி நான் வந்து தங்களைக் காண முடியவில்லையென்றால் என்று நபி (ஸல்) அவர்கள் இறந்து விட்டால் என்ன செய்வது? என்பது போல் கேட்டாள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "நீ என்னைக் காணவில்லையென்றால் அபூபக்கரிடம் செல்" என்று பதில் கூறினார்கள்."

**(ஆதாரம் : புகாரி 3659)**

இதன் மூலம் நபி (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் எட்டிப்பிடிக்க முடியாத சிறப்புக்குரியவர் அபூபக்கர் (ரலி) அவர்கள் என்பதை உலகுக்கு உணர்த்தியுள்ளதை புரிந்து கொள்ளலாம். மேலும் நபி வழியைப் பின்பற்றும் ஒவ்வொரு மனிதனும் உண்மையாளனாக திகழ்வான் என்பது ஐயத்துக்கு இடமின்றிக் கூறுகின்றேன்.

**M.S.M.நளீம்**
**107/11/PE/01**
உடற்கல்விப்பிரிவு,
2ம் வருடம்

## வாழ்த்துச் செய்தி

"கற்பவனாக இரு, கற்பிப்பவனாக இரு, கற்பவனுக்கு
உதவுபவனாக இரு நான்காமவனாக இராதே."
நபி (ஸல்)

எனும் கூற்றுக்கிணங்க முஸ்லிம் மஜ்லிஸ் ஆசிரிய மாணவர்களினால் வெளியிடப்படும் அல்-பலாஹ் எனும் நூல் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**நி.ரஞ்சித்கண்ணா**
அழகியல் மன்ற செயலாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி (ஸல்) தந்த மார்க்கம்

உலகம் போற்றும் படி வாழ்ந்த
உத்தம நபி நாதர்
நவின்றிட்ட நன்மொழிகள்
நமக்கின்றும் பயனன்றோ!
இறைமறை "அல்-குர்ஆன்"
கட்டளை தனில்
மறை வாழ்வு வாழ்ந்து
காட்டிப் போதித்த
மா நபியை *"ரஹ்மத்"
ஆகவே நானிலம் - மாண்புறக்
கண்டு கொண்டது
ஓர் உயர்வன்றோ

சீர் குன்றித் தவித்திட்ட
அரேபிய நாட்டினில்
பார்தன்னில் மத்தியாம்
மக்கமா நகர்தன்னில்
பேரான முஹம்மது
நன்னபி புவிவந்த
பொன்னான நாள் நமக்கது
பெருநாளன்றோ?

*"தீன்" எனும் இஸ்லாம்
அரபு நாட்டினில் தீபமாய்
தூய ஒளிவிட்டுப் பிரகாசிக்க
ஏந்தலார் வழியமைத்தார்
பருவ முதிர்வு கண்டே

முழு உலகிலும் பின்பற்றும்
பூரண நிறைவு தரும் மார்க்கம்
இஸ்லாம் என்றாச்சு!

உலகின் நாற்றிசை வாழ்
மக்கள் பலரும்
பலமாய்ப் பிடித்திருக்கும்
மார்க்கம் இஸ்லாம்........
நலமாய் அமைய
நாயனும் நாடினான்
நமக்கெல்லாம் ஈடேற்றம்
தருவது இஸ்லாமன்றோ?

இகத்தினில் மார்க்கம்
இஸ்லாம் என்றானதும்
இனிதாய் நமக்கது
பெருமையைத் தருவதாம்.
நலமான நபிவழி
நாடியே கண்டிங்கு
துலக்கமாய் நபி
புகழ் பாடியே துதித்திடுவோம்!

* ரஹ்மத் - இறை அருள்
* தீன் - இஸ்லாமிய மார்க்கம்

**S.அஸ்ரா**
**100/11/AG/24**
விவசாயப்பிரிவு
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவயுக நாகரிகம்

சப்பித்துப்பிய அந்த நாகரிகமும்
சக்கை போடும் இளசுகளும்
சாத்தானின் வசனங்களாயின!
மெகா சீரியல்களால் - நம் பெண்கள்
பெற்றெடுத்த பிள்ளைகள் இவை

அடிக்கடி மாறுகின்றன - அவனது
நூடில்ஸ் தலைமுடியும்......
தேய்ந்து பொத்தல் போட்டதுமான
காற்சட்டையும் கணிசமான அளவு!
சினிமா மோகம் முற்றிப்பழுத்துவிட்டது.

சாண் வளர முழம் குறைகின்றது
மகளிர் ஆடைகளில்......
ஆண்களின் *அவ்ரத்கூட அவர்களுக்கில்லை
செம்பட்டைத் தலைமுடியும்.....
ஏணிப்படிப் பாதணிகளும்.....
உடலைப் படம்பிடித்துக் காட்டும் உடைகளும்
முக்காட்டை விட்டும் தூரமாகிவிட்டது

தற்போது ஆண்கள் உடைகளுக்கு
பெண்கள் உரிமை கோருகின்றார்கள்
சாயம் தோய்ந்த உதடுகளும் நகங்களும்
பெஷன் என்றவகையில்....
பேய்க்காட்டுகிறார்கள்

இனியாவது இவை ஒழித்து
நரக வேதனையிலிருந்து மீட்சிபெற.....
*மீசானின் வலப்பக்கத்தைக் கனமாக்குவோம்
வாழ்வை வளமாக்குவோம்.

* அவ்ரத் - ஆண், பெண் மறைக்க வேண்டிய உடற்பகுதி
* மீஸான் - இறைவனிடம் உள்ள நன்மை, தீமை அளக்கும் தராசு

**S.F.நஃபீலா**
**152/11/Com/26**
வர்த்தகப்பிரிவு
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றமழான்

அக்கிரமச் ஷைத்தானை
சங்கிலியால் அடக்கி வைத்து
அற்புதமாய் அமல் செய்ய
அருமை நாயகன் அள்ளித்தந்த
அருள் மிகு மாதம் றமழான்

பகல் பொழுதில் பசித்திருந்து
இரவெல்லாம் நின்று வணங்கி
தான தர்மம் பல செய்து
ஏழைகள் பசியுணர்ந்து
எல்லோரும் உதவத்தூண்டும்
உன்னத மாதம் றமழான்

*ஸக்காத்துக் கடமையதை
சரியாக நிறைவேற்றி
அருள்மிகு குர்ஆனை
அனுதினமும் ஓதிவந்து
மெய்யான இறைவன்பால்
நெருக்கத்தை ஏற்படுத்தி
நேரான வழிகாட்டும்
சிறப்புமிகு மாதம் றமழான்

தீமைகளை வேரறுத்து
நன்மைகளை அள்ளிச்செல்ல
*லைலதுல் கத்ர் இரவை
அடியார்க்கு உறவாக்கி
அருளைச் சொரியும்
கருணை நிறைந்த
இறைவன் தந்த
கண்ணியம் மிகு மாதம் றமழான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்குப் பன்மடங்காய்
அமலுக்கு கூலி தந்து
இன்பமான சுவர்க்கத்தை
இலகுவில் அடைவதற்கு
இம்மையிலே வழிகாட்டும்
இறையச்சம் மிகு மாதம் றமழான்

**'யார் அறிவைத் தேடிச் செல்கிறாரோ அவருக்கு அல்லாஹ் சுவனத்தின் பாதையை இலகுபடுத்தி வைப்பான்"** **(நபிமொழி)**

- லைலதுல் கத்ர் இரவு - அல்-குர்ஆன் இறக்கப்பட்ட இரவு
- ஸக்காத் - உதவி வழங்க வேண்டும் என இஸ்லாத்தில் கூறிய 8 கூட்டத்தினருக்கு வழங்கும் உதவித்தொகை.

**M.F.நஸீ[f]பா**
**156/11/Com/28**
வர்த்தகப்பிரிவு
2ம் வருடம்

# வாழ்த்துச் செய்தி

பல் கலாச்சாரம் வாழும் சூழலிலே சமய கலாச்சார விடயங்கள் பொதிந்த ஒரு நூல் வெளிவருவது சமயங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வல்லதாகும். அவ்வகையில் முஸ்லிம் மஜ்லிஸினால் வெளிவரும் ''அல் - [f]பலாஹ்'' எனும் நூல் சிறப்புற வாழ்த்துவதோடு, ஒவ்வொரு வருடமும் இவ்வாறான முயற்சி எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

**திரு.இ.செந்தில்குமரன்**
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இஸ்லாம்

இன்னல்கள் பல மத்தியில்
அன்னல் நபி பிறந்தார்
பின்னால் வரும் மக்களுக்கு
முன்னால் கூறிவிட்டார்
வாழும் முறைபற்றி

எம் நபியின்
வாய்ச்சொல்லும்
வழிச்செயலும்
வாழ்க்கை அங்கீகாரமும்
பின்பற்றி நடந்தால்
நம் வெற்றி நிச்சயம்

இரத்தம் கண்டு
யுத்தம் வென்று
நித்தம் வளர்ந்ததல்ல
இஸ்லாம்

நபியின்
பண்பு கண்டு
நம்பி நடந்த
உண்மை கண்டு
வளர்ந்தது இஸ்லாம்

வாளேந்தினோம்
இஸ்லாம் வீழ்ந்திடக்கூடாது
என்பதற்காக
வந்தவரையெல்லாம்
கொன்று குவித்து
கண்டவரையெல்லாம்
சிறையிலடைக்கவல்ல

நிலம் பிடித்து அரசாள
நாங்கள்
மதம்பிடித்த யானையல்ல
மதம் அறிந்த மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மதமும் சம்மதம்
என்று சொல்லவில்லை
எம்மதத்தையும் தூற்றாதே
அது நம்மதத்தைத்
தூற்றுவது போல்
எனக்கூறி
மற்றைய மதங்களை
போற்றும் இஸ்லாத்தின்
முஸ்லிம்கள்
எம்மதத்தினதும் நிம்மதியை
கெடுக்கவில்லை
நாங்கள்

முஸ்லிம்களை
எண்ணை வளத்திற்காய்
பண்ணை விலங்குகளைப் போல்
மனிதனை கொன்று
பண்ணையாரைப் போல்
நீதியும் சொல்லி
மண்ணைக் கண்ணில்
தூவும் இந்த
பொண்ணையர்களின்
கழுத்தை நெரித்து
தம் சொந்த
மண்ணை விட்டும்
துரத்தியடிப்பது
தீவிரவாதமா?

இல்லை
அது தான் *ஜிஹாத்
அவன்தான் *முஜாஹித்

* ஜிஹாத் - இஸ்லாத்துக்காக போராடல்
* முஜாஹித் - இறைவழியில் போராடுபவர்

**W.முஹம்மது அஸ்லம்**
**102/11/AG/26**
விவசாயப்பிரிவு
2ம் வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியைப் பற்றி நபிகளாரின் பொன்மொழிகள்

1) "கல்வி மக்களிடமிருந்து மறைந்து விடுவதும், அறியாமை நிலைத்து விடுவதும், மது அருந்தப்படுவதும், வெளிப்படையாய் விபச்சாரம் நடப்பதும் மறுமை நாளின் அடையாளங்களில் சிலவாகும்"

**(அனஸ்(ரலி) புகாரி – 80)**

2) "இரு விஷயங்களை தவிர வேறு எதிலும் பேராசை கொள்ளக்கூடாது, ஒன்று மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்தை அவர் நல்ல வழியே செலவு செய்தல். இன்னொன்று மனிதருக்கு அல்லாஹ் வழங்கிய அறிவுக்கேற்ப அவர் தீர்ப்பு வழங்குபவராகவும், கற்றுக்கொடுப்பவராகவும் இருப்பது"

**(அப்துல்லாஹ் பின் மஸ்வூது புகாரி – 73)**

3) நிச்சயமாக அல்லாஹ் கல்வியைத் தனது அடியார்களிடமிருந்து ஒரேயடியாகப் பறித்து விடமாட்டான். ஆயினும் அறிஞர்களைக் கைப்பற்றுவதன் மூலமே அவன் கல்வியைக் கைப்பற்றுவான் கடைசியாக ஒரு அறிஞர் கூட மிதமில்லாமல் ஆக்கிவிட்டதும் மக்கள் அறிவீனர்களைத் தமது தலைவர்களாக ஆக்கிக் கொள்வார்கள். இதன் மூலம் தானும் வழிகெட்டுப் பிறரையும் வழிகெடுப்பார்கள்".

**(அப்துல்லாஹ் பின் அமர் பின் ஆஸ் (ரலி) புகாரி – 100)**

4) "எங்களுக்கு சலிப்பேற்பட்டு விடக்கூடும் என்று அஞ்சிப் பல்வேறு நாட்களிலும் கவனித்து எங்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்குபவர்களாக இருந்தார்கள்"

**(இப்னுமஸ்வூது (ரலி) புகாரி – 68)**

5) "இலகுவாக்குங்கள், சிரமத்தை கொடுக்காதீர்கள் மேலும் நல்லவற்றையே கூறுங்கள் சலிப்படைந்து ஓடிவிடுமாறு செய்து விடாதீர்கள் பொறுப்பூட்டாதீர்கள். **(அனஸ் (ரலி) புகாரி – 69)**

**B.ஆஸிக் அஹமட்**
**141/12/Mat/08**
கணிதப்பிரிவு
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தில் கல்வியின் மகிமை

இஸ்லாம் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. நபி(ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆன் இறக்கப்பட்ட போதும் முதல் வசனம் "இக்ரா.." (ஓதுவீராக) அதாவது 'கற்றுக் கொள்வீராக!' என்ற வசனமே இறக்கப்பட்டது. மற்றும் கல்வியின் மகிமையை உணர்த்தும் பல ஹதீஸ்களும் உள்ளன.

**"கல்வியைத் தேடிக் கற்றுக் கொள்வது சகல முஸ்லிம்கள் மீதும் கட்டாயக் கடமையாகும். (நூல் இப்னுமாஜா)**

மனித வாழ்வுக்கு எந்தளவு கல்வி முக்கியமானதோ அந்த அளவு முஸ்லிம்களுக்கு கல்வி அறிவு முக்கியமானதாகும். இஸ்லாம் என்பது வெறும் சடங்கு, சம்பிரதாயம், அனுஷ்டானங்களைக் கொண்ட மார்க்கமல்ல. அதுசில கொள்கைகளின் ஏவல் விளக்கங்களின் அணிவகுப்பு, இவை அல்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

**"இரு சாராரைத் தவிர வேறெவர் மீதும் பொறாமை கொள்ளலாகாது. அவர்களில் ஒருவர் அல்லாஹ் வழங்கிய சொத்துக்களை ஆகுமான வழிகளில் செலவு செய்யும் செல்வந்தர் மற்றவர் தனக்கு அல்லாஹ் வழங்கிய கல்வி ஞானத்தை பிறருக்கும் கற்றுக் கொடுத்து அதன் பிரகாரம் தீர்ப்பு சொல்லும் அறிஞர்"**

**(நூல் : புகாரி முஸ்லிம்)**

மேற்கூறிய ஹதீஸில் இருந்து கல்வி கற்பது கட்டாயக் கடமை, அதில் போட்டி போட்டுக் கொண்டு கற்றுக் கொள்ளவும் அனுமதியுண்டு. கற்ற பின் அதன் பிரகாரம் ஒழுக வேண்டும், போன்ற சிறந்த அறிவுரைகளை இஸ்லாம் நமக்கு கற்றுத் தருகிறது.

**"கல்வி கற்பவனாக இரு அல்லது கற்றுக் கொடுப்பவனாக இரு அல்லது கல்வி கற்பவனுக்கு உதவுபவனாக இரு நான்காம் மனிதனாக இருக்காதே"** என்ற நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்குக்கு ஏற்ப நாமும் கல்வியைக் கற்று அதனை கற்றுக்கொடுத்து பூரண பயனைப் பெறுவோமாக!

**M.R.F.இர்பானா**
**74/12/AG/14**
**விவசாயப்பிரிவு**
**1ம் வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானார் (ஸல்) அவர்களின் அறிவுரைகள் சில...

**நல்லதைக் கற்றுத் தருபவரே சிறந்தவர்.**

பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஓர் அறிஞரைப் பற்றியும் ஒரு ஞானியைப் பற்றியும் கேட்கப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் **"ஞானியை விட அறிஞரே சிறந்தவர் என்று சொல்லி வானம் பூமியில் வாழக்கூடிய அனைத்தும், புற்றிலுள்ள எறும்பு முதல் கடலிலுள்ள மீன் வாழிகளும் மனிதர்களுக்கு நல்லதைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் மீது ஸலாம் (வாழ்த்து) சொல்கின்றன"** என்று கூறினார்.

**காலத்தை வீணாக்காதே**

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பிரசங்கத்தின் போது சொன்னார்கள் "மானிடனே! 5 நிலைகளுக்கு முன் 5 நிலைகளை கிடைத்தற்கரிய நேரங்களாகப் பயன்படுத்திக் கொள்.

1) மரண நிலைக்கு முன் உயிருள்ள நிலையைப் பயன்படுத்திக்கொள்
2) நோய்களுக்கு முன் ஆரோக்கிய நிலையைப் பயன்படுத்திக் கொள்.
3) வேலைகளில் ஈடுபட முன் ஓய்வான நேரத்தை பயன்படுத்திக்கொள்.
4) வயோதிபம் ஏற்படுவதற்கு முன் வாலிபநிலையை பயன்படுத்திக் கொள்.
5) ஏழ்மைக்கு முன் செல்வ நிலையை பயன்படுத்திக் கொள்

இந்த 5 நிலைகளையும் கிடைத்தற்கரிய நேரங்களாக ஏற்று அதில் நற்காரியங்களில் ஈடுபட வேண்டும்" என்று உபதேசம் செய்தார்.

**அளவுக்கு அதிகமாக உண்பது ஆபத்தை விளைவிக்கும்.**

பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் **"நீங்கள் வயிறு புடைக்க உண்ணுவதிலும் குடிப்பதிலும் எச்சரிக்கையாக இருங்கள். அவ்வாறு உண்ணுவதும் குடிப்பதும் உடம்புக்கு கெடுதல் விளைவிக்கும், வயிற்று நோயை ஏற்படுத்தும், தொழுவதற்கு சோம்பலை உண்டாக்கும். அதுபோல் வீண் செலவுகள் செய்வதிலும் எச்சரிக்கையாக இருங்கள். அது அழிவை ஏற்படுத்தும், வறுமையை உண்டாக்கும். ஆகவே இவை இரண்டும் மனிதனின் வாழ்க்கை வெற்றிக்கு இடையூறாகவே இருக்கும்"** என்று கூறினார்கள்.

**M.S.F.சமீரா**
**125/12/Sci/01**
விஞ்ஞானப்பிரிவு
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுகையின் முக்கியத்துவம்

முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளுள் மிக முக்கியமானதும், முதன்மையானதுமான கடமை தொழுகையாகும். இதுவே முஸ்லிம்களின் அடையாளம் ஆகும்.

**"தொழுகைகளையும், நடுத்தொழுகையையும் பேணிக் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நில்லுங்கள்!"**

**(அல்குர்ஆன் 2:238)**

**"நம்பிக்கை கொண்டோர் மீது தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகவுள்ளது"**

**(அல்குர்ஆன் 4:103)**

இது போன்ற ஏராளமான குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் தொழுகையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளின் ஒன்றான தொழுகையினை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடமுடியாது. அதாவது நோய் ஏற்பட்டால் அதன் போது தொழுவதற்கு இஸ்லாம் பல சலுகைகளை வழங்கியுள்ளன. அதாவது, நின்று தொழ முடியாதவர் அமர்ந்தும், அமர்ந்து தொழ முடியாதவர் படுத்தும் தொழலாம். இதன் மூலம் தொழுகையானது எவ்வளவு முக்கியமானதும், கட்டாயமானதும் என தெளிவாக அறியலாம்.

**"(முஹம்மதே!) வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்படுவதைக் கூறுவீராக! தொழுகையை நிலைநாட்டுவீராக! தொழுகை வெட்கக் கேடான காரியங்களை விட்டும், தீமையை விட்டும் தடுக்கும். அல்லாஹ்வை நினைப்பதே மிகப்பெரியது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்"**

**(அல்குர்ஆன் 29:45)**

தொழுகையானது வெட்கக்கேடான காரியங்களை விட்டும், நரக வேதனைகளை விட்டும் எங்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது என்பதனை மேலுள்ள அல்-குர்ஆன் வசனங்கள் நமக்கு தெளிவுபடுத்துகிறது.

மேலும், தொழுகையை நிலைநாட்டுவதன் மூலமாக பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. நன்மைகள் கிடைக்கின்றன, துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன, கப்ரில் (புதைகுழி) ஒளி கிடைக்கின்றது, உள்ளமும் நாவும் ஒன்றுபடுகிறதோடு மனம் விரிவடைகிறது. ஆயுள் அதிகரிக்கின்றது. அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்கின்றது. பாவங்கள் செய்வதை விட்டும் பாதுகாப்பு கிடைக்கிறது. அத்தோடு அல்லாஹ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கம் கிடைக்கின்றது எனப் பல நலன்களை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

**"ஐவேளைத் தொழுகை, ஒரு ஜும்ஆவிலிருந்து மறு ஜும்ஆ ஆகியன அவற்றுக்கிடையில் ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரங்களாகும். பெரும் பாவங்களைத் தவிர" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**அறிவிப்பர் : அபூஹுரைரா (ரலி)**
**நூல் : முஸ்லிம்**

மேலுள்ள ஹதீஸும் தொழுகையின் நன்மைகளை நமக்கு தெளிவுபடுத்துகிறது. மேலும், தொழுகையை கைவிடுவதும் நரகத்தை நோக்கி செல்ல வழிவகுக்கும் என்பதனை பின்வரும் ஹதீஸ் மூலம் நாம் அறியலாம்.

**"ஒரு மனிதரின் தலை நசுக்கப்படுவதை நபி(ஸல்) அவர்கள் கனவில் கண்டார்கள். அதுபற்றி அவர்கள் விளக்கும் போது "அவர் அல்குர்ஆனைக் கற்று, அதைப் புறக்கணித்து, கடமையான தொழுகையை தொழாமல் உறங்கியவர்" என்று கூறினார்கள்.**

**அறிவிப்பர் : ஸமுரா (ரலி)**
**நூல் : புகாரி**

எனவே, தொழுகையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதன் பலன்களைப் பெற தொழுகையை நிலைநாட்டுவோமாக!

**F.[f]பஸானா [B]பிஸ்ருடீன்**
**08/12/Com/08**
வர்த்தகப்பிரிவு - **A**
1ம் வருடம்

## English Union Presient Message

It is with great joy that I give this message for "AL - FALAH" magazine published by the Muslim Majilisul Islam. May almighty god be the success of your great effort.

I wish you all cordially and assurance of prayers on behalf of the English Union.

**J.Steepan**
VNCOE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறம் பேசுவதன் விபரீதங்கள்

மனிதனுக்கு அல்லாஹ்வினால் ஏராளமான அருட்கொடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மனிதனின் உடல் உறுப்புக்கள், அனைத்தையும் விட முதன்மையானது ஆகும். அதில் தான் கற்பனை செய்கின்ற விஷயங்களை, சிந்திக்கின்ற விஷயங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுகின்ற மிக மிக முக்கிய உறுப்பாக மனிதனின் நாவு விளங்குகிறது.

இந்த நாவு, ஒரு மனிதன் உலகில் மக்களுக்கு மத்தியில் நல்லொழுக்கம் உள்ளவனாகவும், நல்லவனாகவும் தோன்றுவதற்கு காரணமாக அமைகின்றது. இதேபோன்று ஒரு மனிதனை மிக மோசமானவனாகவும் ஒழுக்கம் கெட்டவனாகவும் மாற்றுவதற்கு இந்த நாவு காரணமாக அமைகின்றது. நாவின் மூலம் செய்யக்கூடிய பாவங்கள் ஏராளமானவை. அவற்றில் மற்றவர்களைப் பற்றி புறம் பேசுவது என்பது சமூகத்திற்கு மத்தியில் முதன்மையாகவே விளங்குகின்றது.

**புறம் என்றால் என்ன?**

புறம் என்றால் என்ன? என்பதற்கு சிறந்த ஒரு வரைவிலக்கணத்தை நபி(ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

**"புறம் என்றால் என்னவென நீங்கள் அறிவீர்களா?"** என நபி(ஸல்) அவர்கள் கேட்டபோது அல்லாஹ்வும் அவனது தூதரும் நன்கறிவர் என நபித் தோழர்கள் கூறினர். அப்போது நபி(ஸல்) அவர்கள் **"உன்னுடைய சகோதரன் வெறுப்பதை நீ கூறுவதுதான் புறம்"** என்கிறார்கள். நான் கூறுவது என்னுடைய சகோதரனிடம் இருந்தால் அதுவும் புறமாகுமா? என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள் **"நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம் இருந்தால் நீ அவனைப் பற்றிப் புறம் பேசுகிறாய். நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம் இல்லையெனில் நீ அவனைப் பற்றி இட்டுக்கட்டுகிறாய் (அவதூறு கூறுகிறாய்)"** என்றார்கள்.

**(அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி) நூல் : முஸ்லிம்)**

**புறம் பேசுவது பெரும்பாவமாகும்!**

புறம் பேசுவது பெரும் பாவங்களில் ஒன்றாகும். தொழுகை, நோன்பு, ஸக்காத் இதர நல்லமல்கள் ஒன்றுமே இதற்கு ஈடாகாது! ஒரு மனிதன் வெறுக்கக்கூடிய எதனைப்பற்றிக் குறிப்பிட்டாலும், அது புறம் பேசுவதே ஆகும். உதாரணமாக குள்ளன், நெட்டையன், குருடன், செவிடன் போன்ற உடல் சார்ந்த அனைத்துமே இதில் அடங்கும். ஒருவனைப்பற்றி அவன் அவ்விடத்தில் இல்லாதிருக்கும் போது அவன் பொய்காரன், மோசமானவன் என்றோ குறிப்பிடுவதும் இதில் அடங்கும். இதனால் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்கள் **"நீ கூறுவது அவனில் இருந்தால் அது புறம்பேசுவதாகும்"** என்று கூறினார்கள். இவ்வாறு ஒருவரது குறையை மற்றவர்களிடத்தில் பேசுவது தான் புறம் பேசுதலாகும். அவ்வாறு பேசப்படுகின்ற குறைகள் குறிப்பிட்ட மனிதரிடம் இல்லையென்றால் அது அவனைப்பற்றிக் கூறிய அவதூறு / இட்டுக்கட்டாகும்.

**மறுமையில் மிகப்பெரிய நஷ்டவாளியாக நேரிடும்!**

புறம் பேசுவது என்பது இவ் உலகில் தீய காரியங்களுக்கு எவ்வாறு காரணமாக அமைகின்றதோ அதேபோன்று மறுமையில், நாம் நன்மைகள் பல செய்திருந்தாலும் ஒரு நன்மைகூட பயனளிக்காத நஷ்டவாளிகளாக்கி விடக்கூடிய அளவிற்கு தீமை நிறைந்ததாக இருக்கின்றது. மறுமையில் நஷ்டவாளிகள் யார் என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களிடத்தில் உங்களில் நஷ்டவாளி யார்? என்று தெரியுமா? என்று கேட்டார்கள். (அதற்கு அவர்கள்) எங்களில் (எங்களிடத்தில்) உலகத்தில் வாழ்வதற்கு வசதி வாய்ப்பும் இல்லையோ அவர்களே நஷ்டவாளி என்று குறிப்பிட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள்,

**"மறுமை நாளில் ஒரு மனிதன் தொழுகை, நோன்பு, ஸக்காத் போன்ற நல்லறங்களுடன் வருவான். ஆனால் பலர் வந்து இவன் என்னை ஏசியவன், நான் செய்யாத விஷயத்தை என் மீது சுமத்தியவன், எனது செல்வத்தை சாப்பிட்டவன், இரத்தங்களை ஓட்டியவன், அடித்தவன் என்றெல்லாம் அவனுக்கு எதிராக முறையீடு செய்வார்கள். அப்போது அவன் இவ்வுலகில் செய்த நல்லமல்களை எடுத்து அவர்களுக்கு கொடுக்கப்படும். நல்லமல்கள் முடிந்த பிறகு அவர்களின் தீமைகளிலிருந்து எடுக்கப்பட்டு இம்மனிதனுக்குக் கொடுக்கப்படும். இவ்வாறு அவன் நரகத்திற்கு நுழைவிக்கப்படுவான்."**

**(ஆதாரம் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான்)**

இந்த நபிமொழி மறுமையில் புறம் பேசியவனுக்கு கொடுக்கப்படும் கூலியை தெளிவாகவே கூறுகின்றது. முதல் காரியமாக நாம் மற்றவர்களின் குறைகளைப் பற்றி அலசி ஆராய்ந்து அவற்றைக் களைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**மேலும் புறத்தைப் பற்றி அல்லாஹ் கூறும்போது "முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும்; (பிறர் குறைகளை) நீங்கள் துருவித்துருவி ஆராய்ந்து**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொண்டிராதீர்கள்; அன்றியும் உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள், நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபை செய்பவன்"**

**(அல்குர்ஆன் 49:12)**

இந்த அல்குர்ஆன் வசனத்திற்கும் புறத்திற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? ஏன் அல்லாஹ் மரணித்த சகோதரனின் இறைச்சியைப் புசிப்பதை புறம் பேசுவதோடு ஒப்பிட வேண்டும்? ஒரு மனிதன் பிறிதொருவனைப் பற்றி அவன் அங்கு இல்லாதபோது குறை கூறுகின்றபோது குறை கூறப்படுகின்ற மனிதனால் நிச்சயமாக அதைத் தடுக்க முடியாது. இதே போன்று தான் மரணித்த ஒருவனின் மாமிசத்தை வெட்டும் போதும் மரணித்தவனால் அதைத் தடுக்க முடியாது. புறம் பேசுவதும் இது போன்று ஒரு கொடுமையான செயல் என்பதை நாம் விளங்கிக் கொள்ளமுடியும். இவ்வாறு குறைகூறி இருந்தால் இத்தகைய பெரும் பாவத்திலிருந்து மீண்டு வந்து அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கோர வேண்டும். என்பதை இவ்வசனம் போதிக்கின்றது.

**நாவைக் கட்டுப்படுத்துவோம்! பாவங்களைத் தவிர்ப்போம்!**

நமக்குத் தெரியாத விஷங்களை விட்டும், அத்தகைய செய்திகளை வதந்திகளாகப் பரப்புவதை விட்டும் நாம் முற்றாக தவிர்ந்து கொள்ள வேண்டும். இவர் சொன்னார், அவர் சொன்னார் என்ற வார்த்தைகளை முற்றாகவே தவிர்க்க வேண்டும். நாம் பேசும் போது அளந்து பேச வேண்டும். நாம் பேசுகின்ற ஒவ்வொரு விஷயத்திலும் ஏதாவது தவறு இருக்கின்றதா? அல்லது பிறரை துன்புறுத்தும் வகையில் நமது பேச்சுக்கள் அமைகின்றதா? என்று கவனத்துடன் பார்க்க வேண்டும்.

**"நாம் பேசக்கூடிய அனைத்து விஷயங்களுமே பதிவு செய்யப்பட்டுக் கொண்டே இருக்கின்றன."** என்பதை நாம் ஒரு கணமும் மறந்துவிடக்கூடாது.

**(அல்குர்ஆன் 50:18)**

நாம் பேசுகின்ற விடயம் நல்லதாக இருந்தாலும் தீயதாக இருந்தாலும் பதியப்படுகின்றது என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது. இதனால் நியாயத் தீர்ப்பு நாளில் இவைகள் பரிசீலிக்கப்பட்டு அதற்குத் தக்கவாறு தகுந்த கூலி கொடுக்கப்படும். இதனால் நாம் மிகுந்த கவனமுடன் நடந்து கொண்டு நமது நாவைக் கட்டுப்படுத்தி மறுமையில் நஷ்டவாளியாவதை விட்டும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையையும் பிரயோசனமுள்ளதாகவே பேச வேண்டும். பிறரை புறம் பேசும் வார்த்தையாக இல்லாமல் இருக்க வேண்டும். முடிந்தவரைக்கும் நல்லவைகளையே பேச வேண்டும். முடியாவிட்டால் மௌனமாக இருக்க முயல வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**"யார் ஒருவர் அல்லாஹ்வையும் மறுமைநாளையும் விசுவாசம் கொள்கின்றாரோ அவர் பேசினால் நல்லதையே பேசட்டும். அல்லது மௌனமாக இருக்கட்டும்"**

**(அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புகாரி)**

**M.F.F.ʿபிக்ரியா**
**20/12/Com/20**
**வர்த்தகப்பிரிவு - B**
**1ம் வருடம்**

# வாழ்த்துச் செய்தி

வான்மைத்துவமிக்க ஆசிரியராகவும், நல்லாசிரியராகவும் திகழ ஆசிரியரானவர் எல்லா மாணவர்களிடமும் பாகுபாடு இன்றி கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். அவ்வகையில் முஸ்லிம் மஜ்லிஸுல் இஸ்லாம் வெளியிடும் அல் - ʿபலாஹ் எனும் நூல் பல்லினச் சமூகம் உள்ள வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் வெளியிடப்படுவது என்பது ஓர் பாராட்டத்தக்க விடயமாகும். இதன் மூலம் இஸ்லாமிய சமய கலாச்சார விடயங்களை ஏனைய மதத்தவர்களும் அறிந்து எதிர்காலத்தில் நல்லாசிரியராக திகழ உதவிபுரியும் எனக்கூறி இம்முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

**N.கலைச்செல்வன்**
சமூகவியல் மன்றத்தலைவர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரத்துவம்

அழகிய நற்போதனைகளையும் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக்காட்டும் இஸ்லாம் சகோதரத்துவம் என்னும் உயர்ந்த அம்சத்தையும் உணர்த்துகின்றது. சகோதரத்துவம் பற்றி அல்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையும் போதனையும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. நாம் மனித இனத்தை எடுத்துக்கொண்டால், அல்லாஹ் நம்முடைய மூதாதையரான தகப்பன் ஆதம் (அலை), தாய் ஹவ்வா (அலை) ஆகிய இருவரில் இருந்தே மனிதனைப் படைத்து சந்ததிகளாக்கி மனித குலத்தை உருவாக்கினான். இதை அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகையில்,

**"மனிதர்களே! உங்களை ஓர் ஆணிலிருந்தும் ஓர் பெண்ணிலிருந்தும் நாம் படைத்தோம் பின்னர் ஒருவர் மற்றொருவரை அறிந்து கொள்ள உங்களை கிளைகளாகவும் குலங்களாகவும் வகுத்தோம்"**

எனக் குறிப்பிடுகின்றான். இதன் மூலம் மனித குலம் முழுவதும் ஒரே தாய் தந்தையின் பிள்ளைகள் எல்லோரும் சகோதரர்கள் என்று தெளிவாக விளக்குகின்றது.

மேலும் நபியவர்கள் இது பற்றிக் கூறும் போது "**படைப்புக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பமாகும். எனவே படைப்புக்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவர் அவரது குடும்பத்துடன் மிக அன்னியோன்னியமாக இருப்பவர் ஆவார்**"

என குறிப்பிடுகின்றார்கள். அதாவது ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இருப்பதாகும்.

பிற சமூகத்தவராயினும் நாம் எல்லோரும் சகோதரர்கள் என்று எண்ணி செயற்படல். அவர்கள் மீது அன்பு கொண்டு அவர்களை மதித்து நடத்தல், குற்றம் செய்தோரை மன்னித்துவிடல், விட்டுக்கொடுத்தல், நல்லவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், பொறுமையை கைக்கொள்ளல் போன்ற நற்பழக்கங்கள் சகோதரத்துவத்தை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

முஸ்லிம்களாகிய நாம் நம்மிடையேயும் மற்ற மதத்தவர்களுடனும் சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஐங்கால தொழுகையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமாத்துடன் சேர்ந்து நிறைவேற்றும் போது வெள்ளையன், கறுப்பன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி இறைவனின் முன்னிலையில் எல்லோரும் சமமானவர்கள். சகோதரர்கள், உறவினர்கள் என்ற எண்ணம் மேலோங்கும். இதனால் சகோதரத்துவமும் பேணப்படும். மேலும் எமது அண்டைய வீட்டார் பிற மதத்தவராயினும் சமைக்கும் உணவுகளை பரிமாற்றிக் கொள்ளல், தன் வீட்டு விஷேசங்களுக்கு அவர்களை அழைத்தல், சுகதுக்கங்களில் பங்குகொள்ளல் போன்ற செயற்பாடுகள் மூலமும் சகோதரத்துவம் வளரும்.

பிறர் வழிபடும் தெய்வங்களை குறை கூறுவது சகோதரத்துவத்தை சீர்குலைக்கும், பெரும் கலங்கத்தை ஏற்படுத்தும். அல்லாஹ் இதுபற்றி எமக்கு சிறந்த அறிவுரை கூறியுள்ளான்.

**"அல்லாஹ் அல்லாத அவர்கள் வணங்கும் தெய்வங்களை நீங்கள் தூற்றாதீர்கள்"**

எனவே இன, நிற, சமய, மொழி வேற்றுமைகளை மறந்து மனித இனம் ஒற்றுமைப்பட வேண்டியது அவசிமாகும். அப்படியானால் தான் சகோதரத்துவம் வளருமே தவிர ஒற்றுமை சீர்குலையாது. எனவே நாமும் சகோதரத்துவம் என்ற உயர்ந்த பண்பை தங்களுக்கிடையே வளர்த்து ஈருலகிலும் வெற்றி அடைவோமாக.....!

**M.S.அனீஸா**
**12/12/Com/12**
வர்த்தகப்பிரிவு - B
1ம் வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசலின் சிறப்புகளும்
# ஆற்றவேண்டிய அமல்களும் (நன்மைகளும்)

அல்லாஹ்வுக்கு விருப்பமான இடங்களில் பள்ளிவாசல்கள் அமைந்து இருக்கும் இடங்களும் ஒன்றாகும். அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்பவர்கள், அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு, தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தையும் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் அஞ்சவில்லையோ அவர்கள் தான் அத்தகையோர் நேர்வழி பெற்றவர்களில் நின்றும் இருக்கப்போவதுமானவர்கள்.

பள்ளிக்குரிய கண்ணியம், குளிப்பு கடமையானவர் பள்ளியில் நுழையாமல் இருப்பது, அசுத்தமான பொருளை பள்ளியில் கொண்டு செல்லாமல் இருப்பது, கூச்சல் குழப்பம் செய்யாமல் இருப்பது, உலக சம்பந்தமான பேச்சுக்களை பேசுவதோ, உலக சம்பந்தமான வேலைகளை செய்வதோ கூடாது, துர்வாடை வரும் பொருள்களை சாப்பிட்டு பள்ளியில் நுழைவதும் கூடாது. மேலும் கீழ் வரும் ஹதீஸ்கள் பள்ளிவாசலின் சிறப்புக்களைக் கூறுவதனைக் காணலாம்.

**"எல்லா இடங்களைக் காட்டிலும் அல்லாஹுதஆலாவுக்கு மிக விருப்பமான இடம் பள்ளிவாசல்கள், மிக வெறுப்பான இடம் கடைவீதிகள்" (முஸ்லிம்)**

**"பூமியில் அல்லாஹுதஆலாவின் வீடுகள் மஸ்ஜிதுகள், பூமியில் இருப்போருக்கு நட்சத்திரங்கள் மின்னுவது போல் வானில் உள்ளோருக்கு பள்ளிகள் மின்னுகின்றன" (தபரானீ, மஜ்மஉஸ்ஸவாயித்)**

**"அல்லாஹுதஆலாவை நினைவுகூரக்கூடிய பள்ளியொன்றை எவரொருவர் கட்டுவாரோ, அவருக்காக அல்லாஹுதஆலா சுவனத்தில் மாளிகை ஒன்றைக் கட்டுகிறான்" (இப்னு ஹிப்பான்)**

**"காலை, மாலை பள்ளிக்குச் செல்வது அல்லாஹுதஆலாவின் பாதையில் தியாகம் செய்வதைச் சார்ந்தது" (தபரானீ, மஜ்மஉஸ்ஸவாயித்)**

**"எவர் பள்ளியை நேசிப்பாரோ அவரை அல்லாஹுதஆலா நேசிக்கிறான்" (தபரானீ, மஜ்மஉஸ்ஸவாயித்)**

**N.M.ஃபாத்திஹ்**
**51/12/PE/06**
உடற்கல்விப்பிரிவு
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜதாவின் மகத்துவம்

சஜதா எனப்படும் 'சிரம்பணிதல்' தொழுகையின் மிக முக்கிய அம்சமாகும். சஜதா நமது சிந்தனைகளையும் நரம்பு மண்டலங்களையும் உயிர்த்தெழ வைக்கிறது. உண்மையில் சஜதாவில் நாம் இருப்பது சில நிமிடங்கள் தான். எனினும் அந்தச் சில நிமிட நேரத்திலேயே நம் உடம்புக்குள் நம்மையும் அறியாமலேயே பல மாற்றங்களை அது ஏற்படுத்தி விடுகிறது.

நமது இரத்த ஓட்டத்தைச் சீராக்கி மூளையின் எழுச்சியைச் சுண்டிவிடுகிறது. மற்ற உடற்பயிற்சிகளிலெல்லாம் இல்லாத ஒன்று இந்த சஜதா வணக்கத்தில் உள்ளது. அதாவது, இரத்த ஓட்டத்தைச் சீராக்குதல், நரம்புகளை உசுப்பி விடுதல் ஆகிய இரண்டையுமே ஒரேசமயத்தில் ஏற்படுத்தும் பயிற்சி இது ஒன்றுதான். சஜதாவில் மட்டுமே இது நிகழ்கிறது. ஆகவே இவ்வாறான சஜதாவினால் பெறும் மகத்துவங்கள் பின்வருமாறு.

1) இரத்த ஓட்டத்தை மூளையின் எல்லாப் பகுதிகளுக்கும் விநியோகித்து மூளையை வலுப்படுத்துவதோடு பார்வையையும் கூர்மைப்படுத்துகிறது.

2) சஜதாவில் நாம் இருக்கும் போது நமது கைகளுக்கும் நெற்றி, முகம், நெஞ்சு, இருதயம் ஆகிய பகுதிகளுக்கும் புவியின் ஈர்ப்புச் சக்தியை அதிகப்படுத்துகிறது. சில விநாடிகள் குனிந்து நிமிர்ந்தவுடன் நிலமை பழைய நிலைக்கு வந்துவிடுகிறது. தரையில் குனிந்து நிமிர்வது சில விநாடிகள்தான் என்றாலும், அந்தச் சில விநாடி அழுத்தமே சக்தி வாய்ந்ததாய் அமைந்து நரம்பு மண்டலச் சுவர்களுக்குப் போதிய அளவு விரிவையும் சுருக்கத்தையும் உண்டாக்கி ஒருவித இணக்க நிலையை ஏற்படுத்துகிறது. 'அல்ஹம்துலில்லாஹ்' அதன்மூலம் கண்பார்வையையும், செவி நுகர் ஆற்றலையும் கூட நெறிப்படுத்துகிறது.

3) நுரையீரல்களுக்கு நடுவே நமது இருதயம் இருப்பதால் சஜதா இயல்பாகவே அந்த நுரையீரல்களையும் பாதிக்கிறது. இருதயநோய் வழக்கமாக நுரையீரலையும் தாக்குவதை நாம் அறிவோம். அதனால்தான் மூச்சுவிடும் பிரச்சினையும் எழுகிறது.

4) அண்மையில் சீன விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஓர் ஆய்வின் முடிவு இது. அதாவது, நெற்றியின் நடுமத்திய பகுதியை தரையில் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தொடர்ந்து அழுத்தினால் மன அழுத்த நோய் அகன்று விடுகிறது. சஜதாவில் அதைத்தான் நாம் செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) சஜதாவில் நமது முழங்கால், கை, கணுக்கால் பகுதிகள் நமது உடம்பின் முழு எடையையும் தாங்குவது எப்படி? நமது இடையும் அடி வயிறும் தான் அந்தப் பணியைச் செய்கின்றன. இதனால் இடை மற்றும் அடிவயிற்று திசுக்களுக்கும் அந்தப் பயிற்சி வலுவேற்படுத்துகிறது. அதன் வழி நமது முதுகெலும்பையும் வலுவாக்கி ஒருவித சுவாரஷ்யத்தை ஏற்படுத்துகிறது. நமது அடிவயிறு வரண்டிருந்தாலும் கூடுதல் கொழுப்புடன் அதிக ஈரமாக இருந்தாலும் தொழுகைப் பயிற்சி ஓரளவு சமப்படுத்துகிறது. வயிற்றுப் பிரச்சினைக்கு தொழுகை உதவுகிறது என்பது நிச்சயம்.

6) நமது மூளையின் காற்றடைத்த சிறு சிறு அடைப்புகள் இருக்கின்றன. சளிக்காய்ச்சல் வரும் போது அந்தக் காற்றுத்தான் நீராக வெளியில் வழிகின்றது. இந்த வெளிப்பாடு இல்லாவிட்டால் அதுவே அதிகமாகி காது மற்றும் தொண்டை பிரச்சினையையும் ஏற்படுத்தி தலைவலியும் உண்டாகும். நாம் சஜதாவில் இருக்கும் போது இந்த நீர் வெளிப்பாடு இயற்கையாகவே நிகழ்ந்து, அதன் விளைவாக பல குழப்பங்களைத் தவிர்க்கிறது.

7) இறுதியாக ஆனால் உறுதியாக ஒன்று, நாம் சஜதாவில் தரைமீது நமது நெற்றியைக் கிடத்தும் போது மூளை அலைகள், மின்சார அலைகளாக மாறி நேரடியாக மூளையின் நரம்புகளுக்குப் பாய்ந்து அதனை வலுவாக்கி அமைதியை ஏற்படுத்துகின்றது. அந்த அமைதி நமது வயிற்றுக்கு மிக அவசியம். வயிறு அதிகமான அமிலங்களை வெளிப்படுத்துவதைத் தவிர்ப்பது அந்த அமைதி தவழும் மூளைதான். குழப்பகரமான மூளையால் வயிற்றில் அமிலங்கள் கொப்பளிப்பதை நாம் உணரலாம். அதனால் 'அல்சர்' எனப்படும் வயிற்றுப்புண்ணுக்கும் சிறந்த மருந்து ஒழுங்கான சஜதா தொழுகைதான்.

8) நமது முகத்துக்கு ஒரு வசீகரத்தை ஏற்படுத்தி நம் ஆளுமையை உயர்த்திடவும் இந்த சஜதா உதவுகிறது. அதனால் நாம் ஒழுங்காகத் தொழுவதன் மூலம் நிறைவாக மன்னிப்பைக் கோருவதோடு பல நோய்களிலிருந்தும் தீர்வு காணுவோம்.

**S.ஃபாதிமா ஸஃப்லா**
**163/12/Sci/12**
**விஞ்ஞானப்பிரிவு**
**1ம் வருடம்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய ஆதாரங்கள்

**பிர்அவ்னுடைய சடலத்திற்கு ஆதாரம்**

நபி மூஸா (அலை) அவர்கள் காலத்து பிர்அவ்னுடைய வரலாற்றை அல்லாஹ் திருக்குர்ஆனில் அத்தியாயம் 10, வசனங்கள் 75 முதல் 93 வரை விபரிக்கின்றான். பிர்அவ்ன் செய்த அட்டூழியங்கள், நபி மூஸா (அலை) அவர்களுக்கு விரோதமாகச் செய்த கொடுமைகள் இறுதியில் நைல் நதியில் அவனும், அவனின் கூட்டத்தினரும் மூழ்கடிப்பபப்பட்ட விடயங்களையும் விவரித்துள்ளான்.

"எனினும் உனக்குப் பின்னுள்ள வாரிசுகளுக்கு ஓர் அத்தாட்சியாவதற்காக உன்னுடைய தேகத்தை அது (அழியாமல்) நாம் இன்றைய தினம் பாதுகாத்துக் கொள்வோம். (என்று கூறினோம்) எனினும் நிச்சயமாக மனிதர்களில் அநேகர் நம்முடைய (இத்தகைய) சான்றுகளைப் பற்றியும் பாராமுகமாகி இருக்கின்றனர்." என அதே வசனத் தொடரில் 92ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்.

அல்லாஹ் குறிப்பிட்ட இந்தச் சான்றான பிர்அவ்னுடைய சடலம் 'எகிப்து' நாட்டின் தலைநகரான 'கெய்ரோ'விலுள்ள அருங்காட்சியகத்தில் ஒரு கண்ணாடிப் பெட்டியினுள் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. கறுத்து, சுருங்கிப்போன நிலையில் இன்றும் அவன் சடலத்தை அங்கு கண்கூடாகக் காணலாம்.

**குகைத் தோழர்களின் ஆதாரம்**

இதேபோன்று 'அஸ்ஹாபுல் கஹ்ப்' - குகைத் தோழர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுவதாவது, **"(நபியே! அஸ்ஹாபுல் கஹ்ப்; என்னும் குகையுடையவர்களைப் பற்றி யூதர்களும் உம்மிடம் கேட்கின்றனர்) அந்தக் குகையுடையவர்களும், சாஸனத்தை யுடையவர்களும் நிச்சயமாக நம்முடைய அத்தாட்சிகளில் ஆச்சரியமானவர்களாக இருந்தனர் என்று எண்ணுகின்றீரே அவர்களின் சரித்திரத்தைக் கூறுகிறோம்"** இவ்வாறு அத்தியாயம் 18 வசனம் 09 முதல் 26 வரை விபரித்துள்ளான்.

இவ்வாறு ஆரம்பித்து மிக இரத்தினச் சுருக்கமாக 17 வசனங்களில் ஒரு நீண்ட வரலாற்றைச் சுருக்கி கூறுகிறான். ஆராய்ச்சியாளர்கள்: 'சிரியா' நாட்டுப்பகுதியிலுள்ள மலைப்பிரதேசங்களில் இந்தக் குகையைக் கண்டுபிடித்து சிறிது தூரம் உள்ளே சென்றவர்கள் திகிலடைந்து வெளியே ஓடி விட்டுள்ளனர். இதனையும் ஓர் அழகான அத்தாட்சியாகவே எடுத்துக்கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திரன் பிளந்ததற்குரிய ஆதாரம்**

“மறுமை நெருங்கிவிட்டது. (அதற்கு அறிகுறியாக) சந்திரனும் பிளந்துவிட்டது. எனினும், அவர்கள் அந்த அத்தாட்சியைக் கண்டபோதிலும் (அதனை) புறக்கணித்து: இது தொடர்ந்த சூனியந்தான் என்று கூறுகின்றனர்” **(அத்தியாயம் 54 வசனம் 1,2)**

சந்திரன் பிளந்ததை அச்சமயம் அபூஜஹல் மட்டும் பார்க்கவில்லை. அவனைச் சார்ந்தோரும் பார்த்தனர், அண்ணலாரைச் சார்ந்தவர்களும் பார்த்தனர். அக்காலத்து மலையாளத்து மன்னர் சேரமான் பெருமானும், கள்ளிக் கோட்டையில் பார்த்து தம் நாட்குறிப்பில் இதனைக் குறித்து குறிப்பு எழுதி வைத்துள்ளனர். அண்மையில் சந்திர மண்டலத்தில் இறங்கிய விஞ்ஞானிகளும் ஒரு நீண்ட வெடிப்புக் கோட்டை நேரில் பார்த்தனர். எனவே இவ்வாறான பல விடயங்கள் எம்மால் ஆதாரங்களாக முன்வைக்க முடியும்.

**சமுத்திரம்,நதி ஆகியவற்றுக்கிடையே சுவர் உள்ளதற்கான ஆதாரங்கள்**

அவன்தான் இரு சமுத்திரங்களையும், ஒன்று சேர்ந்திருக்கின்றான் ஒன்று மிக்க இன்பமும், மதுரமுமான நீர், மற்றொன்று உப்பும் கசப்புமான நீர் இவ்விரண்டிற்கிடையில் (அவை) மீறமுடியாத ஒரு தடையை ஏற்படுத்தி யிருக்கின்றான். **(அத்தியாயம்.25 வசனம் 53)**

நான் உங்களிடம் 2 விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் நீங்கள் பலமாக பற்றிப்பிடித்துக் கொள்வீர்களாயின் நீங்கள் வழிதவறமாட்டீர்கள். அவை அல்குர்ஆனும், என் உரையுமாகும். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே நாம் மட்டும் கற்காமல் இதனை மற்றவர்களுக்கும் எத்தி வைப்போமாக, ஆமீன்

**S.A.M.வஸீம்**
**22/12/Com/22**
வர்த்தகப்பிரிவு - A
1ம் வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் ஆடை

முஸ்லிம் பெண்களின் உடை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக அமைய வேண்டும்.

1) அணியும் ஆடை முகத்தையும், மணிக்கட்டுக்கு கீழ் உள்ள கைகளின் பகுதிகளையும் தவிர்ந்த உடலின் ஏனைய எல்லாப் பாகங்களையும் முழுமையாக மறைத்தல் வேண்டும்.
2) ஆடை கனமானதாக இருத்தல் வேண்டும். மேனியை வெளிக்காட்டும் மெல்லிய துணியாக இருத்தல் கூடாது.
3) இறுக்கமில்லாத, உடலோடு ஒட்டியிராத தாரளமான பெரிய ஆடையாக இருத்தல் வேண்டும்.
4) மேலாடை அதிக அலங்காரமும், கவர்ச்சியுமுடையதாக இருத்தல் கூடாது.
5) நறுமணங்கள் பூசப்பட்டதாக இருத்தல் கூடாது.
6) ஆண்களின் உடைகளை ஒத்திருக்கக் கூடாது.
7) அந்நியரின் ஆடைகளை ஒத்திருக்கக் கூடாது.
8) புகழுக்கும், பிரபல்யத்திற்கும் உரியதும், தன்னில் கர்வத்தைத் தூண்டக் கூடியதுமான ஆடையாக அமையக்கூடாது.

ஓர் இஸ்லாமியப் பெண் வெளியில் செல்லும் போது மேற்குறிப்பிட்ட ஆடைகளையே அணிந்து செல்லல் வேண்டும்.

பெண்கள் மேற்குறிப்பிட்ட 'வுரிஆ' (இஸ்லாமிய சட்டவிதி) வரைறைகளையும் பேணி உடை அணிவதனால் அவர்கள் இம்மையிலும், மறுமையிலும் அடையும் நன்மைகளும், பயன்களும் அளப்பரியன.

உண்மையில் பெண்களுக்கு இஸ்லாம் வரையறை செய்துள்ள 'ஹிஜாப் உடை அவர்களுக்கு ஒரு கௌரவமாகும். அது அவர்களுக்கு சமூகத்தில் அந்தஸ்தையும், மதிப்பையும் பெற்றுக் கொடுக்கின்றது. ஒரு பெண்ணின் கற்பொழுக்கத்திற்கும், அடக்கத்திற்கும், நாணத்திற்கும் அவள் அணியும் ஹிஜாப் உடை சான்றாக அமைகிறது. இதனால் அவளைக் காண்போர் அவளை மதிக்கிறார்கள், கௌரவிக்கிறார்கள். கெட்ட எண்ணத்துடன் அவளை அணுக முனைய மாட்டார்கள். அந்தவகையில் ஹிஜாப் உடை பெண்ணின் பாதுகாப்பிற்கான உத்தரவாதமாக விளங்குகின்றது. இந்த உண்மையை அல்குர்ஆன் அழகாக சொல்கிறது.

**"நபியே! உங்களது மனைவிகள், உங்களது புதல்விகள், மற்றும் முஃமின்களின் மனைவியர் ஆகியோரிடம் கூறுவீராக! அவர்கள் தங்கள் முந்தானைகளை தம்மீது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போட்டுக் கொள்ளட்டும். இது அவர்களை அறியப்படுத்துவதற்கும், அவர்கள் தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருப்பதற்கும் மிகவும் ஏற்ற முறையாகும்."**

ஒரு பெண் ஹிஜாபைப் பேணாதபோது எவ்வாறு பாதுகாப்பை இழக்கிறாள் என்பதை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்.

**"எவரேனும் ஒரு பெண் தனது கணவனது வீடல்லாது மற்ற இடங்களில் தனது ஆடைகளைக் களைவாளாயின் அவள் தனக்கும் அல்லாஹ்வுக்குமிடையேயுள்ள தனக்கான பாதுகாப்பை, மறைப்பை தகர்த்துக் கொள்கிறாள்"**

இந்த ஹதீஸின் மூலம் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், ஒரு பெண் தனது ஆடைகளைக் களைவதன் மூலம், தனக்கிருந்த பாதுகாப்பை நீக்கி அந்நியருக்கு தனது அழகைக் காட்டும் போது அவள் அல்லாஹ்வின் பாதுகாப்பிலிருந்து நீங்கிக் கொள்கிறாள் என்பதாகும்.

*மேலும் பெண்கள் ஹிஜாப்* உடையை ஷரிஆ வரையறைகளைப் பேணி முறையாக அனுஷ்டிக்கின்ற போது சமூக உறுப்பினர்களும், சூழலும் தூய்மை பெற வழி பிறக்கிறது. ஹிஜாப் பார்வைக்குத் திரையிடுகிறது. தீய எண்ணங்கள் ஏற்படாமல் இருக்க வழிசமைக்கிறது. இதனால் உள்ளங்கள் தூய்மை பெறுகின்றன. அத்துடன் ஹிஜாப் நோயுற்ற உள்ளங்களுக்கு வேலியாகவும் அமைகிறது. காலக்கிரமத்தில் அத்தகைய உள்ளங்களும் கூட திருந்தி தூய்மையடைய வழிவகுக்கிறது.

**"(நபியின் மனைவியான) அவர்களிடம் நீங்கள் ஏதேனும் கேட்க வேண்டும் என்றால் திரைக்குப் பின்னாலிருந்து கேளுங்கள். உங்களதும், அவர்களதும் உள்ளங்களின் தூய்மைக்கு இதுவே ஏற்ற முறையாகும்".** **(ஆல இம்றான் : 53)**

இஸ்லாம் வெட்கம் எனும் பண்புக்கு கூடிய முக்கியத்துவமளிக்கிறது.

**"ஒவ்வொரு மதத்திற்கும் உரிய ஒரு விசேட ஒழுக்கப்பண்பு உண்டு. இஸ்லாத்திற்குரிய ஒழுக்கப் பண்பு வெட்கமாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.**

**(முவத்தா)**

**"வெட்கம் ஈமான் சார்ந்தது. ஈமான் சுவனத்திற்குரியது"** **(திர்மிதி)**

**"வெட்கமும் ஈமானும் ஒன்றோடொன்று இணைந்தவை. இவற்றுள் ஒன்றை எடுத்துவிட்டால் மற்றதும் எடுபட்டு விடும்"** **(ஹாக்கிம்)**

இந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த வெட்க உணர்வு ஆண்களை விட பெண்களிடம் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய வெட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வின் வெளிப்பாடாக இருப்பதே பெண்களுக்குரிய இஸ்லாமிய உடையாகும்.

ஆயிஷா (ரலி) அன்ஹா கூறுகிறார்.

**"ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், எனது தந்தையும் அடக்கம் செய்யப்பட்ட அறையினுள் நான் எனது மேலாடை இல்லாது பிரவேசிப்பது வழக்கமாக இருந்தது. அவர்கள் இருவரும் எனது கணவரும், தந்தையும் தானே என்ற கருத்திலேயே அப்படி நான் நடந்தேன். எனினும் உமர் (ரலி) அவர்கள் அங்கு அடக்கப்பட்ட பின் அதனால் எனக்கேற்பட்ட உச்ச உணர்வின் காரணமாக நான் மேலாடை இல்லாது அந்த அறையினுள் பிரவேசிப்பதில்லை" (இப்னு அஸாகிர்)**

இச்சம்பவத்திலிருந்து மரணித்தவருக்கு முன்னாலேயே அவர்கள் இப்படி நடந்துகொண்டார்கள் என்றால் உயிரோடிருப்பவர்களுக்கு முன்னால் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள் என்பதை ஊகிக்க முடியும்.

உண்மையில் அந்நிய ஆண்களுக்கு முன்னால் பெண்கள் இந்தளவு நாணத்துடனும், அடக்கமாகவும் நடந்து கொள்ளல் வேண்டுமென்பதை இஸ்லாமிய ஷரீஆவின் எதிர்பார்ப்பாகும்.

**"அல்லாஹ் நாணமிக்கவன், மிகவும் மறைந்திருக்கக் கூடியவன், அவன் வெட்கத்தையும் மறைப்பையும் விரும்புகிறான்" (அபூதாவூத்)**

இந்த ஹதீஸ் வெட்க உணர்வுக்கும், மறைத்தலுக்கும் இடையேயுள்ள இறுக்கமான தொடர்பை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

அனைத்துக்கும் மேலாக ஹிஜாப் ஈமானினதும் தக்வாவி (இறையச்சம்)னதும் வெளிப்பாடாக விளங்குகிறது. அல்லாஹ் அல்குர்ஆனில் ஈமான் கொண்ட பெண்களை விழித்துத்தான் ஹிஜாபை அணிவிக்குமாறு பணிக்கிறான்.

எனவே இஸ்லாமியப் பெண்கள் இஸ்லாம் கூறுகின்ற முறையில் ஆடைகளை அணிந்து இம்மையிலும், மறுமையிலும் வெற்றி பெற வேண்டும்.

**M.A.அ^B^புஹுறா**
**131/12/Sci/07**
விஞ்ஞானப்பிரிவு
1ம் வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையும் துக்கமும் ஆட்கொள்ளும் போது....

உங்களில் எவருக்கும் சிரமங்கள், துன்பங்கள் ஏற்பட்டால் பொறுமையுடனும் அமைதியுடனும் ஏற்றுக்கொள்ளுங்கள். எப்போதும் தைரியம் இழந்துவிடாதீர்கள். மேலும் துக்கம் மற்றும் கவலையை அளவுக்கதிகமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். உலகில் எந்த மனிதனும் துக்கம், கவலை, சோதனைகள், தோல்விகள், நஷ்டங்கள் மற்றும் இழப்புக்கள் ஆகியவற்றை விட்டும் அச்சமற்றவனாகவும், பாதுகாப்பு உடையவனாகவும் இருக்கமுடியாது.

ஆயினும் இறை நம்பிக்கையாளனுக்குப் பெரும் பெரும் விபத்து ஏற்பட்டாலும் அவன் பொறுமையை கைவிடுவதில்லை. பொறுமை மற்றும் நிலைகுலையாமையின் உருவாகத் திகழ்ந்து பாறை போல் உறுதியாக சத்தியப்பாதையில் நிலைத்து நிற்கின்றான். அவன் இவ்வாறு சிந்திக்கிறான். இறைவிதிப்படியே இவை அனைத்தும் நடக்கிறது. இறைவனின் எந்த ஒரு கட்டளையையும் விவேகம் மற்றும் நன்மை இல்லாமல் இருப்பதில்லை. அவனுடைய சிந்தனையானது இறைவன் எது செய்தாலும் மக்களின் நன்மைக்காகவே செய்கிறான். திண்ணமாக நன்மையின் அம்சம் இருக்கக்கூடும் எனும் அவனுடைய சிந்தனை இறைநம்பிக்கையாளனுக்கு ஆன்மீக அமைதியையும் மனத்திருப்தியையும் ஈட்டித் தருகிறது. துக்கம் மற்றும் கவலையில் ஆழ்வதிலும் அவனுக்கு ஒரு இன்பம் ஏற்படுகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்

**"எவன் ஒருவன் தன் ஆடைகளைக் கிழித்துக் கொள்கிறானோ, தம் கன்னங்களில் அறைந்து கொள்கிறானோ, மேலும் அஞ்ஞானக் காலத்தைப் போன்று வெறித்தனமாக கூச்சலிடுகின்றானோ மேலும் ஒப்பாரி வைத்து அழுகின்றானோ அவன் என் சமுதாயத்தவன் அல்லன்" (ஆதாரம் : திர்மிதி)**

எவன் ஒருவன் நோயையும், வேதனையையும் தாங்கிக் கொள்கின்றாரோ அத்தகைய இறைநம்பிக்கைாளர்களின் பாவங்கள் களையப்பட்டுவிடுகின்றன. மேலும் அவர் தூய்மை நிலையை அடைகின்றான். இன்னும் மறுமையில் அவருக்கு மாபெரும் நற்கூலி அருளப்பட இருக்கிறது.

எனவே எமக்கு எவ்வாறு சோதனைகள் மற்றும் துன்பம் ஏற்பட்டாலும் இறைநம்பிக்கையை கைவிடாது அல்லாஹ்விடம் எம்முடைய குறைகளை தீர்க்க பிரார்த்தனை செய்ய வேண்டும்.

**A.சாஹிதா [B] பானு**
**13/12/Com/13**
வர்த்தகப்பிரிவு - **B**
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியான வேளைகளில்....

இறைவன் எமக்கு வழங்கிய அருட்கொடைகளுள் ஒன்றே மகிழ்ச்சியாகும். மகிழ்ச்சியான வேளைகளில் மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். மனிதனுக்கு மகிழ்ச்சி என்பது மனிதனின் இயற்கை தேவையுமாகும். இறைநெறி மனிதனுக்கு இயற்கையான தேவைகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அதற்கு வழிகளைக் கற்றுத்தருகிறது. எந்நேரமும் சோகத்தில் மூழ்கி இருந்து தம் பண்பாட்டின் அழகை முறித்துக் கொள்வதை இறைநெறி ஒருபோதும் விரும்புவதில்லை. மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பம் அனைத்திலும் மகிழ்ச்சியைக் கொண்டாட முழு உரிமையும் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சியைக் கொண்டாடுவது இறைநெறியின் கண்ணியத்துக்கு ஏற்றதல்ல எனக்கருதுவது இறைநெறியை சரிவர புரிந்து கொள்ளாததன் விளைவே ஆகும்.

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

**"பெருநாளன்று சில சிறுமிகள் கூட்டமாக அமர்ந்திருந்தார்கள். அப்போது 'புஅஸ' யுத்தகளத்தில் - அன்சாரிகள் பாடிய சில பாடல்களை அவர்கள் பாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கு அபூபக்கர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். "நபி(ஸல்) அவர்கள் வீட்டில் பாடல் கச்சேரியா?" என்று அவர்களை அதட்டினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் அபூபக்கரே! அவர்களைப் பாடவிடும். ஏனெனில் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் மகிழ்ச்சியான பெருநாட்கள் இருக்கின்றன. இன்று நம்முடைய பெருநாள் அல்லவா!" எனக் கூறியுள்ளார்கள்.**

**(ஆதாரம் : புகாரி)**

திருக்குர்ஆன் இவ்வாறு எச்சரிக்கின்றது.

**"மேலும் அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருப்பவற்றை கண்டு நீங்கள் பூரித்து விடக்கூடாது. தம்மையே பெரிதாக நினைத்துக் கொள்கின்ற, பெருமை பேசித் திரிகின்ற யாரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை"**

**(திருக்குர்ஆன் 57:23)**

மேலும் சில ஹதீஸ்கள் மகிழ்ச்சியைப் பற்றி கூறுகின்றன.

**இறைவன் உங்களை மகிழ்ச்சிக்குரியவர்களாக ஆக்கட்டும்! உங்கள் இருவர் மீதும் தன்னுடைய பேற்றினை அருளட்டும். மேலும் மிகவும் அழகிய முறையில் உங்கள் இருவருடைய தொடர்பும் அமையட்டும்" (ஆதாரம் : திர்மிதி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்கேனும் திருமணம் நடந்தால் அதில் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கலந்து கொண்டு இவ்வாறு கூறுவார்கள்.

எனவே மகிழ்ச்சியான வேளைகளில் நாங்கள் ஒழுங்கான முறைகளை கடைப்பிடிப்பதும், ஏனையோரையும் மகிழ்வு செய்தலும் எம்மில் கடமையாகும். இன்னும் தம்முடைய ஒவ்வொரு செயலும் வாய்மையின் அடிப்படையிலே அமைந்துள்ளது. தம்மைத் தாமே சுயமதிப்பீடு செய்துகொண்டே இருங்கள்.

**M.U.F.றுமைஸா**
**167/12/Com/48**
வர்த்தகப்பிரிவு – B
1ம் வருடம்

# வாழ்த்துச் செய்தி

"நீ கற்றவற்றை உன்னிடமே வைத்திராதே
அதனைப் பிறரிற்கும் எடுத்துக் கூறு"

என்ற நபி அவர்களின் கூற்றுக்கிணங்க முஸ்லிம் மஜ்லிஸுல் இஸ்லாமால் வெளியிடப்படும் இவ் நூலானது அனைத்து இன மக்களுக்கும் மார்க்கம் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த நூலாக அல் - ‘பலாஹ் காணப்படுகிறது. அந்தவகையில் இந்நூல் சிறப்புற அமைய எனது பாராட்டினை தெரிவித்துக் கொள்வதுடன் அனைத்து இனத்தவரும் சமத்துவத்துடன் வாழும் எமது நாட்டில் ஒருவரின் கலாசாரம் தொடர்பாக இன்னொருவர் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பெரும் ஆதாரமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**சு.பிரதீபன்**
தமிழ்மன்றத் தலைவர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம் கூறும் ஜீவகாருண்யம்

அல்லாஹுத்தஆலா எம் அனைவருக்கும் ஒரு முபாரக்கான தூய்மையான பரிசுத்தமான இந்த இஸ்லாமி மார்க்கத்தை தந்திருக்கின்றான். உலகத்திலுள்ள ஏனைய மதங்களை விட பூர்த்தியானதொரு மார்க்கமாகும். இஸ்லாமிய மார்க்கம் அன்பும் அருளும் நற்பண்புகளும் நிறைந்த ஒரு பாதையாகும்.

இஸ்லாமிய மார்க்கம் ஒரு குறிப்பிட்ட சில வழக்கங்களையோ, கடமைகளையோ, மனித உரிமைகளையோ மாத்திரமன்றி மனிதனல்லாத ஜீவராசிகள் உரிமைகள் பற்றியும் தெளிவுபடுத்தி பேசுகின்றது. ஆனால் இன்றைய நவீன உலகமோ இஸ்லாம் காட்டுமிராண்டித்தனமான மார்க்கம், அது பயங்கரவாதத்தையும், வன்முறைகளையும் அநியாயத்தையும் அராஜக அரக்கத்தனத்தையும் தூண்டுகிறது என தவறான கருத்துக்களை கூறுகின்றனர்.

"அன்புக்கு பதிலாக அரக்கத்தனத்தையும், கருணைக்குப் பதிலாக கொடூரத்தையும் போதிக்கும் ஒரு மார்க்கமே இஸ்லாம்" என நவீன உலகம் தூய இஸ்லாத்தை தூற்றுகிறது. இஸ்லாமிய மார்க்கமானது, மாற்று மதங்களும், மதத்தவர்களும் ஏனைய மனிதனல்லாத ஜீவன்களிடம் காட்டும் அன்பு என்பவற்றைக் காட்டுவதில்லை. துன்புறுத்தி நோவினை செய்கின்ற மதம் காருண்யம் எனும் கருத்து இஸ்லாத்தின் தூய வடிவத்திலிருந்து பிரித்துக் காட்டுகின்றது.

சற்று நிதானமாக சிந்தித்தால் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் கொண்ட புரிந்துணர்வின்மையால் முடக்கி விடப்பட்ட முரட்டுக் கருத்துக்களும் போலிக் குற்றச்சாட்டுக்களுமாகும். இக்குற்றச்சாட்டுக்களுக்கு இஸ்லாம் ஒருபோதும் இடமளிக்காது. ஏனெனில் இஸ்லாம் மனிதன் முதல் எறும்பு வரையுள்ள ஜீவராசிகள் பற்றித் தெளிவாக பேசுகிறது. அவைகளுடைய உரிமைகள் பற்றியும் இஸ்லாம் கோடிட்டுக் காட்டுகின்றது.

**"இத்தரணியில் வாழும் பிராணிகளும் இறக்கை கொண்டு பறக்கும் பறவைகளும் உங்களை போன்ற உயிரினமே அன்றி வேறில்லை" (6:38)**

என்று தேனீ, சிலந்தி, ஆடு, மாடு, எறும்பு, காகம், தவளை என அத்தனை ஜீவன்கள் பற்றி அல்குர்ஆன் பேசுவதன் மூலம் இஸ்லாம் எந்தளவு உயிர்களிடத்தில் அன்பு செலுத்துகிறது என்பதை அறியலாம். அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் கருணை காட்டுமாறு விதித்திருக்கின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எனவே நீங்கள் குற்றவாளிகளை கொலை செய்யும் போது நளினத்தைக் கடைப்பிடியுங்கள். மிருகங்களை அறுக்கும் போது எளியமுறையில் அறுங்கள். அறுக்கும் கத்திகளைத் தீட்டிக் கொள்ளுங்கள். அது அறுக்கப்படும் மிருகத்திற்கு கஷ்டத்தை எளிதாக்கட்டும்"** **(முஸ்லிம்)**

கூறிய ஹதீஸும் எமக்கு ஜீவகாருண்யத்தையே தெளிவு படுத்துகிறது. இன்னும் உங்களிடத்தில் அன்பு பாராட்டுவதன் மூலம் சுவனம் செல்லலாம். உயிர்களை வேதனை செய்வதன் மூலம் நரகம் செல்ல நேரிடும் என்பதற்கு பனூ இஸ்ரவேலர்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு விபச்சாரப் பெண் கடும் தாகத்தால் தவித்த ஒரு நாய்க்கு நீர் புகட்டியதால் சுவனம் சென்றாள். மாறாக இறைவணக்கம் செய்யும் ஒரு பெண் பூனையொன்றைக் கட்டிவைத்து உணவும் பானமும் கொடுக்காது. அதனை மேயவிடாது வேதனை செய்த பெண் நரகம் நுழைந்தாள் என்ற சரித்திரம் எமக்கு சான்று பகர்கிறது. இதனால் தான் மண்ணில் உள்ளவைகள் மீதும் இரக்கம் காட்டுங்கள். விண்ணில் உள்ளவன் உங்கள் மீது இரக்கம் காட்டுவான். என மாநபி(ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள்.

இந்த அளவு இஸ்லாம் ஜீவகாருண்யத்தைப் பற்றி தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இன்னும் ஒட்டகத்துடனும் மனிதனுடனும் என பல்வேறு ஜீவன்களுடன் நபியவர்கள் நடந்து காட்டிய முறை பறவைகள் மீது காட்டிய கருணை என அடிக்கிக் கொண்டு போகலாம்.

இஸ்லாம் இந்தளவு கருணையையும் இரக்கத்தையும், அன்பையும் போதிக்கிறது. மக்கள் மனங்களிலே தூண்டுகிறது என்பதை உணர்ந்து நாமும் ஜீவன்களிடத்தில் கருணையுடன் நடக்க முயற்சிப்போமாக!

**M.M.சாஜிதா**
**69/12/AG/09**
விவசாயப்பிரிவு
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தின் பார்வையில் பெண்கள் தொழில் புரிதல்

இஸ்லாம் பெண்ணை அவள் மனிதன் என்றவகையில் நீதி வழங்கிப் பாதுகாத்துள்ளது. மேலும் அவள் பெண் என்றவகையில் சிறப்பாக கண்ணியப்படுத்தியுள்ளது. அல்லாஹ் மனிதர்களை யார் சிறந்த முறையில் செயற்படுகிறார்கள் எனப் பரிசோதிக்கவே அவர்களைப் படைத்தான். ஆகவே ஆணைப் போன்றே பெண்ணுக்கும் மிகச்சிறந்த முறையில் செயற்படும் பொறுப்புள்ளது.

**"உங்களில் ஆணாயினும் பெண்ணாயினும் உழைப்பவரின் உழைப்பை அவன் வீணாக்குவதில்லை என அவர்களது இரட்சகன் அவர்களுக்குப் பதில் சொன்னான்"**

**(ஸூரா ஆலஇம்ரான் – 195)**

அல்லாஹ் அவளுக்கு அவளது நற்செயலுக்காக உலகிலும் மறுமையிலும் வெகுமதியையும் கூலியையும் கொடுப்பான்.

இதனடிப்படையில் பார்க்கும் போது பெண் தொழில் புரிவது ஆகுமானது. சில போது அவ்வாறு தொழில்புரிதல் சுன்னத்தாகலாம். சிலபோது வாஜிபாகலாம் (கட்டாயக்கடமை)உதாரணமாக ஒரு விதவைப் பெண் வருமான வழியோ, உழைத்துக் கொடுக்க யாருமோ இல்லை என்ற நிலையில் பிறரிடம் கைநீட்டி இழிபடாத வகையில் உழைக்கும் தகுதியுடைய பெண் உழைப்பது "வாஜிப்"

சிலபோது அவளது உழைப்பு கணவனது உழைப்புக்கு உதவி செய்ய வேண்டி ஏற்படலாம். சிலபோது பெண்கள் தொழில்புரிதல் சமூகக் கடமையாக அமையலாம். பெண்களுக்கு வைத்தியம் பார்த்தல், பெண்களுக்குப் படித்துக் கொடுத்தல் போன்றவற்றைக் கூறலாம்.

இவ்வாறு பெண் தொழில்புரிதல் அனுமதிக்கப்பட்டதாயினும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கேற்பவே அது நடைமுறையாக வேண்டும்.

1) குறித்த தொழில் ஹராமானதாகவோ, ஹராத்திற்கு (தடுக்கப்பட்டது) இட்டுச் செல்வதாகவோ அமைந்துவிடக் கூடாது.
2) தொழிலுக்காக வீட்டை விட்டு வெளியேறும் போது உடை, நடை, பாவனை, பேச்சு, இயக்கம் போன்றவற்றில் இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நபியே, இறைநம்பிக்கையுள்ள பெண்களுக்குச் சொல்லுங்கள், அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளட்டும். தங்கள் மர்மஸ்தானங்களைப் பாதுகாத்துக் கொள்ளட்டும். இயல்பாக வெளித் தோன்றுபவை தவிர ஏனைய தம் அழகுகளை வெளிக்காட்ட வேண்டாம்.**

**(ஸீரானூர் : 31)**

**"தாம் மறைத்திருக்கும் தம் அழகுகளை காட்டத்தக்க வகையில் அவர்கள் தம் கால்களை தட்டித்தட்டி நடக்க வேண்டாம்"**

**(ஸீரானூர் : 31)**

**"(பெண்களே) நீங்கள் மென்மையாகப் பேசவேண்டாம். ஏனெனில், நோயுள்ள ஒருவன் சபலம் கொள்ளக் கூடும். ஆகவே தெளிவாய் நேர்த்தியாய்ப் பேசுங்கள்"**

**(ஸீரா அஹ்ஸாப்: 32)**

3) அவளால் எவ்வகையிலும் புறக்கணிக்கப்படக்கூடாத கடமைகளை விடவேண்டிய நிலை ஏற்படும் வகையில் அந்தத் தொழில் அமைந்துவிடக்கூடாது. கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் செய்யவேண்டிய கடமைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அவை பெண்ணின் அடிப்படைக் கடமையாகும்.

**K.M.ச[f]பியா**
**61/12/AG/01**
**விவசாயப்பிரிவு**
**1ம் வருடம்**

# வாழ்த்துச் செய்தி

மானிட நேயம் மகத்தானது என்பதனை புரியாத மாந்தர்களுக்கு மதத்தின் மூலம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி கூறும் இஸ்லாமிய மன்றத்தினரின் நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துக் கூறுகின்றேன்.

**திருமதி.K.யோகராஜா**
**விரிவுரையாளர்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமை வாழ்வு

அல்குர்ஆனின் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றாக விளங்குவது மறுமை வாழ்வு பற்றிய நம்பிக்கையாகும். நியாயத் தீர்ப்பு நாள் பற்றிய விசுவாசமுமாகும். இவ்வுலக வாழ்வு என்பது முடிந்த முடிவன்று. அது மனித ஆன்மாவின் நீண்ட வழிப்பயணத்தின் ஒரு மைல்கல்லாகும். இதனைத் தொடர்ந்து மீண்டும் உயர் வளர்ச்சியைக் காணும் பொருட்டு இவ்வாழ்வு மறைந்துவிடும்.

**"(ஒரு நிலைமையிலிருந்து மற்றொரு நிலைமைக்கு) நிச்சயமாக நீங்கள் படிப்படியாக கடக்கவேண்டியிருக்கின்றது" (அல்இன்ஷிகாக் : 19)**

**"மனிதர்களே! (மறுமையில் உங்களுக்கு உயிர் கொடுத்து எழுப்புவதைப் பற்றி நீங்கள் சந்தேகங் கொண்டால் (உங்களை முதலில் எவ்வாறு படைத்தேன் என்பதைக் கவனியுங்கள்) நிச்சயமாக நாம் உங்களை மண்ணிலிருந்து படைத்தோம். பின்னர் (உங்களை) ஒருதுளி இந்திரியத்திலிருந்து (படைத்து) பின்னர் அதனை ஓர் இரத்தக்கட்டியாகவும் பின்னர் (அதனைக்) குறைவான உருவமுடைய அல்லது பூரண உருவமுடைய மாமிசப் பிண்டமாகவும் (நாம் உற்பத்தி செய்கின்றோம். நம்முடைய வல்லமையை) உங்களுக்குத் தெளிவாக்கும் பொருட்டே (இவ்வாறு செய்து) நாம் நாடியவைகளைக் கர்ப்பப்பைகளில் தரித்திருக்கும்படி செய்கிறோம். பின்னர் உங்களை சிசுக்களாக வெளிப்படுத்தி நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும் படி செய்கிறோம். (இதற்கிடையில்) இறந்துவிடுவோரும் உங்களில் சிலர் இருக்கின்றனர். (அல்லது ஜீவித்திருந்து) யாவையும் அறிந்த பின்னர் ஒன்றுமே அறியாதவர்கள் போல் ஆகிவிடக்கூடிய தளர்ந்த வயது வரையில் (உயிர்வாழ) விட்டு வைக்கப்படுவோரும் உங்களில் இருக்கின்றனர்".**

**(அல்–ஹஜ்ஜு: 5)**

இவ்வுலகம் நிரந்தரமானதன்று. எனினும் அது மாபெரும் பயன்களைத் தன்னகத்தே பொதிந்துள்ளது. அது மாபெரும் அருட்கொடைகளை நல்கவல்ல ஒரு வரப்பிரசாதமாகும். ஏனெனில் இவ்வுலக வாழ்வின் ஆத்மீக சாதனைகளிலே ஒருவனின் மறுமை வாழ்வின் வெற்றி தங்கியுள்ளது. மறுமைவாழ்வு பற்றிய நம்பிக்கையானது. மனித வாழ்வுக் கருத்தையும் இலட்சியத்தையும் வழங்குகின்றது. ஒருவனின் செயல்களின் எதிர்தாக்கமும் விளைவும் அவனது ஆன்மாவில் அழியாது பதியப்பட்டு மறுமை வாழ்விற்கு அவனை இட்டுச் செல்லும் பாங்கினைத் திருமுறை பின்வருமாறு விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஒவ்வொரு மனிதனின் செயலைப் பற்றிய (விரிவான தினசரிக்) குறிப்பை அவனுடைய கழுத்தில் மாட்டியிருக்கின்றோம். மறுமைநாளில் அதனை அவனுக்கு ஒரு புத்தகமாக எடுத்துக் கொடுப்போம். அவன் (அதனை) விரித்துப் பார்ப்பான். (அதே சமயம் அவனை நோக்கி) இன்றைய தினம் உனது கணக்கைப் பார்க்க நீயே போதுமானவன். ஆகவே (உன்) குறிப்புப் புத்தகத்தை நீ படித்துப் பார் (என்று கூறுவோம்)"**

**(பனூஇஸ்ராயீல் : 13.14)**

படைப்பினங்களுள் சிறப்புறு நிலையில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் ஒரு சில கணங்கள் அல்லது வருடங்கள் எத்தகைய இலட்சியமுமற்ற நிலையில் வாழ்ந்து மறுகணம் மக்கி மண்ணோடு மண்ணாக மறைவதுடன் அவனது வாழ்வே முடிந்துவிடுகிறது என்ற கருத்து மனிதனின் சாதாரண அறிவே ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. எனவேதான் மரணத்துக்குப் பின் வாழ்வு பற்றிய நம்பிக்கையானது மனித வரலாற்றில் ஏதோ ஓர் உருவில் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது என்பதை ஆராய்ச்சி உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன. அல்குர்ஆன் இந்த மறுமை வாழ்வு பற்றிய கோட்பாட்டை தர்க்கரீதியாக விளக்குகின்றது.

ஒவ்வொரு செயலும் அதன் எதிர் விளைவைத் தோற்றுவித்தே தீரும் என்பது பௌதீக உலகைப் பொறுத்தவரையில் மறுக்கமுடியாத நியதியாக விளங்குவது போன்றே, தார்மீக உலகைப் பொறுத்த வரையிலும் அசைக்கமுடியாத அடிப்படைச் சட்டமாக விளங்குகின்றது. அறிவும், ஞானமும், நீதியும், நேர்மையும் ஒருவன் தனது செயல்களுக்கான பலாபலன்களை அனுபவித்தே தீரல் வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கக் காண்கிறோம். ஆனால் பொதுவாக உலக வாழ்வைப் பொறுத்தவரையில் நன்மை புரிந்து, நீதியும், நேர்மையும் நிலைக்கப்பாடுபடுவோர் துன்பப்படுவதையும், அநீதியும், தீமையும் புரிந்து அக்கிரமம் விளைவிப்போர் சுகபோக வாழ்வு வாழ்வதையும் காணக்கூடியதாக இருப்பது மட்டுமன்றி சில நேரங்களில் தீமையும், அநீதியும் புரிந்தோர் உலக சட்டத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுவிடுவதையும்., நேர்மையாளர்களும், நன்னெறியில் நடந்தோர்களும் சட்டத்தின் பெயரால் தண்டிக்கப்படுவதையும் காண்கின்றோம். எனவே நீதியையும் நேர்மையையும் பாரபட்சமின்றி நிர்ணயிக்கக்கூடிய ஒரு காலகட்டம் தோன்றியே ஆக வேண்டும். அப்படியில்லாவிடில் நீதி, நேர்மை என்ற வார்த்தைகளுக்கே அர்த்தமில்லாமற் போய்விடும். இந்தத் தர்க்கக் கண்ணோட்டத்திலேயே திருமறை மறுமை விசாரணை பற்றிய கோட்பாட்டைச் சமர்ப்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானங்களையும் பூமிகளையும் அல்லாஹ் தக்க காரணத்தின் மீதே படைத்திருக்கின்றான். ஆகவே (அவைகளிலுள்ள) எல்லா ஆத்மாக்களுக்கும் அவை தேடிக் கொண்ட வினைக்குத் தக்க கூலியே கொடுக்கப்படும். அவை (அணுவளவும்) அநியாயம் செய்யப்படமாட்டா"

"அவர்கள் செய்து கொண்டிருந்த தீமைகள் (யாவும்) அவர்களுக்கு வெளிப்பட்டு விடும். அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தவைகளே அவர்களை சூழ்ந்து கொள்ளும்"

"(இவர்களில்) ஒவ்வொருவருக்கும் (நன்மையோ, தீமையோ) அவர்கள் செயலுக்குத்தக்க பதவிகளிருக்கின்றன. ஆகவே, அவர்கள் தங்கள் செயலுக்குரிய கூலியைப் பூரணமாகவே கொடுக்கப்படுவார்கள். (நன்மையைக் குறைத்தோ, பாவத்தை அதிகரித்தோ) அவர்கள் (ஒரு சிறிதும்) அநியாயம் செய்யப்படமாட்டார்கள்"

**M.M.M.முஹ்ஸி**
**133/12/Sci/09**
விஞ்ஞானப்பிரிவு
1ம் வருடம்

# வாழ்த்துச் செய்தி

தமிழ்மொழியினை செம்மைப்படுத்துவதில் இஸ்லாமிய இலக்கியங்களும் பெரும்பங்காற்றுகின்றன. அந்தவகையில் எமது கல்லூரியின் ''மஜ்லிஸுல் இஸ்லாம்'' வெளியிடும் இஸ்லாமிய மன்றத்தினரது வெளியீடான "அல் - 'பலாஹ்" ஆசிரிய மாணவர்களின் தரமான ஆக்கங்களினால் ஒளியூட்டப்பட்டு பிரகாசிக்க வேண்டும் எனவும் குறிப்பாக கற்போர் கற்பிப்போருக்கு கருத்துரைக்கும் சஞ்சிகையாக அமைய வாழ்த்துகிறேன். வருகையை மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு.P.பவானந்தன்**
போசகர்
இந்துமாமன்றம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை

மனிதவாழ்க்கை இடர்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் அமைந்திருக்கின்றது. சோதனைகள், சந்தோஷங்கள் என்பன ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதாகும். பூ விழுந்தால் சந்தோஷம், தலை விழுந்தால் சோதனை. இவ்வாறு வாழ்க்கைச் சக்கரம் மாறி மாறி சுழன்றுகொண்டிருக்கின்றது.

எமக்குச் சோதனைகள் வேதனைகள் வருகின்ற போதும் பேண வேண்டிய முக்கியமான விடயம் தான் **"பொறுமை"** என்ற அணிகலன் இதனை அணிந்தால் தான் சாதனைகளை மிக இலகுவில் அடையலாம். மனித வாழ்வானது போராட்டங்கள், சோதனைகள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து வாழவேண்டிய மனிதன் அதற்கான மன உறுதியைப் பெற்றுக்கொள்ள கையாளவேண்டிய விடயம் தான் **பொறுமை** என இஸ்லாம் கூறுகிறது.

பொறுமையானது மதிப்புமிக்கதோர் நற்பண்பாகும். பொறுமையின்றி மார்க்க விஷயங்களில், உலக விஷயங்களில் உயர்வு பெற முடியாது. எனவே பொறுமை என்ற நற்பண்பை அணிகலனாக அணிந்து நம் வாழ்கையை அலங்கரிக்க வேண்டும்.

அல்குர்ஆன் வசனமொன்று பொறுமையை இவ்வாறு இயம்புகிறது.

**"நிச்சயமாக நாம் ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வங்கள், உயிர்கள், மற்றும் விளைச்சல்கள் ஆகியவற்றில் ஏற்படும் இழப்புக்களாலும் உங்களைச் சோதிப்போம். பொறுமையாளர்களுக்கு (நபியே) நீர் நன்மாராயம் கூறுவீராக!" (2:155)**

இவ்வசனத்தின் மூலம் செல்வம், பசி, பயம்....... போன்ற சோதனைகள் மூலமும் இன்னும் பல விடயங்கள் மூலமும் சோதனைகள் ஏற்படும். அவ்வாறான நேரங்களில் பொறுமை காக்கவேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகிறான். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**"பொறுமையைப் பெற்றவனை விடச் சிறந்த சன்மானத்தைப் பெற்றவன் எவனுமில்லை" (புகாரி)**

இதன் மூலம் பொறுமை உயர்ந்த பெறுமதி வாய்ந்த ஒன்று என விளங்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வாழ்க்கையில் ஏற்படும் அபிவிருத்தி, ஏக்கம், ஏமாற்றம், திடீர் திருப்பங்கள் என்பவற்றின் பாதிப்பிலிருந்து ஒரு முஸ்லிமைப் பாதுகாத்தது பொறுமையே! விதை விதைத்த விவசாயி பொறுமையை இழந்தால் அறுவடை செய்திட முடியாது. செடியை நாட்டியவன் பொறுத்திருக்கா விட்டால் பழம் பறித்திட முடியாது. மாணவனுக்கு கற்றலில் பொறுமையில்லையென்றால் அறிஞனாக முடியாது. போராளி பொறுமை காட்டவில்லையென்றால் வீரனாக முடியாது. உலகில் தோன்றி சாதித்தவர்கள் எல்லாம் பொறுமை மூலமே தமது இலட்சியத்தை அடைந்துள்ளார்கள். அவர்கள் கசப்பை இனிப்பாகக் கண்டவர்கள். துன்பங்களை சுகமாய் ஏற்றனர். சிரமங்களை இலேசாகக் கருதினர். முற்பாதையில் நடந்தனர். கற்களைக் கூட நகங்களால் தோண்டினார்கள். பாதையிலுள்ள தடைகளைக் கண்டுகொள்ளவில்லை. ஈட்டிகள் அவர்களைப் பதம் பார்த்தன. நாய்கள் அவர்களைச் சுற்றி குரைத்துக் கொண்டிருந்தன. துன்பங்களைத் திரைபோட்டு மூடிவிட்டுத் தொல்லைகளை ஏரிட்டும் பார்க்காமல் உறுதியைக் கேடயமாக்கிப் பொறுமையை ஆயுதமாகக் கொண்டு வெற்றி கண்டனர் என "ஒரு கவிஞன் பாடினார்."

அல்லாஹ் அல்குர்ஆனில் கிட்டத்தட்ட 90 இடங்களில் இந்தப் பொறுமையைப் பற்றி கூறுகின்ற அதேவேளை இன்னும் சில இடங்களில் தொழுகையுடன் சேர்த்து இதனைக் குறிப்பிடுகின்றான். முதுகை உடைத்து, கழுத்தை நெறித்து, ஆளை முடக்கிவிடுகின்ற அளவுக்கு நெருக்கடிகள், சோதனைகள், துன்பங்கள் எம் வாழ்வில் ஏற்படும் போது சோர்ந்து விடக்கூடாது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்

**"பொறுமையின்றி அவசரப்படுத்தி தாக்குபவன் வீரன் அல்ல; மாறாக உண்மை வீரன் யாரென்றால் கோபத்தின் போது தன் மனதைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவனே வீரன் ஆவான்"**

**(அபூஹுரைரா (ரலி) – முஸ்லிம், மிஷ்காத்)**

இந்த அறிவிப்பின் மூலம் மனதைக் கட்டுப்படுத்தியிருப்பதானது பொறுமையுடன் இருப்பதையே குறிக்கின்றது.

**"மக்களை சந்திக்காமலும், அவர்களிடமிருந்து ஏற்படும் தீங்குகளை சகித்துக்கொள்ள முடியாமலும் இருக்கின்ற முஸ்லிமை விட மக்களோடு வாழ்ந்து அவர்களிடமிருந்து வரும் தீங்குகளைச் சகித்துக்கொண்டு பொறுமையுடன் வாழும் ஒரு முஸ்லிம் மிகச் சிறந்தவனாவான்"**

**(திர்மிதி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையால் கிடைக்கும் இம்மை - மறுமை பயன்கள்

1) அல்லாஹ்வின் அன்பு (3:146)
2) அழகிய கூலி (19:96)
3) அளவற்ற கூலி (39:10)
4) உதவி, வெற்றி (30:125)
5) தலைமைத்துவத் தகுதி (32:24)
6) யாரும் பெறாத வாழ்த்துக்கள் (2:155,157)
7) ஆண்மையும் வீரமும் மிக்கோர் (3:186)
8) எதிரிகள் சதியிலிருந்து பாதுகாப்பு (3:120)
9) சுவனமும், வானவர்களின் ஸலாமும் (76:12)

இவ்வாறான பயன்களைப் பற்றிய கருத்தை மேல் சுட்டிக்காட்டும் அல்குர்ஆனிய வசனங்கள் உணர்த்துகின்றன.

எனவே சகோதர சகோதரிகளே!

நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் என்ற அல்குர்ஆன் ஆயத்தை மனத்தில் நிறுத்தி பொறுமையாளர்களாக மாறி, நாளை சுவனத்தில் நுழைய இறைவன் எமக்கு அருள்புரிவானாக ஆமீன்.

**M.R.F.றக்ஸானா**
**39/12/Com/39**
வர்த்தகப்பிரிவு – B
1ம் வருடம்

# வாழ்த்துச் செய்தி

சமூக ஒற்றுமை, சமூக புரிந்துணர்வு என்ற நல்ல எண்ணத்தோடு சமாதான வாழ்வை என்றும் வலிறுத்தும் இஸ்லாமிய மேம்பட்ட கருத்துக்களை ஏனைய பல்லினச் சமூக மக்களிடையே தெளித்து புரிந்துணர்வுடன் வாழ வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸுல் இஸ்லாம் வெளியிடும் அல் - ஃபலாஹ் எனும் நூலின் கலைவிழாவும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**திரு.ந.பார்த்தீபன்**
**விரிவுரையாளர்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரிக்கு ஓர் ஈமெயில்....

பெண்ணாகப் பிறந்திருந்தால்
பெற்றிருப்பேன்
முதிர்கன்னிப் பட்டம்!
ஆணாகப் பிறந்ததினால்
உன்னை ஆளாக்க
அயல் நாட்டில் நான்!.....

என் வியர்வையை
உரமாக்கி அதில்
உன்னை உருவாக்க
கடன் கனத்ததால்
கடல் கடந்து
கடமை சுமந்து
எட்டாக்கனி கல்வியை
உனக்கு வளைத்துக் கொடுக்க
வளைகுடா வந்திருக்கிறேன்!.....

உன் கல்லூரிக் கனவை
நனவாக்கிய நெகிழ்ச்சியில்
கனமானது மகிழ்ச்சியில் என் மனம்!.....

வட்டமிடும் வண்டுகள்
வாலிபத்தை நோக்கி
படையெடுக்கும் உன்னைச் சுற்றி
பல்லாங்குழி விளையாட!....

மயங்கிவிடும் இளமையில்
இறங்கி விடாதே! பர்தாவை
கழட்டி விடாதே!.....
மரணம் வந்தாலும்
கர்ணம் போடாதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மார்க்கத்தில் புது புது
வர்ணம் தீட்டாதே!......
குழந்தையல்ல உனக்கு
கதைசொல்லி வளர்க்க,
ஓடிப்போகும் குமரிகளின்
கதைகேட்டு கண்ணீர்வடிக்கும்
சகோதரர்கள் உண்டு ஏராளம் இங்கே!

சந்தேகமா? என்று
சாட்டிவிடாதே என் மீது
குற்றத்தை!
தரையில் கிடக்கும் தேனை
தடவிப்பார்த்து ருசி சொல்லும்
விஷமுள்ள வயது!......

இரத்த நாளங்களில்
ஓடிக்கொண்டிருக்கும் *ஷைத்தானை
வெல்வதற்கு பிடித்துக் கொள்
*ஈமானை!

இப்படிக்கு
உன் சகோதரன்

* ஈமான் - நம்பிக்கை
* மார்க்கம் - எல்லோரும் பிற்பற்றக்கூடிய வாழ்க்கை வழிமுறை
* ஷைத்தான் - கெடுதி விளைவிக்கும் படைப்பு

**M.H.M.நஃப்ரிஸ்**
**73/12/AG/13**
விவசாயப்பிரிவு
1ம் வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான ஸக்காத்

செல்வம் வாழ்வில் கிடைப்பதரிது
செல்வர் வாழ்விலும் சோகமில்லை
அல்லாஹ் ஈத்த செல்வமதிலே
அள்ளி ஈவோம் *ஸக்காத்ததனை
நில்லாதுலகில் நிலைக்காதொன்றும்
நாம் *செய்யுமமலே நிலைக்குமென்று
நல்லவராக நாமும் மாறி
நலம் பெறுவோமே ஸக்காத் ஈந்து

இரந்து வாழும் பழக்கமும் அகன்று
இனிதாய் வாழ வழி வகுக்கும்
பறந்துவிடும் உலோபித்தனமும்
பக்குவப்பட்டுத் தூய்மை பெறுவோம்
சுரக்கும் செல்வம் இன்னுமின்னும்
சீலராய் வாழ வழிகள் செய்யும்
சீராய் வாழ *மார்க்கம் இதுதான்
சிறப்பாய் ஸக்காத் ஈந்திடுவோமே

பணமும் பொருளும் தூய்மை கொள்ளும்
பாவங்கள் எல்லாம் அகன்று செல்லும்
மனமும் குணமும் குன்றாய் மாறும்
முத்தான கடமை நிறைவு காணும்
ஏற்றத்தாழ்வுகள் எம்மில் குறையும்
ஏழை மனதுகள் அதனால் நிறையும்
கணக்குப் பார்த்து ஸக்காத் ஈந்து
கடமை இதனை நிறைவு செய்வோம்.

✸ ஸக்காத் - ஒருவரிடம் உள்ள சொத்தை வருட இறுதியில் கணக்கிட்டு விகித அடிப்படையில் ஏழைகளுக்கு வழங்கும் கட்டாய பங்கு.
✸ செய்யுமமலே - செய்யும் நற்செயல்கள்
✸ மார்க்கம் - சகலரும் பின்பற்றி ஒழுகக் கூடிய வாழ்க்கை வழிமுறை

**M.I.F.சலிதா**
**17/12/Com/17**
**வர்த்தகப்பிரிவு - B**
**1ம் வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ ! தனம்

ஏய் மனிதா ஏன் நீயும்
உன் ஆண்மைக்கு விலை பேசுகிறாய்
ஒற்றைக் காலில் நிற்க இயலாத
உனக்கு எதற்கடா திருமணம்?
சீதனம் எனும் பெருங்கல்லை ஏன் அந்த
அப்பாவி தலையில் போட்டாய்
பாவம், அவர் பாதம் தேயும் வரை
பாதையில் அலைந்து களைத்திட்டார்.

கல் நெஞ்சம் கொண்ட கணவனா?
காசு கேட்கும் கயவனா நீ!
பெண்ணென்ற புதையல் வேண்டுமா?
*"மஹர்" எனும் மாணிக்கத்தை கொடு
முட்டாளே ஏன் பிச்சை கேட்கிறாய்
உனக்கு வெட்கம் இல்லையா?
உன் ஆண்மை எந்த சந்தையிலே விலை போகும்!
நீயென்ன சில்லறைப் பொருளா?

சீ!தனத்துக்கு அடிமையாகிடாதே!
சிந்திப்பாய்! சோதனைக்குள்ளாகாதே
பணமெனும் கூரிய ஆயுதத்தால்
பிணமாக்கி விடாதே உன் மாமனாரை
திருமணத்துக்கு முன் உன் மறுமனத்தை காட்டிவிடாதே!
அன்பெனும் நாட்டை ஆட்சி செய்யாமல்
எப்படி திருமணம் எனும் மாளிகையில் குடியிருப்பாய்?
சீதனம் எனும் கொடுமையால்
சீரழிந்த குடும்பங்கள் ஏராளம், ஆதலால்
அன்பெனும் ஆட்சியால் அமர்ந்து
நல் வாழ்வு வாழு நண்பா!

* மஹர் - பெண்ணுக்கு திருமணத்துக்குமுன் கணவன் கொடுக்கும் பணத்தொகை

**M.ᶠபாதிமா நிருᶠபா**
**18/12/Com/18**
வர்த்தகப்பிரிவு – **B**
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் காலடியில் சுவர்க்கம்

பத்து மாதங்கள் என்னை சுமந்தாய்
பல தடவை உன் பொன் வயிற்றில்
பாதங்களால் உதைத்த போது
பரவசமாய் ரசித்தாய் அன்னையே

பிழைகள் நாம் செய்த போது
பரிவும் எனக்கு அறிவுரை செய்தாய்
பகைவருடன் துன்பங்கள் வந்தபோது
பாதை மாறாமல் இஸ்லாமிய வழிகாட்டினாய்

சோகமான நேரங்களில் உன் நெஞ்சில்
சொகுசாய் என்னை சாய்த்து
ஆறுதல் அரபுமொழி தந்து அரவணைத்தாய்
அதிசயமாய் ஆனந்தம் காட்டினாய்

அன்னையே எனக்கு காட்டினாய்
என்னை உன்னில் பார்க்க வைக்கும்
இதயக் கண்ணாடி ஆனாய்
இருட்டிலும் பார்வை தந்தாய்

மூடிப் போயிருந்த எமது ஆற்றல்களை
முழுவதுமாய் அறிய வைத்தாய் நான்
முறிந்து போன வேளைகளில்
முழு பிறையாக சிரிக்க வைத்தாய்

ஒரு மனிதனாய் என்னை உயர வைத்து
ஒரு சுவர்க்கத்தையே உன்
ஒத்தக் காலடிக்கு சொந்தமாக்கினாய்
ஓராயிரம் ஆண்டுகள் அங்கு நான்வாழ.....

**S.றிஸ்லா**
**15/12/Com/15**
வர்த்தகப்பிரிவு - **B**
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் அழைக்கிறது

வரமாட்டேன் வரமாட்டேன் - என
எத்தனை நாள் அடம்பிடிப்பது
மரணமே செல்லத் தயங்குகிறது - என்
ஆத்மா கப்றறையை மறந்து வாழ்கிறது

*கப்றறை என் வரவை
சமயம் பார்த்து காத்திருக்கிறது
நன்றி கெட்ட ஆத்மாவா!
புசித்து ரொம்ப நாளாகிறது

ஆடம்பர வாழ்வை அனுபவித்து
அல்லாஹ்வை சிரம்பணிந்து வணங்காமைக்கு
நெருப்புக் கண்களோடு
என் உயிரைக் கலக்கிறது

இருள் சூழ்ந்த கப்றறையில்
மண்வெட்டியின் சத்தம்
செவிப்பறையையும் தாண்டி செவி
நரம்பையும் தாக்குகிறது

கப்ரின் நெரிசலில் சிக்குண்டு
கதறும் ஆன்மாவின் அவலக்குரல்
என் இதயத்துடிப்பை சீரிடச் செய்கிறது

வரமாட்டேன் வரமாட்டேன் என
எத்தனை நாள் அடம்பிடிப்பேன்,
இவ்விநாடியே எனக்கு
மரணவலி வந்துவிட்டால்?
பாவமன்னிப்பை வேண்டிநிற்கிறேன்
மறுமையின் சுகவாழ்விற்காக

* கப்றறை - புதைகுழி (அடக்கம் செய்யும் குழி)

**M.L.H.முஹம்மது நஷீம்**
**67/12/AG/07**
**விவசாயப்பிரிவு**
**1ம் வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவனப் பாதையில்

மனிதனே!
நீ சுவனப்பாதையில் என்றால்......
உன் இருதய அறைகளில்
தினம் தினம் எதிரொலிக்க வேண்டும்
இறை நினைவுகள்......
அதில் பட்டுத்தெறிக்கும் ஒளியாக
இருக்க வேண்டும்
உன் வாழ்க்கைப் பயணம்.....
மனிதனே முடியுமா உன்னால்?

தலை திருப்பி உன்னை பார்த்து
வலை வீசும் செல்வம்.....
தன் அழகையெல்லாம் வெளிக்காட்டி
தூண்டில் போடும் யௌவனம்.......
உன் அகத்தே ஒழிந்து கொண்டு
உன்னை ஈர்க்கத் தூண்டும் மனோ இச்சை.....
இவற்றையெல்லாம் தூரப்போட்டு
குர்ஆன், ஹதீஸ் ஒளியில்
உன்னை நீயே பட்டை தீட்டிக்கொள்ள
மனிதனே முடியுமா உன்னால்?

*ஈமானிய உறுதியுடன்
அவன் ஒருவனுக்காக
வாழ்வில் அனைத்தையும் செய்திட
மனிதனே முடியுமா உன்னால்?

மனிதனே!
முடியுமா என அயர்ந்து கொள்கிறாயா?
இல்லை, முடியும்
அப்பூத்தூவிய பாதையில் தான்
நீ பயணிக்கின்றாய் என்றால்.....
உன் மனம்,
சுகமானதொரு சுவாசமாக.....
கண்ணயர்த்தும் தென்றலாக......
தெளிந்த நீரோடையாக.......
எதற்கும் அஞ்சா நெஞ்சாக.....
அமைதியாக ஓய்ந்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியரின் மாத்திரையை விட
'அவன்' மீதுள்ள உறுதியும், *துஆவுமே
உன் நோய்களுக்கு
முடிவுரை எழுதிடும்.

கஷ்டமென்று வந்துவிட்டால்
ஆறுதலாகும்
அவன் தூதர் வழிகாட்டல்கள்
உன் நரகினை தூரமாக்கி
உன்னிடம் படிந்திருக்கும்
பாவத்துகள்களை களைத்தெரிந்து
நீ *சுவனப்பண்புகளால் சோடினை
செய்யப்பட்டுள்ளாய் என
உனக்கே உன்னை புரிந்தால்.....
உணர்ந்துகொள் இவ்வுலகிலேயே
நீ சுவனப்பாதையில் தான் பயணிக்கின்றாய் என்று
மனிதனே உன்னால் முடியுமா?

- ஈமான் - நம்பிக்கை
- துஆ - பிரார்த்தனை
- சுவனம் - சுவர்க்கம்

**M.M.N.முஸீனா**
**62/12/AG/02**
விவசாயப்பிரிவு
1ம் வருடம்

# வாழ்த்துச் செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்வாங்கப்படும் மாணவ ஆசிரியர்களுள் இலங்கையில் உள்ள பன்முக சமூகத்தவர்களும் உள்ளனர். அந்தவகையில் ஒவ்வொரு சமூகத்தவரும் தமது சமயம் சார்ந்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளை கலாசார வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று அனைத்து மாணவ ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து மேற்கொண்டு வருவது சிறப்பம்சமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஒன்றாக இஸ்லாமிய சமயத்தவர்கள் நடாத்தவுள்ள இஸ்லாமிய கலைவிழாவும், அல் - 'பலாஹ் எனும் நூல் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**இ.கபிலதாஸ்**
கலாச்சார மன்றத்தலைவர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே கண்

கற்றுவரும் பிள்ளை
பாரில் உயர்ந்துவரும் முல்லை
கள்ளத்தில் கழித்திருந்தால் - இன்று
பிற்காலத்தில் கவலை தரும் மூளை

கற்றவருக்கு நிகரில்லை பாரில்
கல்லாதவருக்கு ஏது புகழ் ஊரில்
எத்திசையும் இவன் பெருமை பேசும்
இல்லையெனில் சுற்றமும் ஏசும்

வருவதில்லை கல்வி எளிதாக
வந்துவிட்டால் இனிக்கும் கரும்பாக
கொடுப்பதனால் ஊறிடும் நீரூற்றாய்

கல்வி தரும் முகத்திற்கு நல்லழகு
கனவாய் அவை கற்றுத் தேறு
செல்வம் எப்பொழுதும் பழுது
சென்றுவிடும் என்றோ ஒரு பொழுது

**A.F.சப்னாஸ்**
**168/12/Com/49**
**வர்த்தகப்பிரிவு - B**
**1ம் வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடுவோம் உறுதிகொள்வோம்

அன்பு சோதரனே,
இஸ்லாமியனே
ஏன் தெரிந்து கொள்ளாமல்
இருக்கிறாய்?
தரையில் கொட்டிவிட்ட
நெல்லிக்கனி போல
நம்மவர் சிதறிக்கிடக்கும்
இழி நிலையை ஏன் உணராதிருக்கின்றாய்?

சுக போக மழையில் நனைந்து
அந்த சுகத்தில் மயங்கலாமா?
சுகம் காணும் போது பீடிக்கும்
அந்த மரணத்தை மறக்கலாமா?
நம் வாழ்க்கை தான் நிலையாகுமா?

பிறப்பு ஒன்று இல்லையென்றால்
இறப்பொன்று இருக்காது
இறப்பொன்று இல்லைனென்றால்
இறைவன் அச்சம் பிறக்காது
இறைவன் அச்சம் இல்லையென்றால்
பாரில் அமைதி இருக்காது

மறுமை வெற்றி எங்கள்
தாகமாய் இருக்கும் வரை
இறை நம்பிக்கை எங்கள்
கீதமாய் இருக்கும் வரை
பொறுமையும் பிரார்த்தனையும் எங்கள்
ஆயுதமாய் இருக்கும் வரை
ஒன்றுபடுவோம் உறுதிகொள்வோம்

**M.M.F.மிஸ்ரா**
**05/12/Com/05**
**வர்த்தகப்பிரிவு - A**
**1ம் வருடம்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாய்ச் சொல்லில் வீரரடி....

சீரழிந்த சமூகம்
விழித்தெழுவோம் என்கின்றாய்
தொலைக்காட்சித் தொடர்களில்
மூழ்கியவாறே !

எங்கள் பலஸ்தீனம்
பற்றி எரிகிறது என்கின்றாய்
கொகாகோலா, பெப்சியை
ருசித்துக் கொண்டே !

கையில் ஒளியுடன்
உறங்குகிறோம் என்கிறாய்
செல்போனில் கேர்ல் ப்ரண்ட் உடன்
அரட்டையடித்துக் கொண்டே !

மீண்டும் ஒரு *கிலாபத்
உருவாக்குவோம் என்கிறாய்
படிப்போர்க்கு இடைஞ்சலாய்
படி அளந்தவாறே !

என் சமூகம் வேண்டி நிற்பது
உன் போன்ற
வாய்ச் சொல் வீரர்களையல்ல,
உறங்கச் செய் உன் *ஜாஹிலிய்யத்தை
விழித்துக் கொள்ளும் சமூகம்
தானாகவே !

– படித்துச் சுவைத்தது –

* கிலாபத் - இஸ்லாமிய ஆட்சி
* ஜாஹிலிய்யத் - ஆரம்பகாலத்தில் கொடுமை விளைவித்த கூட்டத்தினர்.

**M.R.F.மிஸ்கா**
**01/12/Com/01**
வர்த்தகப்பிரிவு - A
1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பற்றிய பிற மத அறிஞர்களின் கருத்துக்கள்

சுமார் 1400 வருடங்களுக்கு முன் இந்த உலகில் தோன்றி மனித குலத்துக்கே நேர்வழி காட்டிச் சென்ற ஒரு மாமனிதர் நபி (ஸல்) அவர்களைப் பற்றி பல்வேறு மதங்களை பின்பற்றும் பல்வேறு அறிஞர்கள் மிக அற்புதமான கருத்துக்களை கூறியிருக்கின்றனர்.

**பேர்ணாட் ஷா :**

முஹம்மதின் நற்குணங்கள் எனக்கு பிடித்திருக்கின்றன. மனிதவாழ்க்கை பற்றிய அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கின்றேன். கூடிய விரைவில் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொண்டுவிடும். என்று நம்புகிறேன்.

**வில்லியம் மூர் :**

சர்வ சக்தியும் படைத்த இறைவன் தனக்கு துணையாக நிற்கின்றான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நபியவர்களுக்கு இல்லாதிருந்தால் இவ்வளவு பிரமாண்ட சாதனைகளை அவர்களால் செய்திருக்க முடியாது.

**ஜவஹர்லால் நேரு :**

முஹம்மத் நபியின் வெற்றிக்கு முதல் காரணம் அவர் கொண்டிருந்த உறுதியும், ஊக்கமும் அந்தக் காலச் சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று. இரண்டாவது காரணம் இஸ்லாம் போதிக்கும் சமத்துவம் சகோதரத்துவமும் ஆகும்.

**தோமஸ் கார்லைல் :**

நபிகள் நாயகம் இவ்வுலகில் மக்களுக்கு புரிந்த போதனைகள் அனைத்தும் உண்மையானவை, கருத்துமிக்கவை. விசுவாசம் கொள்ளத்தக்க வேதம் என்றொன்றிருந்தால் அது நபிகள் நாயகத்திற்கு அருளப்பட்ட குர்ஆனேயாகும்.

**மகாத்மா காந்தி :**

ஆட்சி புரியும் அமைச்சர்கள் நபி பெருமான் வகுத்த சீர்திருத்தங்களை பின்பற்றி நடக்க வேண்டும்.

**S.H.லீடர் (Modern Sons of Pharaohs) :**

துவேசம் எனும் கார்மேகக் கூட்டத்தை விலக்கி விட்டு உண்மை எனும் கதிரவன் ஒளிபரப்பும் நன்னாள் ஒன்று வரலாம். அப்போது மேல்நாட்டு வரலாற்றாசிரியர்கள் "முஹம்மத் ஒரு சரித்திர நாயகர்" எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதோடு மட்டும் நிறுத்திவிடாது. "அவருடைய வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து மனிதத்துவத்தின் வரலாறு என்ற பொன்னேடுகளில் நபி (ஸல்) அவர்களுக்குரிய இடத்தை அளிப்பார்கள்.

**சரோஜினி நாயுடு :**

மேலை நாடுகள் எதையெல்லாம் புதிய கருத்துக்கள் என்றும் மகத்தான சாதனைகள் என்றும் கூறுகின்றனவோ அவையெல்லாம் அந்த அரேபியாவின் பாலைவனச் சோலையிலே நபிகள் நாயகம் அவர்களால் விதைக்கப் பெற்ற வித்துக்களின் விருட்சங்களேயன்றி புதியது ஒன்றுமில்லை.

**கிப்பன் :**

அறம் செய்வது எப்படி என்பதை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுத்துக் கூறிய ஒரேயொரு சட்ட மேதையாக விளங்கியவர் முஹம்மத் ஒருவரே.

**கலைஞர் கருணாநிதி :**

செந்தழலை குளிராகவும், சினம் கொண்டு சீறிவிடும் பகையை குணங்கொண்ட நட்பாகவும் மாற்றவல்ல மன வலிமை மிக்க மேலோர் நபிகள் நாயகம்.

**நெப்போலியன் :**

திருக்குர்ஆனுக்கும் தூதர் முஹம்மத் அவர்களுக்கும் எனது விசுவாசத்தை வழங்குகின்றேன். குர்ஆனின் கொள்கைகளுக்கு இணங்கி ஒரேவிதமான ஆட்சியை உலகெங்கும் நிறுவக்கூடிய காலம் வெகுதூரத்தில் இல்லை.

**அறிஞர் அண்ணா :**

கண்மூடிப் பழக்கங்களை கைவிடச் செய்து காட்டுமிராண்டி தன்மையினரை உயர்த்த சமுதாயமாய் மாற்றி நெருக்கடியான நேரங்களிலும் இலட்சியங்களை நிறைவேற்றத் தவறாத கடமை வீரர் நபிகள் நாயகம்.

**மைக்கல் H.ஹார்ட் :**

தனது "The hundred" என்ற நூலில் உலகில் பிரசித்தி பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த 100 மனிதர்களில் நபி (ஸல்) அவர்களை முதன்மையானவராக சுட்டிக்காட்டி அவர்களை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**A.J.M.சஸான்**
**113/11/PE/07**
உடற்கல்வி
2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பு தரும் மாண்பு

சரீர பலம் உள்ளோர் அனைவருக்கும்
சத்தியமாய் நோன்பது கடமையாகும்
பெரிதாய் எவரும் எண்ணி யிங்கே
பொடுபோக்காய் விடுவது மடமையாகும்
அரிய பல பல நன்மைகள் நிறையவுண்டு
அருமருந்தாய் நோற்பது *வாஜியாகும்
சொரிகின்ற நன்மைக்கு எல்லை இல்லை
சொர்க்கம் தான் இதற்கு கூலியாகும்.

பாவங்கள் எல்லாம் அகன்று போகும்
பக்குவமாய் மனுஷம் புனிதமாகும்
ஏவல்கள் எல்லாம் உயர்ந்து இங்கே
ஏகனின் நினைவு உயர்ந்து கொள்ளும்
சீவன்க ளெல்லாம் சிரமே தாழ்த்தி
சீராய் இங்கே திருத்திக் கொள்ளும்
காவலாய் *கபுருக்கு நன்மை தேடும்
காலம் இதுதான் வென்று கொள்வோம்

பூசல்கள் பொறாமைகள் மறந்து இங்கே
போட்டியிட் *டமல்கள் செய்து கொள்வோம்
பேசாமல் நாமும் இருந்திட்டாலே
போவது நரகம் திண்ணமாகும்.
ஆசா பாசம் அனைத்தையுமே
அல்லாஹ், தனக்காய் அடகுவைத்து
கூசாமல், இந்த கடமை தன்னை
கூர்ந்து நாமும் நிறைவு செய்வோம்

-படித்துச் சுவைத்தது-

* அமல்கள் - நன்மையான விடயங்கள்
* வாஜிப் - கட்டாயக்கடமை
* கப்ர் - புதைகுழி

H.F.F.ம பீாஷா
10/12/Com/10
வர்த்தகப்பிரிவு - A
1ம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ம் வருட ஆசிரிய மாணவர்களின் விபரம்

# (2011 – 2013)

## ஆரம்பக்கல்வி

| | | | |
|---|---|---|---|
| 01. | A.R.யாஸிர் | 01/11/PT/01 | ஆரம்பக்கல்வி |
| 02. | S.M.முபாரக் | 02/11/PT/02 | ஆரம்பக்கல்வி |
| 03. | S.றிபான் | 05/11/PT/05 | ஆரம்பக்கல்வி |
| 04. | M.R.M.பஸீர் | 08/11/PT/08 | ஆரம்பக்கல்வி |
| 05. | C.M.முஹம்மது ஸமீர் | 13/11/PT/13 | ஆரம்பக்கல்வி |

## விவசாயம்

| | | | |
|---|---|---|---|
| 06. | M.F.ஜெஸீலா | 79/11/AG/03 | விவசாயம் |
| 07. | R.A.ஸியாத் | 81/11/AG/10 | விவசாயம் |
| 08. | S.I.M.அனூஸ் | 89/11/AG/13 | விவசாயம் |
| 09. | A.S.நியாஸ் | 92/11/AG/16 | விவசாயம் |
| 10. | A.G.சுஹைப் | 95/11/AG/19 | விவசாயம் |
| 11. | A.R.M.ரைஸ் | 98/11/AG/22 | விவசாயம் |
| 12. | S.அஸ்ரா | 100/11/AG/24 | விவசாயம் |
| 13. | N.P.M.மிஹ்ராஜ் | 101/11/AG/25 | விவசாயம் |
| 14. | W.M.அஸ்லம் | 102/11/AG/26 | விவசாயம் |
| 15. | A.M.இர்ஸாத் | 104/11/AG/28 | விவசாயம் |
| 16. | A.H.பயாஸா | 106/11/AG/30 | விவசாயம் |
| 17. | M.U.நூறுல் முபாஸா | 166/11/AG/31 | விவசாயம் |

## உடற்கல்வி

| | | | |
|---|---|---|---|
| 18. | M.S.M.நளீம் | 107/11/PE/01 | உடற்கல்வி |
| 19. | A.C.A.நஸாத் | 108/11/PE/02 | உடற்கல்வி |
| 20. | M.S.நௌஸாத் | 110/11/PE/04 | உடற்கல்வி |
| 21. | K.M.அக்ரம் | 112/11/PE/06 | உடற்கல்வி |
| 22. | J.M.சஸான் | 113/11/PE/07 | உடற்கல்வி |
| 23. | A.A.M.பஸாஹீர் | 114/11/PE/08 | உடற்கல்வி |
| 24. | S.H.M.தாஹிர் | 116/11/PE/10 | உடற்கல்வி |
| 25. | M.H.M.றிஸான் | 122/11/PE/16 | உடற்கல்வி |
| 26. | M.I.M.சனூஸ் | 120/11/PE/20 | உடற்கல்வி |

## வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| 27. | M.N.A.மப்ராஸ் | 146/11/Com/20 | வர்த்தகம் |
| 28. | S.T.நப்லா | 152/11/Com/26 | வர்த்தகம் |
| 29. | M.F.நஸீபா | 156/11/Com/28 | வர்த்தகம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | : | A.C.A.நஸாத் |
| உபதலைவர் | : | A.M.இர்ஸாத் |
| செயலாளர் | : | W.M.அஸ்லம் |
| பொருளாளர் | : | A.R.யாஸிர் |
| பத்திராதிபர் | : | C.M.முஹம்மது ஸமீர் |

உறுப்பினர்கள் :

01. A.A.M.பஸாஹீர்
02. S.H.M.தாஹிர்
03. K.M.அக்ரம்
04. A.S.நியாஸ்
05. S.அஸ்ரா
06. A.H.பயாஸா
07. S.F.நப்லா
08. M.F.ஜெஸீலா
09. M.H.M.ரிஸான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Iம் வருட ஆசிரிய மாணவர்களின் விபரம்

# (2012- 2014)

| | | | |
|---|---|---|---|
| **ஆரம்பக்கல்வி** | | | |
| 01. | I.R.நதீரா | 104/12/PT/10 | ஆரம்பக்கல்வி |
| **விவசாயம்** | | | |
| 02. | K.M.ஸபியா | 61/12/AG/01 | விவசாயம் |
| 03. | M.M.N.முஸீனா | 62/12/AG/02 | விவசாயம் |
| 04. | M.L.H.M.நசீம் | 67/12/AG/07 | விவசாயம் |
| 05. | M.M.ஸாஜிதா | 69/12/AG/09 | விவசாயம் |
| 06. | M.H.M.நப்ரீஸ் | 71/12/AG/11 | விவசாயம் |
| 07. | M.R.F.இர்fபானா | 74/12/AG/14 | விவசாயம் |
| **விஞ்ஞானம்** | | | |
| 08. | M.S.F.சமீரா | 125/12/Sci/01 | விஞ்ஞானம் |
| 09. | M.F.ஹில்மியா | 127/12/Sci/03 | விஞ்ஞானம் |
| 10. | A.L.M.நளீர் | 128/12/Sci/04 | விஞ்ஞானம் |
| 11. | N.லரீபா | 129/12/Sci/05 | விஞ்ஞானம் |
| 12. | M.F.அBபுஹா | 131/12/Sci/07 | விஞ்ஞானம் |
| 13. | L.F.நுஸ்கியா | 132/12/Sci/08 | விஞ்ஞானம் |
| 14. | M.M.M.முஹ்ஸி | 133/12/Sci/09 | விஞ்ஞானம் |
| 15. | N.M.M.நிஸார் | 161/12/Sci/10 | விஞ்ஞானம் |
| 16. | I.M.சஹ்ரான் | 162/12/Sci/11 | விஞ்ஞானம் |
| 17. | S.F.சபீலா | 163/12/Sci/12 | விஞ்ஞானம் |
| 18. | A.F.முஸ்பிறா | 175/12/Sci/16 | விஞ்ஞானம் |
| **கணிதம்** | | | |
| 19. | A.H.F.ஹஸ்னா | 140/11/Mat/07 | கணிதம் |
| 20. | B.ஆஷிக் அஹம்மது | 141/11/Mat/08 | கணிதம் |
| **உடற்கல்வி** | | | |
| 21. | R.M.இர்பாத் | 47/12/PE/02 | உடற்கல்வி |
| 22. | R.நௌஷாத் | 48/12/PE/03 | உடற்கல்வி |
| 23. | N.M.fபாத்திஹ் | 51/12/PE/06 | உடற்கல்வி |
| 24. | M.I.M.றிபான் | 52/12/PE/07 | உடற்கல்வி |
| 25. | T.M.றிபாத் | 53/12/PE/08 | உடற்கல்வி |
| 26. | J.அஹம்மது ஜெஸீம் | 54/12/PE/09 | உடற்கல்வி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| 27. | M.R.F.மிஸ்கா | 01/12/Com/01 | வர்த்தகம் |
| 28. | F.A.F.பஸ்னா | 02/12/Com/12 | வர்த்தகம் |
| 29. | M.N.F.ஹதீஜா | 04/12/Com/12 | வர்த்தகம் |
| 30. | M.M.F.மிஸ்ரா | 05/12/Com/05 | வர்த்தகம் |
| 31. | R.M.பைஸல் | 07/12/Com/07 | வர்த்தகம் |
| 32. | M.B.F.பஸ்ஹானா | 08/12/Com/08 | வர்த்தகம் |
| 33. | M.A.சிறின் சுபானா | 09/12/Com/09 | வர்த்தகம் |
| 34. | H.F.ம$^{f}$பாஷா | 10/12/Com/10 | வர்த்தகம் |
| 35. | M.H.M.$^{B}$பிஸ்ரி | 11/12/Com/11 | வர்த்தகம் |
| 36. | M.S.அனீஸா | 12/12/Com/12 | வர்த்தகம் |
| 37. | A.சாஹிதா பானு | 13/12/Com/13 | வர்த்தகம் |
| 38. | S.றிஸ்லா | 15/12/Com/15 | வர்த்தகம் |
| 39. | M.I.F.சலீத்தா | 17/12/Com/17 | வர்த்தகம் |
| 40. | M.F.நிரூபா | 18/12/Com/18 | வர்த்தகம் |
| 41. | M.F.F.பிக்ரியா | 20/12/Com/20 | வர்த்தகம் |
| 42. | S.A.M.வஸீம் | 22/12/Com/22 | வர்த்தகம் |
| 43. | A.A.அஷ்ஹறா | 23/12/Com/23 | வர்த்தகம் |
| 44. | H.N.பர்ஸான் | 26/12/Com/26 | வர்த்தகம் |
| 45. | M.M.M.நுஸ்ஸாக் | 38/12/Com/38 | வர்த்தகம் |
| 46. | M.R.F.றக்ஷானா | 39/12/Com/39 | வர்த்தகம் |
| 47. | S.M.ஜரீத் | 41/12/Com/41 | வர்த்தகம் |
| 48. | M.A.F.நுஹறா | 43/12/Com/43 | வர்த்தகம் |
| 49. | A.F.சப்னாஸ் | 168/12/Com/168 | வர்த்தகம் |

## நிர்வாகக் குழு

தலைவர் : M.H.M.$^{B}$பிஸ்ரி

உபதலைவர் : N.M.M.நிஸார்

செயலாளர் : M.M.M.நுஸ்ஹாக்

பொருளாளர் : I.M.ஜெஸீம்

பத்திராதிபர் : N.M.$^{f}$பாதீஹ்

நிர்வாக உறுப்பினர்கள் :

01. S.A.M.வஸீம்
02. M.H.M.நப்ரீஸ்
03. M.M.M.முக்ஸி
04. M.N.F.கதீஜா
05. M.R.இர்$^{f}$பானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

**"அல்ஹம்துலில்லாஹ்" புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே.**

எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் முஸ்லிம் ஆசிரியப் பயிலுனர்கள் எடுத்திருக்கும் இந்த மலர் வெளியீடு ஒரு சிறந்த பணியாகும். பல்லின சமயத்தவர்கள் பயிலும் இக்கல்லூரியில் இஸ்லாத்தைப் பற்றியும், அதன் வாழ்க்கை முறைகள் பற்றியும் ஏனைய சமயத்தவர்கள் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரிகிறது.

மேலும் இந்நூல் வெளியீடானது ஆசிரிய மாணவர்களின் ஆக்கத் திறனையும், சமயப்பற்றையும் மென்மேலும் விருத்தி செய்கிறது. இவ்விதழுக்கு ஆசிச்செய்தி மற்றும் வாழ்த்துச்செய்தி வழங்கியவர்களுக்கும், இம்மலர் வெளியீட்டுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த எமது கல்லூரியின் பீடாதிபதி அவர்களுக்கும், உபபீடாதிபதிகளுக்கும், மன்றப்போசகருக்கும், விரிவுரையாளர் இணைப்பாளர்களுக்கும், ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் ஆக்கங்களைத் தந்த ஆசிரிய மாணவர்களுக்கும், மலர்க்குழுவுக்கும், இம்மலர் வெளியீட்டுக்கு உதவியவர்களுக்கும், அச்சிட்டு வெளியிட உதவிய அச்சகத்தினருக்கும் மற்றும் எல்லாவகையிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

''ஜஸாக்கல்லாஹு ஹைரன்'' அல்லாஹ் உங்களுக்கு அருள்பாலிப்பானாக.

ஆமீன்.


**W.முஹம்மது அஸ்லம்**
**செயலாளர்**
**மஜ்லிஸுல் இஸ்லாம்**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திசையும் எதிரொலிக்கும் எம்மார்க்கம் இஸ்லாத்தின்
மலர்ந்துவிடும் மலரும் மணங்கமழும் கலைநிகழ்வும்
வளமாக்க வாழ்த்துக்கள்.

# *Jareeth Hotel*








**No.99, H.P Road, Vavuniya.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Edinborough

# Edinborough Products (pvt) Ltd.



No.12, New Kolonnawa Road, Moragasmulla,
Rajagiriya, Sri Lanka.
T: +94 117 326 326, F: +94 114 617 655
Email: info@edinboroughfoods.com
web: www.edinboroughfoods.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MASTHAN TRADERS

## INLAND RAILSIDE DEPOT

Dealer : Ceylon Petroleum Corporation

No.15, Goodshed Road, Vavuniya. 024 2221123, 2221140



## TRANSPORT AGENT

(Vavuniya - Colombo)

110, Kandhasamy Kovil Road, Vavuniya. 024-2222738

140, Dam Street, Colombo -12. 011 2331926

## LANKA FUEL MART

*Ceypetco Dealer*

Kandy Road, Irattaperiyakulam, Vavuniya. 024 2224739

வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா. தொ.பே : 024 2223658.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org